தனக்குத் தானே
ஆப்பு
வைத்துக் கொண்ட
பஷீர்
பக்கம் 12

விலை
ரூபா 20
பக்கங்கள்
28

# உதயன்

34c - 27c
தெளிவான
காலநிலை

சுடர் 31 | கதிர் 212 | வள்ளுவர் ஆண்டு 2047 | ஆனி 11, சனிக்கிழமை 25.06.2016

## 11 லட்சம் வாக்குகளால் வெளியேறியது பிரிட்டன்

லண்டன், ஜூன் 25

ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரிட்டன் விலகுகிறது. நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பில் 51.6 சதவீத மக்கள் பிரிட்டன் விலக வேண்டுமென்று வாக்களித்தனர். 11 இலட்சத்துக்கு மேற்பட்ட வாக்குகள் வித்தியாசத்தில் வெளியேறும் முடிவு வந்துள்ளது.

இதனையடுத்து ஒக்ரோபர் மாதத்தில், தான் பதவி விலகுகிறார் என்று பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் அறிவித்தார்.

1951ஆம் ஆண்டு 6 நாடுகள் இணைந்து ஐரோப்பிய ஒன்றியத்தை ஆரம்பித்தன. 1973ஆம் ஆண்டு பிரிட்டன் அதில் இணைந்தது. 43 ஆண்டுகளின் பின்னர் அதிலிருந்து விலகியுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தில் 28 நாடுகள் அங்கத்துவம் வகிக்கின்றன. பிரிட்டன் தலைநகரான லண்டனே ஐரோப்பிய ஒன்றியத்தில் மிகப் பெரிய நகராக இருந்து வந்தது. இனி பிரான்ஸ் தலைநகர் பரிஸ் இந்த இடத்தைப் பிடிக்கும்.

ஐரோப்பிய ஒன்றியத்தில் மொத்தம் 24 மொழிகள் பயன்பாட்டிலுள்ளன. யூரோ உள்ளிட்ட 11நாணயங்கள் புழக்கத்தில் உள்ளன.

(விரிவு 1ஆம் பக்கத்தில்)

# பிரிட்டனின் முடிவால் இலங்கைக்கும் பாதிப்பு

## அதனைத் தவிர்க்க புதிய உடன்படிக்கை செய்யப்படுமென அரசு நேற்று அறிவிப்பு

“ஐரோப்பிய ஒன்றியத்துக்கான இலங்கையின் ஏற்றுமதியில் 40 சதவீதமானவை பிரிட்டனையே சார்ந்துள்ளன. ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரிட்டன் வெளியேறினால் வரிச்சலுகை கிடைப்பதில் சிக்கல் ஏற்படும். எனவேதான், ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரிட்டன் விலகக் கூடாது என்ற நிலைப்பாட்டில் இலங்கை அரசு இருந்தது.”

கொழும்பு, ஜூன் 25

ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரிட்டன் வெளியேறியதால் பொருளாதார ரீதியில் இலங்கையும் பாதிக்கப்பட உள்ளது. இதைத் தடுப்பதற்காக பிரிட்டனுடன் நேரடியான ஒப்பந்தங்கள் செய்யப்படும்.

இவ்வாறு நாடாளுமன்றத்தில் நேற்று அறிவித்தது வெளிவிவகார அமைச்சு.

பிரிட்டனின் முடிவு குறித்து பிரதி வெளிவிவகார அமைச்சரும், பொருளியல் நிபுணருமான கலாநிதி ஹர்ச டி சில்வா நாடாளுமன்றத்தில் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:

பக்.23

## தமிழ்க் கூட்டமைப்புடன் பேசியே சிறப்பு நீதிமன்று அமைப்போம்

### ஒஸ்லோவில் இப்படிக் கூறினார் அமைச்சர் மங்கள

ஒஸ்லோ, ஜூன் 25

“பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி தேவை. நாம் சிறப்பு நீதிமன்று அமைக்க வேண்டியுள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேசியே அதனை அமைப்போம்.”

இவ்வாறு வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர ஒஸ்லோவில் தெரிவித்தார். ஒஸ்லோவில் நிகழ்வு ஒன்றில் உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

“தேசிய நல்லிணக்கம் தொடர்பிலும் அரசு கவனம் செலுத்தி வருகின்றது. நல்லிணக்கமின்றி எம்மால் வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாது. அதனால்தான் ஜெனிவா தீர்மானத்துக்கு நாம் இணை அனுசரணை வழங்கினோம். இதனை நாம் எமக்காவே செய்கிறோம். உலக நாடுகளின் அழுத்தத்துக்காகச் செய்யவில்லை.

வடக்கில் இராணுவத்தை குறைக்கும் செயற்பாடு இன்னும் முடியவில்லை. 4 ஆயிரம் ஏக்கர் காணிகள் இராணுவ வசம் உள்ளன. 2018 ஆம் ஆண்டுக்குள் அவற்றை விடுவிக்க வேண்டும் என இராணுவத்துக்கு கூறியுள்ளோம்” - என்றார் அமைச்சர். (விரிவு 2 ஆம் பக்கம்) (உ-வ)

## ஸ்ரேலிங் பவுண்ஸின் பெறுமதியும் சடுதியாகச் சரிவு

கொழும்பு, ஜூன் 25

ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரிட்டனின் வெளியேற்றத்தால், அந்த நாட்டின் நாணயமான ஸ்ரேலிங் பவுண்ஸின் மதிப்பு கடந்த 30 ஆண்டுகளில் காணாத பெரும் வீழ்ச்சியைச் சந்தித்துள்ளது. இலங்கையிலும் இதன் தாக்கம் நேற்று எதிரொலித்தது.

பக்.24

## வீதி விடுவிப்பில் ராணுவம் செய்தது தகிடுதத்தம்



யாழ்ப்பாணம், ஜூன் 25

வலி.வடக்கில் தமது கட்டுப்பாட்டில் இருந்த வீதியை விடுவிப்பதில் இராணுவம் தகிடுதத்தம் செய்துவிட்டதாகக் குற்றச்சாட்டு எழுந்துள்ளது. மீளக்குடியமர்ந்த மக்களின் போக்குவரத்தை இலகுபடுத்த ஏற்கனவே இருந்த வீதியை விடுவிக்குமாறு கோரப்பட்டிருந்தது. ஆனால் தனியார் காணிகள் ஊடாகப் புதிய இணைப்பு வீதி ஒன்றை ஏற்படுத்தியுள்ள இராணுவத்தினர் அதனையே இன்று மக்கள் பாவனைக்கு விடுவிக்க உள்ளனர்.

வலி.வடக்கு இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்த சிறு பரப்புக்

பக்.24

## போலிப் பணம் ஒரு நாடகம் பெண் உட்பட மூவர் கைது

### நாணயத் தாள்கள் அச்சிட்ட இயந்திரமும் கைப்பற்றப்பட்டது

யாழ்ப்பாணம், ஜூன் 25

வங்கியில் பெற்ற பணத்தில் போலி நாணயத் தாள்கள் இருந் தன என்று நாடகமாடிய பெண்ணைத் தாம் கைது செய்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ். நகரிலுள்ள அச்சகம் ஒன் றில் 5 ஆயிரம் ரூபா நாணயத் தாளை வடிவமைத்து, அதனை டிஜிட்டல் பிரிண்டிங் நிறுவனம் ஒன்றில் பிரிண்ட் செய்து எடுத்த பெண், பின்னர் அவை வங்கியால் தரப்பட்ட பணம் என்று நாடகமாடினார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

மானிப்பாயிலுள்ள வங்கிக் கிளை ஒன்றில் நகை அடைவு வைத்துப் பெற்ற பணத்தில் போலி நாணயத் தாள்கள் இருந்தனவா என்று குற்றப் புலனாய்வுப் பொலிஸார் நேற்றுமுன்தினம் விசாரணை

பக்.24

## மல்லாவிச் சம்பவம்

## இளைஞன், சிறுமி இருவரும் கிளி. மருத்துவ மனையில்

கிளிநொச்சி, ஜூன் 25

மல்லாவிப் பகுதியில் சிறுமியுடன் தவறாக நடக்க முயன்றார் என குற்றஞ்சாட்டப்பட்ட இளைஞன் அந்தப் பகுதி மக்களால் நையப்புடைக்கப்பட்டார். அவர் காயங்களுடன் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அதேவேளை, சம்பவத்தில் பாதிக்கப்பட்ட சிறுமி எரிபொருளை அருந்திய நிலையில் அதே வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

சம்பவம்தொடர்பில்மேலும்தெரிய வருவது:

மல்லாவிப் பகுதியில் நேற்று முன்தினம் மாலையில் காட்டுப் பிரதேசத்தில் சிறுமியுடன் தவறாக நடக்க முயன்ற இளைஞன் ஒருவனை அந்தப் பகுதியால் சென்ற சிலர் அவதானித்தனர். அவனை பிடிக்க முற்பட்ட வேளையில் ஏற்பட்ட தர்க்கத்தில் குறித்த இளைஞன் தாக்கப்பட்டான்.

இதற்காக மல்லாவி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட இளைஞன், மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டான்.

அதன் பின்னர் தொடர்புடைய சிறுமி,

பக்.23

## தகவலறியும் சட்டம் நேற்று ஏகமனதாக நிறைவேறியது

### தகவலைத் தர மறுத்தால் 2 வருடங்கள் சிறையும் விதிக்கலாம்

கொழும்பு, ஜூன் 25

தகவல் அறியும் சட்ட வரைவு நாடாளுமன்றத்தில் நேற்று வாக்கெடுப்பின்றி திருத்தங்களுடன் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

பிரதான எதிர்க்கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, மக்கள் விடுதலை முன்னணி, மகிந்த ஆதரவு அணி ஆகியன திருத்தங்களை முன்வைத்திருந்தன. இவற்றில் பெரும்பாலான திருத்தங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. இதனால் வரைவு ஏகமனதாக நிறைவேறியது.

தகவல் அறியும் சட்ட வரைவானது, அமைச்சரவையின் அனுமதியுடன் கடந்த மார்ச் மாதம் 24ஆம் திகதி நாடாளுமன்றத்தில் ஊடகத்துறை அமைச்சரால் முன்வைக்கப்பட்டது.

பக்.24

## மைத்திரிக்கு எதிராக வழக்கு

கொழும்பு, ஜூன் 25

நாடாளுமன்ற உறுப்பினர்கள் சொகுசு வாகனங்களை பெற்றுக் கொள்வதற்கு, சுங்க வரி நீக்கப்பட்ட வாகன அனுமதிப் பத்திரங்களை வழங்குவதற்கு அரசு எடுத்துள்ள தீர்மானத்தை நீக்கக் கோரி உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கறிஞர் நாகானந்த கொடிதுவக்கு இந்த வழக்கைத் தாக்கல் செய்தார்.

பக்.24

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்க் கூட்டமைப்புடன் பேசியே விசேட நீதிமன்று அமைக்கப்படும்

## ஒஸ்லோவில் அமைச்சர் மங்கள தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 25

பாதிக்கப்பட்டோருக்கு நீதி தேவைப்படுகின்றது. இந்த விடயத்தில் நாங்கள் விசேட நீதிமன்றம் அமைக்க வேண்டியுள்ளது. சர்வதேச பங்களிப்புக் குறித்து கேள்வி எழுப்பப்படுகின்றது. பாதிக்கப்பட்டவர்களுடன் கலந்துரையாடி அரசு தீர்மானம் எடுக்கும். இந்த விசேட நீதிமன்றமானது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சு நடத்தப்பட்டே நிறுவப்படும்.

இவ்வாறு வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார். ஒஸ்லோவில் நடைபெற்ற கருத்தரங்கில் உரையாற்றும்போதே அமைச்சர் மங்கள சமரவீர இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

2015 ஆம் ஆண்டு ஜனவரி 15 ஆம் திகதி இலங்கையில் இடம்பெற்ற வரலாற்று முக்கியத்துவமான தேர்தலில் நாட்டில் நல்லாட்சி உருவாக்கப்பட்டது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் எதிர்க்கட்சித் தலைவராக நியமிக்கப்பட்டது முக்கிய விடயம்.

19ஆவது திருத்தத்தைக் கொண்டு வந்து ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைத்தோம். தற்போது நாடாளுமன்றம் அரசியல் நிர்ணய சபையாக மாற்றப்பட்டுள்ளது. புதிய அரசமைப்பு வரையப்பட்டு வருகின்றது.

தேசிய நல்லிணக்கம் தொடர்பிலும் அரசு கவனம் செலுத்தி வருகின்றது. நல்லிணக்கமின்றி எம்மால் வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாது. அதனால்தான் ஜெனிவா பிரேரணைக்கு நாம் இணை அனுசரணை வழங்கினோம்.

சர்வதேச அழுத்தத்துக்கு அடிபணிந்து நாம் பிரேரணைக்கு அனுசரணை வழங்கவில்லை. எமது நல்லிணக்க செயற்பாடுகளுக்காகவே நாம் அனுசரணை வழங்கினோம்.




மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஆராய உள்நாட்டுப் பொறிமுறை ஒன்றை தயாரித்து வருகின்றோம். தற்போது காணாமற்போனோர் குறித்து ஆராய்வதற்கான நிரந்தர அலுவலகம் ஒன்றை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் தென்னாபிரிக்காவுடன் பேச்சு நடத்தி வருகின்றோம்.

வடக்கில் இராணுவத்தைக் குறைக்கும் செயற்பாடு இன்னும் முடியவில்லை. தற்போது பொதுமக்களின் காணிகளை மீள்வழங்க ஆரம்பித்துள்ளோம். இந்த வாரம் கூட 700 ஏக்கர் காணிகளை விடுவிக்கவுள்ளோம். இன்னும் 4 ஆயிரம் ஏக்கர் காணி இராணுவம் வசம் உள்ளது. இவை தனியாரின் காணிகள். அவற்றை 2018ஆம் ஆண்டுக்குள் விடுவிக்க வேண்டும் என்று இராணுவத்துக்குக் கூறியுள்ளோம்.

அடுத்த வாரம் ஜெனிவாவுக்குச் சென்று இலங்கை சார்பில் அமர்வில் உரையாற்றவுள்ளேன். எமது நாட்டின் முன்னேற்ற நிலைமை குறித்து விளக்கமளிக்கவுள்ளேன். ஜெனிவா தீர்மானப் பரிந்துரைகளைப் பயன்படுத்துவதற்கு நாம் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துகின்றோம். இது சர்வதேசத்தின் அழுத்தத்தால் செய்யப்படுவதல்ல. மாறாக எமது நாட்டுக்காகச் செய்கின்றோம்.

எமது நாட்டையும் இராணுவத்தையும் மக்களையும் பாதுகாக்க ஜெனிவா தீர்மானப் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த வேண்டும். இந்தத் தன்னம்பிக்கையுடன் நாம் முன் செல்வதுடன் சவால்களை எதிர்கொள்வோம் - என்றார். (ற-5)

## ஆசிரியருக்கு பிணை மறுப்பு

சாவகச்சேரி, ஜூன் 25

மாணவனின் காதில் அறைந்து பாதிப்பை ஏற்படுத்தினார் என்று குற்றஞ்சாட்டப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்ட ஆசிரியரின் பிணை மனுவை நிராகரித்தது சாவகச்சேரி நீதிமன்று.

கடந்த 15ஆம் திகதி தென்மராட்சிப் பாடசாலை ஒன்றின் ஆசிரியர்தாக்கி மாணவனின் காதில் காயம் ஏற்பட்டது என்று கூறப்படுகின்றது. மாணவன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டான். குறித்த ஆசிரியர் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டார்.

ஆசிரியரைப் பிணையில் விடுவிக்குமாறு நேற்று சட்டத்தரணி ஊடாக மனுத்தாக்கல் செய்யப்பட்டது. அதை நீதிமன்று நிராகரித்தது. (ற-9)



பருத்தித்துறை புற்றளை மகாவித்தியாலயத்தின் நூற்றாண்டு விழா பாடசாலை அதிபர் தலைமையில் நேற்று ஆரம்பமானது. அதில் பிரதமவிருந்தினராக வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனும், சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண கல்வியமைச்சர் த.குருகுலராஜாவும் கலந்துகொண்டனர். நிர்வாக அலகு, கட்டடத் தொகுதி என்பனவும் பாடசாலையில் அமைக்கப்பட்ட திறந்தவெளி கலையரங்கும் முதலமைச்சரால் திறந்து வைக்கப்பட்டன. நிகழ்வில் பலர் கலந்துகொண்டனர். (ற-4,26,108)

## ஆமை கடத்தியவர் கைது



கிளிநொச்சி, ஜூன் 25

சட்டவிரோதமாக 6 ஆமைகளைக் கொண்டுசென்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைதுசெய்யப்பட்டார் என்று ஆனைவிழுந்தான் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் கிளிநொச்சி ஆனைவிழுந்தான், 10ஆம் கட்டைப் பகுதியில் நேற்றுமுன்தினம் நடந்தது.

இரகசியத் தகவலையடுத்துத் தேடுதலை மேற்கொண்டபோது ஆமைகள் மீட்கப்பட்டன. அவை உரப்பையில் இடப்பட்டிருந்தன" என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ற-21)

## சைக்கிள் திருடிய, வாங்கிய குற்றச்சாட்டில் இருவர் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 25

பருத்தித்துறையில் 3 சைக்கிள்களைத் திருடி விற்றார் என்ற குற்றச்சாட்டில் ஒருவரும், அவற்றை வாங்கினார் என்ற குற்றச்சாட்டில் ஒருவரும் கைதுசெய்யப்பட்டனர். 3 சைக்கிள்களும் மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

"சில நாள்களுக்கு முன்னர் பெண்கள் பயன்படுத்தும் 3 சைக்கிள்கள் திருடப்பட்டன என்று முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. புனித நகரைச் சேர்ந்த ஒருவர் பொலிஸாரின் சந்தேகப் பார்வையில் இருந்தார். அவரது வீட்டுக்குச் சென்றபோது அந்த நபர் வீட்டில் இருக்கவில்லை. நேற்று பருத்தித்துறையில் நின்றபோது அவரை விசாரணைக்கு உட்படுத்தினோம். அவர் குற்றத்தை ஒப்புக்கொண்டார். ஆத்தியடியைச் சேர்ந்த ஒருவருக்கு 3 சைக்கிள்களையும் விற்றுள்ளார்.

அவர் கூறிய இடத்திலிருந்து 3 சைக்கிள்கள் மீட்கப்பட்டன. அவற்றைக் கொள்வனவு செய்திருந்த நபரையும் கைது செய்தோம். அவர்கள் வேறுதிருட்டுக்களுடன் தொடர்புடையவர்களா என்ற சந்தேகத்தில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். அவர்களை நீதிவானிடம் முற்படுத்துவோம்" – என்று பொலிஸார் தெரிவித்தனர். (ற-4,26)

## காணாமற்போன குடும்பஸ்தர் 4 நாள்களின் பின் சடலமாக மீட்பு

வவுனியா, ஜூன் 25

வவுனியாவில் 3 நாள்களாகக் காணமற்போயிருந்த குடும்பஸ்தர் நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டார் என்று என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா திருநாவற்குளத்தைச் சேர்ந்த பாக்கியம் ஜஸ்ரின் (வயது 48) என்பவரே சடலமாக மீட்கப்பட்டார். இவர் நான்கு பிள்ளைகளின் தந்தையாவார்.

அவர் புகையிலைகுடில் ஒன்றில் 10 வருடங்களுக்கு மேலாக கூலிவேலை செய்கின்றார். கடந்த புதன்கிழமை தொழிலுக்குச் சென்றவர் வீடு திரும்பி வரவில்லை என்று வவுனியா பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது. பூந்தோட்டம் செல்லும் பிரதான வீதியில் வயலுக்கு தண்ணீர் செல்லும் மதகுக்குக் கீழ் அவர் சடலமாக மீட்கப்பட்டார்.

மேலதிக விசாரணைகள் நடைபெறுகின்றன என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ற-4)

தேசிய போசனை மாதம்
ஜூன் - 2016
மரக்கறி வகைகளும், பழங்களும் இதயத்தின் நண்பர்கள். அதிக இனிப்பு, அதிக உப்பு, அதிக எண்ணெய் பண்டங்கள் இதயத்தின் எதிரிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேற்று ஒருநாள் தாதியர் பணிப் புறக்கணிப்பு

யாழ்ப்பாணம், ஜுன் 25

யாழ்.போதனா வைத்தியசாலையில் சத்திர சிகிச்சைப் பிரிவுத் தாதியர் நேற்றுக் காலை தொடக்கம் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டிருந்தனர். எனினும் நேற்று மாலை தொடக்கம் போராட்டத்தைக் கைவிட்டுப் பணிக்குத் திரும்பியுள்ளதாக வைத்தியசாலையின் அரச தாதிய சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் சங்கம் தெரிவித்துள்ளதாவது:

சத்திர சிகிச்சைப் பிரிவுப் பொறுப்புத் தாதியர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. அது பற்றி விசாரணை மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில் குறித்த தாதி இடமாற்றம் செய்யப்பட்டிருந்தார். இடமாற்றத்தை எதிர்த்துத் நாம் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தோம். இந்த நிலையில் விசாரணை முடிந்த பின்னர் குறித்த தாதியை மீண்டும் சத்திர சிகிச்சைப் பிரிவில் பணியிலீடுபட நிர்வாகம் அனுமதி வழங்கியுள்ளது. அதனால் இன்று சனிக்கிழமை போராட்டம் எதுவுமின்றி தாதியர்கள் வழமைபோன்று பணியில் ஈடுபடுவர் என்று சங்கம் தெரிவித்துள்ளது.

ஆனால், தாதி மீதான குற்றச்சாட்டுத் தொடர்பில் குழு அமைத்து விசாரணை முன்னெடுக்கப்பட்டது. விசாரணை முடிவை குழு நேற்றுக் கையளித்தது. அதன்படி குறித்த தாதி தவறிழைத்துள்ளார் என்பது விசாரணை மூலமாகத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. பொதுவாகவே ஒருவர் மீது குற்றச்சாட்டுச் சுமத்தப்பட்டிருக்கும் நிலையில், அவரை இடமாற்றம் செய்து விசாரணை மேற்கொள்வது வழமை. ஆனால் குறித்த குற்றச்சாட்டு விசாரணை நிறைவடைய முன்னரே தாதியர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டமை தவறு. 2 பேருக்கு இடைப்பட்ட பிரச்சினையை தாதிய சங்கம் அவசரப்பட்டுவிட்டது.

எனினும் விசாரணைக் குழுவின் அறிக்கையின்படி, குறித்த தாதி, மருத்துவருடன் முறையற்ற விதத்தில் முரண்பட்டுள்ளார். அது அவமதிப்பை ஏற்படுத்தும் விதமாக அமைந்துள்ளது. அதனால் தாதி மீது குற்றம் காணப்பட்டுள்ளது. அந்தத் தாதி எச்சரிக்கை செய்யப்பட்டே சத்திரசிகிச்சைப் பிரிவுக்குள் பணியில் ஈடுபட விட்டுள்ளோம்.

ஆனால் இனிமேல் இத்தகைய செயற்பாடுகள் இடம்பெறாதவாறு நிர்வாக ரீதியில் வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன. நிர்வாக நடவடிக்கை கடுமையாக்கப்படும்-என்று வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார். (வ-4)




# பட்டப்பகலில் வீடுடைத்து 10 பவுண் நகைகள் திருட்டு

முல்லைத்தீவு, ஜுன் 25

முல்லைத்தீவு, தண்ணீரூற்றில் பட்டப்பகலில் வீட்டில் யாருமில்லாத நேரம் கதவு உடைத்து திருடப்பட்டுள்ளது. சுமார் 10 பவுண் நகைகளும் 40 ஆயிரம் ரூபா பணமும் திருட்டுப்போயுள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தத் திருட்டு முள்ளியவளை தண்ணீரூற்றில், ஊற்றங்கரை வீதியிலுள்ள வீட்டில் நேற்று இடம்பெற்றுள்ளது.

நான் கடை நடத்தி வருகிறேன். மனைவி ஆசிரியை. வீட்டு மேல்மாடியில் ஆசிரியர்கள் தங்கியிருக்கின்றனர். பிள்ளைகள் கல்வி கற்கின்றனர். நேற்று அனைவரும் பாடசாலைக்குச் சென்றுவிட்டனர். பாடசாலை சென்ற மகன் வீடு திரும்பியபோது, வீட்டுக் கதவு உடைக்கப்பட்டுள்ளதனைக் கண்டு தகவல் வழங்கினார். அதனையடுத்தே நான் அங்கு சென்றேன்.

வீட்டில் பெட்டிகள் அலுமாரிகள் கிளறப்பட்டுக் காணப்பட்டன. பொருள்கள் சிதறிக் கிடந்தன. பணம், நகைகளைத் தேடிய போதும் கிடைக்கவில்லை. முள்ளியவளைப் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தினோம். அவர்கள் வந்து விசாரணை மேற்கொண்டனர் - இவ்வாறு வீட்டு உரிமையாளர் தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் எவரும் கைது செய்யப்படவில்லை. விசாரணை மேற்கொள்ளப்படுகிறது என்று பொலிஸார் தெரிவித்தனர். (வ-4,102)




# தவறான முடிவெடுத்தார் மாணவி

யாழ்ப்பாணம், ஜுன் 25

வலிகாமம் கல்வி வலயத்திலுள்ள பாடசாலை ஒன்றில் கற்கும் மாணவி உயிர் துறக்க முற்பட்டுள்ளார். பின்னர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று உறவினர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாடசாலையில் கற்கும் 2 மாணவர்கள் தொடர்பில் ஆசிரியரிடம் குறித்த மாணவி முறையிட்டுள்ளார். அதனைத் தொடர்ந்து குறித்த மாணவர்கள் தகாத வார்த்தைகளைப் பிரயோகித்து மாணவியை ஏசியுள்ளதாகக் கூறப்படுகிறது. இதனால் மாணவி மன உளைச்சலுக்கு உள்ளாகி அதிகளவு மாத்திரைகளை உட்கொண்ட நிலையில் பாடசாலையில் மாணவி சோர்வடைந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

இதனால் பாடசாலையிலிருந்து அவரைக் கூட்டிச் செல்லுமாறு தமக்கு அறிவிக்கப்பட்டதாக பெற்றோரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனால் நாம் பாடசாலைக்குச் சென்று மகளை அழைத்து வந்தோம். அப்போதே அவர் நடந்தவற்றைத் தெரிவித்தார். அதனால் மகளை வைத்தியசாலையில் சேர்த்துள்ளோம் என பெற்றோர் தெரிவித்தனர்.

இது தொடர்பில் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளருக்குத் தொடர்பை ஏற்படுத்தியபோதும் பதில்பெறமுடியவில்லை. (வ-4,106)

# மின் ஒழுக்கினால் ஏ.ரி.எம். இயந்திரத்தில் தீ

வவுனியா, ஜுன் 25

வவுனியா புகையிரத நிலைய வீதியிலிருக்கும் தனியார் வங்கியில் ஏ.ரி.எம் இயந்திரப்பகுதியில் நேற்றிரவு 7 மணியளவில் மின் ஒழுக்கினால் தீ விபத்து ஏற்பட்டுள்ளது. எனினும் பின்னர் தீ கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏ.ரி.எம். இயந்திரப்பகுதியில் அதிகமாக புகை ஏற்பட்டு, துர்நாற்றம் வீசுவதனை அவதானித்த பாதுகாப்பு உத்தியோகத்தர், வங்கியில் பாதுகாப்புக்கு பொருத்தப்பட்ட அபாய வாளியினையும் வாயு கொள்கலனின் உதவியு டன் ஏற்பட்ட தீ பரவலை அணைத்துள்ளார். அத் துடன் மின்சார இணைப்பினையும் துண்டித்து நிகழவிருந்த பெரிய இடரைத் தவிர்த்துள்ளார்.

இதனையடுத்து குறித்த வங்கியின் அதிகாரிகளுக்கு தகவல் வழங்கப்பட்டது. அங்கு விரைந்த அவர்கள், பொலிஸாருக்கு சம்பவம் தொடர்பில் அறிவித்தனர். (வ-4)

# யோகா தின விழா

வடக்கு மாகாண யோகா ஆர்வலர்களும் புலம்பெயர் தமிழ் மக்களும் இணைந்து நடாத்தும் சர்வதேச இரண்டாவது யோகா தின விழா நிகழ்வுகள் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு மிருசுவில் படித்த மகளிர் திட்ட ஸ்ரீ ஞான துர்க்கை அம்மன் ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

யாழ்.யோகா உலக இயக்குநர் எஸ்.உமாசுதன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வுகளில், பிரதம விருந்தினராக யாழ். போதனா வைத்திய சாலையின் மருத்துவப் பதிவாளர் ஜெ.ஜெயலன் கலந்து கொள் வார். யாழ் யோகா நிறுவன சிரேஷ்ட ஆலோசகர் நா.நவராஜின் 'உடம்பை வளர்க்கும் உபாயம்' எனும் தலைப்பில் விசேட உரை நிகழ்வும் இடம்பெறும். (ற-ஜ-ரி2)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பூரில் அனல் மின் நிலையம் அமைப்பதை கண்டித்து இன்று வவுனியாவில் கவனவீர்ப்பு

வவுனியா, ஜூன் 25

திருகோணமலை மக்களின் காணியை அபகரித்து சம்பூரில் அனல் மின் நிலையம் அமைப்பதைக் கண்டித்து வவுனியாவில் இன்று கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்படவுள்ளது.

இவ்வாறு வவுனியா சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு தெரிவித்தது.

வவுனியா பஸ் நிலையம் முன்பாக முற்பகல் 10 மணிக்கு போராட்டம் நடத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அந்த அமைப்பு அனுப்பியுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டதாவது:

இந்திய நிறுவனம் ஒன்றின் இலாபத்துக்காக சம்பூர் மக்களின் பூர்வீக நிலமும் வாழ்வாதாரமும் பறிக்கப்பட்டுள்ளது. இங்கு நிலக்கரி மூலம் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படப்போகின்றன. அங்கு வாழ்ந்து வரும் விவசாயிகள், தொழிலாளர்கள், மீனவர்கள், பழங்குடிகள் தங்களுடைய வாழ்வாதாரத்தை இழந்துள்ளனர்.

நிலக்கரி அனல் மின்நிலையம் அமைக்கப்படும் பட்சத்தில் பெரிய சூழல் பாதிப்பை திருகோணமலை எதிர்நோக்கும். நிலக்கரியிலிருந்து கழிவாக வரும் சாம்பல் கழிவுகளும், அதிகூடிய காபனீரொட்சைட்டும், சுவாச நோய்களை உண்டாக்கும்நிலைமை தோன்றும். திருகோணமலை உட்பட வடக்கு - கிழக்குப் பகுதிகள் அதனைச் சுற்றியுள்ள ஏனைய இடங்கள் கடும் வெப்பச் சூழலாக மாறிவிடக்கூடிய அபாயமும் உண்டு.

மின் நிலையத்தைச் சுற்றியுள்ள 5 கிலோ மீற்றர் தூரத்தில் மக்கள் தங்களுடைய வாழ்வாதார நடவடிக்கைகளை அப்புறப்படுத்திக்கொள்ள வேண்டிய உடனடித் தேவை உருவாகும்.

இந்த 5 கிலோ மீற்றருக்குள் 5 ஆயிரம் குடும்பங்கள் வசித்து வருகின்றார்கள். இவர்கள் எங்கே இடம்பெயர்வது என்பது மிகப்பெரிய பிரச்சினையாக மாறி நிற்கும். சம்பூர் மீனவர்களுடைய மீன்பிடித்தளங்கள் இழக்கப்பட்டு அவர்களுடைய மீன்பிடி இறங்கு துறைகளும் பறிக்கப்பட்டு விடும். 505 ஏக்கர் நிலப்பரப்புக்குள் 110 ஏக்கர் வயல் காணிகளும், 8 குளங்களும், 41 குடியிருப்புக் காணிகளும் அடங்குகின்றன. அதனைச் சுற்றியுள்ள மக்கள் உடனே அதீத வெப்பம் காரணமாக வெளியேற வேண்டிய தேவையும் ஏற்படும்.

உலக நாடுகள் அனைத்தும் உலகம் வெப்ப மயமாதலைத் தடுக்க நிலக்கரி அனல்மின் நிலையங்களை தொடர்ந்து மூடிவரும் வேளையில், திருகோணமலையில் அதை நிறுவுவதற்கு அனுமதிப்பது ஏன்?. பல்தேசியக் கம்பனிகளின் இலாபத்துக்காக மக்களின் சுற்றுச்சூழலையும் இருப்பிடத்தையும் வாழ்வாதாரத்தையும் நாசப்படுத்த முனைவது ஏன்?.

நிலப்பறிப்பை கைவிடக்கோரி தொடர்ந்து சம்பூர் மக்கள் போராடி வருகின்றனர். அதற்கு ஆதரவாக மூதூர் முஸ்லிம் மக்களும், தோப்பூர் முஸ்லிம் மக்களும் குரல்கொடுத்து போராடியிருக்கின்றனர். எங்களுடைய அயல் மாவட்டமான திருகோணமலை மக்களின் காணி அபகரிப்பைக் கண்டித்து பசுமைத் திருமலை அமைப்புடன், சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பும் ஏனைய பொது அமைப்புக்களும் ஒன்றிணைந்து இந்தப் போராட்டத்தை மேற்கொள்ள உள்ளோம்.

இந்தக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் பொது அமைப்புக்கள், பெண்கள் அமைப்புக்கள், அரசியற்கட்சிகள், மாணவர்கள், ஆசிரியர்கள், தொழிலாளர்கள், விவசாயிகள், அனைவரையும் அணிதிரளுமாறு வேண்டி நிற்கின்றோம்- என்றுள்ளது. (ற-ஐ-21)

**பணியாளர்கள் தேவை**

யாழ்.நகரில் பிரபல கடை ஒன்றுக்குப் பொதி செய்யும் பெண் பணியாளர் தேவை. மற்றும் விற்பனையாளர் ஆண் பணியாளர்கள் தேவை.

18-30 வயது வரையான பெண்கள்
18- 60 வயது வரையான ஆண்கள்

தொடர்புகளுக்கான தொலைபேசி இலக்கம்:-
077 516 4928

**வேலைவாய்ப்பு**

* சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர் (Marketing Officer) 10 வருட அனுபவம்

குறித்த துறையில் அனுபவம் மற்றும் 35 வயதுக்கு மேற்பட்ட தகைமையுடையோர் முழு விவரங்களும் அடங்கிய விண்ணப்பத்தை 30.06.2016 ஆம் திகதிக்கு முன்பாக கிடைக்கக் கூடியதாக பின்வரும் விலாசத்துக்கு அனுப்பி வைக்கவும்.

மனிதவள முகாமையாளர்,
இல.45, காட்டுக்கந்தோர் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
eurovil@sltnet.lk

**உடனடி வேலைவாய்ப்பு**

யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் தனியார் நிறுவனம் ஒன்றுக்கு விற்பனைப் பிரதிநிதிகள் மற்றும் தொழிற்சாலை ஊழியர்கள் தேவை. சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும். வயது எல்லை 20 தொடக்கம் 28 வரை. விற்பனைப் பிரதிநிதிகளுக்கு மோட்டார் வாகன அனுமதிப்பத்திரம் தேவை.

தொடர்புகளுக்கு:
071 454 0968, 071 864 9221
நேரம் :- 9.00 தொடக்கம் 5.00 வரை

**துன்பம் தீர்க்கும் கலியுக தெய்வம் நாகபூஷணி அம்பாள்**



வெள்ளவத்தையில் பெர்னாந்து வீதியில் அமைந்துள்ள நாகபூசணி அம்மன் ஆலயத்தில் அருள்வாக்கு கூறும் ஞானகணேஸ்வரி அம்மன் அவர்கள் சனிக்கிழமையில் இருந்து திங்கட்கிழமை வரை (25,26,27 ) ஆம் திகதிகளில் ஞானவைரவர் ஆலயம் கலாசாலை வீதி, 2 ஆவது ஒழுங்கை, திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணத்தில் அருள்வாக்குக் கூறுவார்.

★ ஞாயிற்றுக்கிழமை அன்னதானம் வழங்கப்படும்.

பூசை நேரம்: முற்பகல் 10.30 - 12.30 மணிவரை
மாலை 5.30 - 6.30 மணிவரை

குறிப்பு: கலாசார உடையுடன் வருகை தரவும்.
தொடர்பு: 021 221 9127, 077 801 2226 (J.1597) (13.18)

**தவறிவிட்டது**

தாவடி வடக்கு, கொக்குவில் ஆசாரிவேலை வதிவிட மாகக் கொண்ட இரசேந்திரம் நிர்மலன் ஆகிய எனது சாரதி அனுமதிப்பத்திரம், தேசிய அடையாள அட்டை (830205225 V) மற்றும் சில ஆவணங்களுடன் பணப்பை கடந்த 21.06.2016 செவ்வாய்க்கிழமை தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தில் வைத்து காணாமல் போய்விட்டது. கண்டறிந்தவர்கள் தயவு செய்து தொடர்பு கொள்ளுங்கள். சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு: 075 729 0652

**வைரஸ் பிறிண்டேர்ஸ்**
கே.கே.எஸ் வீதி, இணுவில்.

அச்சுத்துறையில் அனுபவமுள்ளவர்களுக்கு பின்வரும் பதவிகளுக்கான வெற்றிடங்கள் உள்ளன.

+ ரைப்பிங் (Computer Typing -Tamil)
+ கிரபிக்ஸ் டிசைனர் (CorelDraw /Photoshop)

அனுபவமுள்ளவர்கள் நேரில் சமூகம் தரவும்
தொடர்பு : 021 224 1815

**உடனடியாகத் தேவை**

எமது தனியார் காரியாலயத்துக்கு கணினி அறிவுடைய பெண் Accounts Clerk தேவை. 21 வயதிலிருந்து 40 வயது வரை. சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும். யாழ். நகரிலிருந்து 5km சுற்றாடலில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

நேர்முகத் தேர்வு - 29.06.2016
முற்பகல் 10.30 மணிக்கு
201/7, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் நடைபெறும்.

**ST.JOHN'S COLLEGE, JAFFNA**
**ANNUAL PRIZE GIVING - 2016**

Saturday 25th June 2016
at 10.00 am

Chief Guest

The Rt.Rev.Dr.Justin Bernard Gnanapragasam,
B.Th.(Poona, India), M.A. in Ecumenical Theology (University of Hull, England),
Ph.D.(Education) (University of Southampton, England)
Bishop of Jaffna

Chairman

Ven S.J.Jeyaveerasingan
Archdeacon of Jaffna & Manager of the College

Parents, old boys & well - wishers are cordially invited

Principal, Staff & Students

**Walk in Interview**

**Post 1: English Lecturer -** Female (Full Time)
Age :- 25 - 35
Qualification :- **Degree / HNDE** (5years experience in Relevant Field)

**Post II: Office Boy -**
Qualification :- O/L (below)
Age :- 18 - 30

Date :- 25.06.2016
Time :- Between 9.30 am and 4.00 pm

Venue :- BCHS
No.15, Sirambiyadi lane off Stanly road, above Sathosa. S.M.
Hot line :- 021 222 4550

**JAFFNA COLLEGE INSTITUTE OF TECHNOLOGY**
Vaddukoddai, Jaffna, Sri Lanka.

**Computer Certificate Courses - (Part time - 3/4 months)**
- Microsoft Office (Word, Excel, Access & Power Point)
- Computer Graphic Designer (PageMaker, Photoshop & CorelDRAW)
- Web Designing

**Craft Certificate Courses -** தமிழ்மொழிமூலம்-6 மாதங்கள்-முழுநேரம்
- மின் இணைப்பும் நிர்மாணமும் - Electrical Wiring
- குளிரூட்டுதல் பயிற்சி நெறி - Refrigeration & Air-Conditioning Mechanic
- லேத் வெல்டிங் பிற்றிங் பயிற்சி நெறி - Machineshop Practice
- இலத்திரனியல் சாதனங்கள் திருத்துதல் - Radio,TV & Electronic Servicing
- மோட்டார் வாகனம் திருத்துதல் - Motorcycle Mechanic
- அலுமினியம் பொருத்துதலும் இணைத்தலும்- Aluminum Fitting & Fabrication

A training Institute registered with the Tertiary and Vocational Education Commission (TVEC) under P25/0014

மேற்குறிப்பிட்ட கற்கை நெறிகள் July 2016 முதல் கிழமை ஆரம்பமாகின்றன
தொடர்புகளுக்கு - The Director -JCIT 0212250975/0213213139

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருத்தாடல் களம்

யாழ்ப்பாணம், ஜூன் 25
வடமாகாண மூத்த பள்ளிக் கல்வியாளர் ஒன்றியம் நடத்தும் 'இளைய தலைமுறையினரின் ஒழுக்க விழுமிய மேம்பாட்டுக்கு யாது செய்வோம்' என்ற தலைப்பிலான சமூக மேம்பாட்டுக்கான கருத் தாடல் கள நிகழ்வு இன்று சனிக் கிழமை மாலை 5 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நடைபெறுகிறது.
முன்னாள் மாகாணக் கல்விப் பணிப்பாளர் மற்றும் வட மாகாண மூத்த பள்ளிக் கல்வியாளர் ஒன்றியத் தலைவர் ப.விக்னேஸ்வரன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வுகளில் சமகால கள நிலமை தொடர்பான விடய முன்வைப்புக்களும், துறைசார் வல்லுநர்களின் மேம்பாட்டுக் கருத்துரைகளும் இடம்பெறவுள்ளன. (ற-ஜ-ரி2)

# நினைவுப் பகிர்வும் நூல் அறிமுகமும்

யாழ்ப்பாணம், ஜூன் 25
பொதுவுடைமை சமூகப் போராளியாக வாழ்ந்து மறைந்த க.தங்கவடிவேல் ஆசிரியரின், முதலாம் ஆண்டு நினைவுப் பகிர்வும், தங்கம் நினைவு நூல் அறிமுகமும் நாளை ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கொக்குவிலில் உள்ள கவிஞர் இ.முருகையன் கேட்போர் கூடத்தில் நடைபெறும். (ற-ஜ-ரி4)

# தரம் ஐந்து முன்னோடிப் பரீட்சையை நாடு முழுவதும் நடத்தத் திட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 25
மலையகக் கல்வி அபிவிருத்தி மன்றத்தால், மத்திய – ஊவா – சப்பிரகமுவ மாகாணங்களில் நடத்தப்படும் தரம் – 5 புலமைப் பரிசில் முன்னோடிப் பரீட்சையை இந்த ஆண்டு நாடு முழுவதும் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.
வடக்கு மாகாணத்தில் இந்தப் பரீட்சையை நடத்த விரும்பும் அதிபர்கள், மலையக கல்வி அபிவிருத்தி மன்றத்துடன் தொடர்பு கொள்ள முடியும் என்று அதன் தலைவர் முத்துக்கண்ணு சிவகுமார் தெரிவித்தார்.
மலையக கல்வி அபிவிருத்தி மன்றத்தால் வருடம் தோறும் தரம் – 5 புலமைப் பரிசில் முன்னோடிப் பரீட்சை நடத்தப்பட்டு வருகின்றது. இந்த ஆண்டு ஜூலை மாதம் 9ஆம் திகதி இதனை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.
இதற்குப் பாடசாலை அதிபர்கள் ஊடாக உறுதிப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை அனுப்பும் அனைத்து தமிழ் பாடசாலைகளுக்கும், குறித்த நாளில் பரீட்சை நடத்தப்படும்
விண்ணப்பிக்கும் பாடசாலைகள் தங்களது பாடசாலைக் கடிதத் தலைப்பில் மாணவர் தொகை மற்றும் பாடசாலை விலாசம், அதிபர், பொறுப்பாசிரியர் தொலைபேசி இலக்கங்கள் என்பவற்றை தெளிவாகக் குறிப்பிட்டு ஜூன் 30ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பவேண்டும்.
மலையகக் கல்வி அபிவிருத்தி மன்றம், இல 189, 3 ஆவது மாடி, செட்டியார் தெரு, கொழும்பு - 11 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்க வேண்டும்.
கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் தரம் - 5 அறிவொளி முன்னோடிப் பரீட்சைக்கான விண்ணப்பம் 2016 எனக் குறிப்பிடல்வேண்டும்.
மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு 0112424886, 2444339 மற்றும் 0771644808 என்ற இலக்கங்களுடன் தொடர்பு கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-ஜ-5)

# அலங்கார உற்சவம்

யாழ்ப்பாணம், ஜூன் 25
கோண்டாவில் ஸ்ரீ சாமுண்டா தேவி சமேத ஞானவைரவர் ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவம் இன்று சனிக் கிழமை தொடக்கம் எதிர் வரும் ஜூலை மாதம் 3ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. (ற-ஜ-ரி4)

\+ + +

யாழ்ப்பாணம், ஜூன் 25
வண்ணார் பண்ணை அங்கு சபாசப் (கீரிப்) பிள்ளையார் ஆலய அலங்கார உற்சவம் நேற்று ஆரம்பமானது. தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும் உற்சவ காலத் தில் தினமும் மாலை 6.30 மணிக்கு சமயச் சொற் பொழிவு இடம் பெறும். (ற-ஜ-ரி4)

# குழமுனை கிராமத் தேவைகள் படிப்படியாக தீர்க்கப்படுகின்றன

## வடக்கு உறுப்பினர் ரவிகரன் தெரிவிப்பு

முல்லைத்தீவு, ஜூன் 25
முல்லைத்தீவு குமுழமுனை கிராமத்துக்கான தேவைகள் படிப்படியாக நிறைவேற்றப்பட்டு வருகின்றன.
இவ்வாறு வடக்கு மாகாண சபை உறுப்பினர் து. ரவிகரன் தெரிவித்தார். மாகாண சபையின் 58 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்படும் குமுழமுனை மகா வித்தியாலயத்தின் மாடிக் கட்டடம் மற்றும் ஆசிரியர் விடுதிகளை அவர் பார்வையிட்டார். மாணவர்கள், பெற்றோருடன் கலந்துரையாடினார்.
இந்த ஆண்டுக்கான ஒதுக்கீடுகளில் சுமார் 58 மில்லியனுக்கு மேற்பட்ட நிதி இந்தக் கட்டுமானப் பணிகளுக்காக ஒதுக்கப்பட்டது. பின்தங்கிய இந்தக் கிராமத்தின் பல தேவைகள் படிப்படியாகத் தீர்க்கப் பட்டு வருகின்றன. - என்று அவர் அங்கு தெரிவித்தார். (ற-ஜ-21)

60 ஆவது பிறந்தநாள் வாழ்த்து
கணபதிப்பிள்ளை - சிவநாதன்
(வேலணை கிழக்கு, 2 ஆம் வட்டாரம்)
அப்பா நீங்கள்
பெற்றோர்க்கு அருமை மகனாய்
- அன்பை வழங்கி
மனைவிக்கு வானளவு பாசத்தை வழங்கி
பிள்ளைகளுக்கு பாற்கடல் போன்ற
- அறிவை வழங்கி
உறவினர்க்கு இமயமாய் துணை நிற்கின்ற
சைவத்தின் காவலரான எமது குடும்பத்தின்
- காவலரே
நீங்கள் இன்று போல் என்றும் மகிழ்வுடன் நீடூழி
வாழ்க, வாழ்க என வாழ்த்துகின்றோம்.


S.டிலூஜன் (மகன்)
வவுனியா. (J 2396) (13.18)
வாழ்த்துபவர்கள்
பெற்றோர், மனைவி, பிள்ளைகள்.

மன்னார் - வெள்ளாங்குளம் - கணேசபுரம்
ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய நூதன
பிரதிஷ்டா மஹாகும்பாபிஷேக விஞ்ஞாபனம்

கருமாரம்பம் -
22.06.2016 புதன்கிழமை
ஆரம்பமாகியுள்ளது
எண்ணெய்க்காப்பு -
இன்று (25.06.2016) சனிக்கிழமை
கும்பாபிஷேகம் -
நாளை (26.06.2016)
ஞாயிற்றுக்கிழமை
விநாயகப் பெருமான் அடியார்களே!
நிகழும் மங்கலகரமான துர்முகி வருஷம் ஆனிமாதம் (12ஆம் நாள்) ஞாயிற்றுக்கிழமை 26.06.2016 ஷஷ்டி திதியும் சதயம் நட்ஷத்திரமும் சித்தயோகமும் சேர்ந்த காலை 6.30 மணி முதல் 7.15 மணிவரை உள்ள மிதுன லக்கின சுபவேளையில் வெள்ளாங்குளம், கணேசபுரத்தில் அருள் பாலித்துக் கொண்டிருக்கும் ஓங்கார சொரூபரான ஸ்ரீ கற்பக விநாயகப் பெருமானுக்கு மஹாகும்பாபிஷேகம் நடைபெற திருவருள் கூடியுள்ளது. அத்தருணம் அடியார்கள் அனைவரும் கும்பாபிஷேகத்தில் கலந்து கொண்டு எல்லாம் வல்ல முழு முதற் கடவுளாம் ஸ்ரீ கற்பக விநாயகரின் திருவருளைப் பெற்றுய்யுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.
சிவாச்சாரியார்கள் பலர் நிகழ்வுகளில் கலந்துகொள்வர்.
26.06.2016 ஞாயிற்றுக்கிழமை இரவு நிகழ்வாக -
முழங்காவில் ரமேஸ் அவர்களின் நெறியாள்கையில் இராக சுருதி இசைக் குழுவினரின் இராஜ இராகங்கள். நம் ஈழமணித் திரு நாட்டின் தலைசிறந்த பாடகர்களின் ஜெயா சுகுமார் அவர்களுடன் சக்தி சுப்பர் ஸ்ரார் சுலக்ஷன், பாடகர் ரெயிஸ், பானு. நம் ஈழமணி நாட்டின் அறிவிப்பாளர் திருமாறன் அவர்கள் இணைந்து வழங்கும் இசைச் சங்கமம் இடம்பெறும்.
ஆலய நிர்வாகி, ஸ்தாபகர்,
திரு.சரவணமுத்து, திரு. ஸ்ரீராஜேஸ்வரன், ஆலய நிர்மாண
வஹி பாகம் திரு.இ.குபேந்திரன் (ஆகிரன்)

பாராட்டி வாழ்த்துகின்றோம்
யா/ உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி
ஆசிரியர்கள்

A.ஜேம்ஸ்மேசன்

A.பகீரதன்

N.நந்தன்

P.ஜெயகாந்தன்

R.சுதர்சன்

S.லிங்கநாதன்
அதிபர் போட்டிப் பரீட்சையில் சித்திபெற்று
இலங்கை அதிபர் சேவை III இல் இணைத்துக்
கொள்ளப்பட்டதையிட்டு எமது கல்லூரிச் சமூகம்
பெருமையடைவதோடு அறுவரையும் வாழ்த்துவதில்
பேருவகை அடைகின்றோம்.
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
ஊழியர்கள்.
யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி, வல்வெட்டித்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

**சொக்கலிங்கம் விஜயராஜா**
(ராஜன்/ சொக்கன் / டானியல்)



பிறப்பு
07.02.1960

இறப்பு
11.07.2015

முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி நிகழ்வு (28.06.2016) ஆம் நாள் செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் இடம் பெறும். இந் நிகழ்வில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் கலந்து கொண்டு அவரது ஆத்மசாந்திக்காக பிரார்த்திப்பதுடன் இடம் பெறும் மதியபோசன நிகழ்விலும் எம்முடன் இணைந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

" ஆண்டு ஒன்று ஆயினும் ஆறாத்துயருடனும்
நீங்காத நினைவுடனும் வாழும்........ "

ஐயனார் வீதி, பருத்தித்துறை.
021 226 4403

தாயார்
சொக்கலிங்கம் மகேஸ்வரி

## பத்தாம் ஆண்டு நினைவஞ்சலி

**சிங்கராசா அர்ஜன்**



பிறப்பு 10.06.1990 இறப்பு 15.07.2006
திதி: பஞ்சமி [25.06.2016]

பஞ்சபாண்டவராய் பிறந்து
பாதியிலே சென்றாயோ
பதினாறு ஆண்டுகள் வாழ்ந்தது
போதுமென்று பள்ளி செல்லும்
வயதிலே போனாயோ ? பத்தாண்டென்ன பலநூறு
ஆண்டுகள் சென்றாலும் மாறாது உன் நினைவு

கைதடி மேற்கு,
கைதடி.

குடும்பத்தினர்.

## ஹைஏஸ் வான் மோதி 3 மாணவர்கள் படுகாயம்

கிளிநொச்சி, ஜூன் 25

கிளிநொச்சிப் பகுதியில் தனியார் கல்வி நிலையத்துக்குச் சென்று வீடு திரும்பிக் கொண்டிருந்த மாணவர்கள் மீது ஹைஏஸ் வாகனம் மோதியது. அதில் 3 மாணவர்கள் படுகாயமடைந்தனர். அவர்கள் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

விபத்து கிளிநொச்சி ஏ-9 வீதியில், 55 ஆம் கட்டைப் பகுதியில் நேற்றுமுன்தினம் நடந்தது. கிளிநொச்சி மலையாள புரத்தைச் சேர்ந்த உயர்தர வகுப்பு மாணவர்களே படுகாயமடைந்தனர். இரு மாணவிகளும், ஒரு மாணவனும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். மாணவன் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாண போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

ஹைஏஸ் சாரதியைப் பொலிஸார் கைது செய்தனர் என்றும், மேலதிக விசாரணை நடைபெறுகின்றது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-ஜ-21,101)

## நீங்கா நினைவலைகள்

முதலாம் ஆண்டு — 20ஆம் ஆண்டு



**விநாயகமூர்த்தி பொன்னையா**
பிறப்பு :- 14.01.1945
இறப்பு :- 07.07.2015
திதி:- அபரபக்க ஷஷ்டி -25.06.2016

**வசந்தமல்லிகா பொன்னையா**
பிறப்பு :- 19.03.1948
இறப்பு :- 04.07.1996

குடும்பத்தின் ஒளிவிளக்காய் அன்பின் இருப்பிடமாய் நற்பண்புகளுடன் நல்வாழ்வுக்கு வழிகாட்டிய எம் அன்புத் தெய்வங்கள் எமைவிட்டுப் பிரிந்து ஓராண்டு காலமாகி விட்டது. என்றும் எம்முடன் துணையாக நாம் இப்பூவுலகில் சிறப்பாக வாழ நீங்கள் விண்ணுலகில் இருந்து எம்மை கவனிப்பீராக. உங்கள் இருவரின் ஆத்மா சாந்தி அடைய வேண்டும்.

துன்னாலை கிழக்கு,
கரவெட்டி.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## சங்காபிஷேகம்

நாவற்குழி சித்திர வேலாயுதர் ஆலயத்தின் சங்காபிஷேகம் இன்று காலை 8 மணிக்கு இடம்பெறவுள்ளது. பி.ப. 3 மணிக்கு திருக்கல்யாண வைவம் இடம்பெற்று, மாலை 5 மணிக்கு திருவீதியுலா வரும் காட்சி இடம்பெறும். (ற-ஜ-ரி2)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர்
**பரமகுரு பத்மநாதன்**
( உழவு இயந்திர தரகர் )



தோற்றம்
16.03.1953

மறைவு
26.05.2016

நினைவுகளுடன் நீள்கின்ற நாள்களுக்குள் - நீங்கள்
எம்மைவிட்டுப் பிரிந்து 31 நாள்களானதே
எத்தனை காலங்கள் கடந்தாலும் உங்கள் நினைவுகள்
எம்மை விட்டு என்றுமே அகலாது
இறந்தும் இறவாமல் எம் இதயங்களில் தெய்வச்சுடராய்
என்றென்றும் வீற்றிருக்கும் உங்கள் நினைவுகளுடன்
உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

மீசாலைமேற்கு,
மீசாலை.

மகேந்திரம் மாலினிதேவி குடும்பம்.
(சகோதரி - கனடா)

## பயிற்சி

வடக்கு மாகாண அரச அலுவலர்களுக்கு வடக்கு மாகாண முகாமைத்து அபிவிருத்திப் பயிற்சி அலகு பயிற்சி வழங்கவுள்ளது.

வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் பயிற்சிகள் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று ஆளணி மற்றும் பயிற்சிப் பிரதம செயலாளர் அ.சிவபாலசுந்தரன் தெரிவித்தார்.

அலுவலக முகாமைத்தவம், ஆங்கிலம் மூலம் அறிக்கையிடல், நல்லாட்சி தத்துவம், நிதி முகாமைத்துவ சம்பள மாற்றுத் திட்டம், கணினிப் பட வடிவமைப்பு போன்ற 45 தலைப்புக்களில் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

பயிற்சிக்கான அலுவலர்களை நியமிக்கும்போது நிறுவனத்தின் தேவைக்கேற்ப பட்டியலிடுமாறும், இதுவரை பயிற்சி பெறாதவர்களை இணைக்குமாறும் செயலாளர் கேட்டுள்ளார். (ற-50)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தாயின் மடியில்
26 . 06 . 1948

இறைவன் மடியில்
26 . 05 . 2016



**ஜேம்ஸ் செல்லையா இம்மானுவல்**
(சூரிய ராசா)
(ஓய்வுபெற்ற இலங்கை மின்சார சபை ஊழியர்)

இன்று (25.06.2016) சனிக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு இவரின் வாழ்வில் இறைவன் செய்த நன்மைகளுக்கு நன்றி கூறி புனித திரேசாள் ஆலயத்தில் ஒப்புக் கொடுக்கப்படும் இரங்கல் திருப்பலியில் இவரது ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்குமாறும் தொடர்ந்து அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் மதியபோசன நிகழ்வில் கலந்துகொள்ளுமாறும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். மேலும் எமது ஆறாத் துயரில் பங்குகொண்டு ஆறுதல் கூறியவர்களுக்கும், இறுதி நிகழ்வில் கலந்துகொண்டவர்களுக்கும், தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

13/1, கோயில் வீதி ஒழுங்கை,
சண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

என்றும் உங்கள் நினைவுகளுடன் [illegible]
குடும்பத்தினர்.

(J.2341) (13.17)

## எம் அன்பான அப்பா மற்றும் ஆருயிர் அண்ணா

10ஆம் ஆண்டு நினைவஞ்சலி — 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் **விஸ்வலிங்கம் வைரமுத்து**
(ஓய்வுபெற்ற பிரதம எழுதுவினைஞர், பிரதி மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம் - யாழ்ப்பாணம்)
மலர்வு :- 23.05.1938 உதிர்வு :- 16.06.2006
திதி: 25.06.2016



அமரர் **வைரமுத்து தயாமோகன்**
(பொதுச்சுகாதாரப் பரிசோதகர், உளநலப் பிரிவு உத்தியோகத்தர், சமூகசேவையாளர்)
மலர்வு :- 15.03.1973 உதிர்வு :- 12.06.2011
திதி: 17.05.2016

ஆண்டுகள் பல கடந்தாலும் ஆறாது எம் நெஞ்சங்கள்
மாண்புடனும் பண்புடனும் பிறர் வாழ்த்திட வாழ்ந்தவரே - நீங்கள்
பிரிந்தாலும் என்றென்றும் பிரியாது உங்கள் பெயரும் புகழும்

[illegible] வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர்களின் செயற்பாடுகளில் இறுக்கமான தீர்மானங்கள் எடுக்கவேண்டிய கட்டாய நிலை

## வடமாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 25
கல்வி நடவடிக்கைகளில் ஆசிரியர்களின் செயற்பாடுகள் தொடர்பாக இறுக்கமான சில தீர்மானங்களை, கல்வி அமைச்சின் சுற்றறிக்கைகள் மூலம் அனுப்ப வேண்டிய கால கட்டாயத்துக்கு நாம் உள்ளாக்கப்பட்டிருக்கின்றோம்.

தகுதியற்றவர்களை புனிதமான ஆசிரியத் தொழிலில் உள்ளிட நாம் இடமளித்துவிட்டோம். ஆண், பெண் என்ற வேறுபாடின்றி ஆசிரியர்கள் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ துர் நடவடிக்கைகளில் ஈடுபடுவதை எந்த வகையில் நியாயப்படுத்த முடியும்? ஆசிரிய குலத்துக்கே அபகீர்த்தி வந்துள்ளதை நாம் உணர வேண்டும்.

இவ்வாறு வடமாகாணமுதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

புலோலி புற்றளை மகா வித்தியாலயம் நூறாவது ஆண்டு நிறைவு விழா நேற்று நடைபெற்றது. அதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போது இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

**எம்மவர்களுக்கு தலைகுனிவு**

எளிமையிலும் செழிப்புடனும் வாழ்ந்த எம்மவர்கள் இன்று வெட்கித் தலைகுனிகின்றார்கள். பிரச்சினைகள் மாணவ மட்டத்தில் மட்டுமே என்று கூறமுடியாது. நாம் சிறுவர்களாக பாடசாலைகளில் கல்வி கற்ற காலத்தில், எமது ஆசான்களாக எமக்குக் கல்வி புகட்டிய ஆசிரியப் பெருந்தகைகளை ஒரு கணம் எண்ணிப் பார்ப்போம். அவர்கள் ஆசார சீலர்களாக, ஒழுக்கம் நிறைந்தவர்களாக, கண்ணியம் மிக்கவர்களாக, எமது முன்னேற்றத்தின் முன்னோடிகளாக வாழ்ந்ததை நாங்கள் அடையாளம் காணுவோம்.

இன்று தினசரிப் பத்திரிகைகளில் வருகின்ற செய்திகள் எம்மைக் கதி கலங்க வைக்கின்றன. பிள்ளைகளைப் பெற்ற பெற்றோர்கள் - குறிப்பாகப் பத்துப் பன்னிரண்டு வயதுப் பெண்பிள்ளைகளுடைய பெற்றோர்கள் தமது பிள்ளைகளை எவ்வாறு பாடசாலைக்கு அனுப்புவது என ஏங்குகின்றனர்.

தனி ஒரு மாணவனுக்கோ, மாணவிக்கோ மாலை நேர வகுப்புக்கள், விடுமுறை நாள்கள் வகுப்புக்கள் பாடசாலை வளாகத்தில் எந்தக் காரணம் கொண்டும் நடத்தப்படக்கூடாது. அவ்வாறு நடத்தப்பட்டால் குறிப்பிட்ட ஆசிரியர், அதிபர் ஆகியோர் குற்றங்களைப் புரிந்தவர்களாகக் கருதப்பட்டு சட்ட ஒழுங்கின் கீழ் ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.

**வக்காலத்து வாங்காதீர்கள்**

ஒரு ஆசிரியர் ஒழுக்க நெறி பிறழ்வில் ஈடுபட்டிருப்பது தெரிந்தும், அதனை உடனடியாக உரிய அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தாமல் மறைப்பதும் தண்டனைக்குரிய குற்றமாகும்.

ஒரு சில ஆசிரியர்களின் தவறான பழக்க வழக்கங்கள் ஒட்டுமொத்த ஆசிரியர் சமூகத்தையும் தலைகுனிய வைப்பது ஏற்றுக்கொள்ள முடியாதது. நண்பர்கள், பழகியவர்கள் எனப் பிழை செய்பவர்களுக்கு உதவப்போய், நீங்களும் சேர்ந்து பிரச்சினைகளில் மாட்டிக் கொள்ளாதீர்கள். பெரும்பான்மை ஆசிரியர்கள் கண்ணியத்துடன் நடந்து கொள்ள முடிவெடுத்தால், குற்றமிழைக்கும் ஆசிரியர்களை எளிதில் திருத்தி விடலாம். உங்கள் பெரும்பான்மையினரின் அழுத்தம் தவறு செய்பவரைக் கட்டுப்படுத்திவிடும்.

**ஒழுக்கப் பிறழ்வு**

தமிழ்ச் சமூகம் பொதுவாகக் கல்வியில் உயர்ந்தவர்களாக, ஒழுக்கத்தில் உயர்ந்தவர்களாக, நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்களாக, கடும் உழைப்பாளிகளாக இனம் காணப்பட்ட சமூகம். இன்றோ அவர்கள் கல்வி கேள்வி அறிவின்றி, ஒழுக்க நெறியில் நின்றும் பிறழ்வடைந்து, ஒழுக்கச் சீர்கேடுகளுடன் எந்தவித தொழில் முயற்சியோ, வருமானம் ஈட்டும் நோக்கமோ, குடும்ப கௌரவத்தைப் பாதுகாக்கும் எண்ணமோ அற்றவர்களாக உள்ளனர். காட்டுமிராண்டித் தனமான செயற்பாடுகளில் ஈடுபடுவதும், கொலை, களவு போன்ற தீய செயல்களில் ஈடுபடுவதும் எம்மை மிகவும் வேதனைக்கு உள்ளாக்குகின்றன.

**ஊக்கமற்ற மாணவர்**

ஊக்கம் அற்ற மாணவர்கள், தாம் நிற்கின்ற இடத்திலேயே ஒரு கோட்டைக் கீறிவிட்டு அதன் மீது ஏறி நின்று கொண்டு தமது இலக்கைத் தாம் அடைந்து விட்டோம் என்று தம்மையும் ஏமாற்றி, தமது குடும்பத்தவரையும் ஏமாற்றுகின்ற ஒரு நிலையை நாம் அவதானிக்கலாம். அந்த நிலை மாறவேண்டும்.

**பூமிக்குப் பாரம்**

உலகளாவிய ரீதியில் இலங்கைத் தமிழர்கள் பொதுவாகக் கற்றவர்கள், பண்பட்டவர்கள், பண்புடையவர்கள் என்ற நற்பெயரை இதுவரை நிலைநாட்டி வந்தனர். எவ்வளவு தீய பழக்கங்களையும், செயல்களையும் புரிய முடியுமோ அவற்றையெல்லாம் புரிந்துகொண்டு பூமிக்கு பாரமாக இருக்கக்கூடிய இளைஞர்களை, நாம் இன்று எம்மிடையே பார்க்கின்றோம். இவர்களைத் திருத்தி சரியான பாதையில் இட்டுச்செல்லவேண்டிய தலையாய பணி இப்போது புதிதாக உருப்பெற்றி ருக்கின்றது.

**கரைசேர்க்கும் பிரச்சினை**

போரால் பாதிக்கப்பட்ட மக்கள், உறவுகளை இழந்தவர்கள், உடல் அவயவங்களை இழந்தவர்கள், சொத்து சுகங்களை இழந்தவர்கள், வீடு வாசல்களை இழந்தவர்கள், பிள்ளைகளை இழந்தவர்கள் எனப் பல்லாயிரக் கணக்கானவர்கள் வறுமையால் வாடிக் கொண்டிருக்கும்போது, அவர்களை எவ்வாறு கரையேற்றுவது என்று திக்குத் தெரியாமல் நாம் தடுமாறிக் கொண்டிருக்கிறோம். இந்த வேளையில் மாணவ, மாணவியரைக் கரை சேர்க்கும் பிரச்சினை எம்மை மேலும் திணற வைத்துள்ளது. ஆசிரியர் சமூகம் மீண்டும் ஒரு உன்னதமான சமூகமாக மாற நாம்அனைவரும்ஒன்றிணைந்து பாடுபடுவோம் - என்றார்.

(ற-ஐ-4)


வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

அமரர் விமலாதேவி கார்த்திகேசு



அவர்களின் சிவபதப்பேறு குறித்த வீட்டுக்கிருத்திய சபிண்டீகரண நிகழ்வு நாளை (26.06.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத் தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் பங்கு கொண்டு, அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக் கின்றோம்.

எங்கள் தாயாரின் இறுதி நிகழ்வில் நேரடியாக வந்து துயர்துடைத்த அன்பு உள்ளங்களுக்கும், தொலைபேசி அழைப்புக்கள் மூலம் துயரங் களைப் பகிர்ந்துகொண்ட உற்றார், உறவினர், நண்பர்களுக்கும், உணர்வோடு தோள் கொடுத்துதவிய உறவுகளுக்கும் இவ்வேளையில் எங்கள் இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இந்த அழைப்பை தங்களுக்கான நேரடியான அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்

குடும்பத்தினர்.
077 171 9208 (சிவா - சுவிஸ்)
திருமதி கே.விஜயலட்சுமி 077 452 5496
(முதலமைச்சின் செயலாளர்(வ.மா)

(ஜே.2385) (13.17)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு மீன்பிடி அபிவிருத்திக்காக இணை முகாமைத்துவ செயற்பாடு

## தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 25

வடமாகாண மீன்பிடி அபிவிருத்திக்காக இணை முகாமைத்துவ செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. இவ்வாறு தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கம் தெரிவித்தது.

வடமாகாண மீனவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காக தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கமும், வட மாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவு இணையமும் இணைந்து முகாமைத்துவக் குழு ஒன்றை அமைப்பதற்கான கலந்துரையாடலை நேற்று நடத்தின.

அது தொடர்பில் தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்க இணைப்பாளர் அன்ரனி யேசுதாசன் தெரிவித்ததாவது:

இந்தக் கலந்துரையாடலில் இந்திய இழுவைப்படகின் ஆக்கிரப்பு, தென்னிலங்கை மீனவர்களின் ஆக்கிரமிப்பு, சட்டவிரோத மீன்பிடி முறைகள், போருக்குப் பிற்பட்ட காலத்தில் வடமாகாண பிரதேசங்களில் மீன்பிடித் தொழில் அபிவிருத்தி தொர்டர்பாக ஆராயப்பட்டன.

மீனவர்களின் காணிகள் விடுவிக்கப்படவில்லை. துறைமுகம் விடுவிக்கப்படவில்லை, மீன்பிடி சமூக அமைப்பின் அடிப்படை வசதிகள் நிறைவேற்றப்படவில்லை என்பவை பற்றியும், போரால் பாதிக்கப்பட்ட மீனவர்களின் உபகரணங்கள் வழங்கப்படாமை, மீனவக் குடும்பங்களின் வாழ்வாதாரங்கள் மிகக் கேள்விக்குறியாக இருக்கின்றமை தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

வடமாகாண மீன்பிடி அமைச்சர், கடற்றொழில் திணைக்களங்களின் பிரதிப் பணிப்பாளர்கள், அரச அதிகாரிகள், அரசசார்பற்ற நிறுவனங்கள், மதத்தலைவர்கள், சிவில் அமைப்புக்கள், மீன்பிடிச் சங்கங்கள், கிராமிய மீனவர் சங்கங்கள் அடங்கிய முகாமைத்துவக் குழுவை உருவாக்கி, அதனூடாக வடமாகாண மீன்பிடித்தொழில் அபிவிருத்திக்காக இணை முகாமைத்துவ செயற்பாடு ஒன்றைக் கட்டி எழுப்புதல் பற்றி பேசப்பட்டது.

யாழ்.மாவட்டத்தில் உள்ள மீனவ சங்கங்களின் தலைவர்களை ஒன்றிணைத்து இணை முகாமைத்துவ எண்ணக்கரு பற்றி ஆராயப்பட்டு, அவை மீனவ சங்கப் பிரதிநிதிகளுக்கு தெளிவூட்டப்பட்டன.

இணை முகாமைத்துவ செயற்பாடு 4 கரையோர மாவட்டங்களை உள்ளடக்கியதாக அமையும். இணை முகாமைத்துவ தலைமைத்துவத்தை வடமாகாண மீன்பிடி அமைச்சர் ஏற்றுக் கொள்வார். இணை முகாமைத்துவக் குழு ஜூலை மாதம் இறுதிக்கு முன்னராக அமைக்கப்படும். இந்தக் குழுவில் 40 பேர் அங்கம் வகிக்கவுள்ளனர்.

கலந்துரையாடலில் முகாமைத்துவ குழுவுக்கு 5 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவு இணையம் சார்பாக செயலாளர் வி.சுப்பிரமணியம், இ.முரளிதரன், இமதியுகன், கே.ராஜசந்திரன், க.இரத்தினராஜா, கே. சண்முகராஜா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இரண்டாம் கட்ட கலந்துரையாடல்கள் கிளிநொச்சி மாவட்டத்தில் எதிர்வரும் 27 ஆம் திகதியும், முல்லைத்தீவில் எதிர்வரும் 8ஆம் திகதியும் நடைபெறவுள்ளன. இந்த முகாமைத்துவக் குழுவின் இறுதித் தெரிவுகள் எதிர்வரும் யூலை மாதம் இறுதிக்குள் முழுமையடையும் - என்றார்.

(ற-4,106)

# வீட்டுத்திட்டப் பயனாளிகளுக்கு மணல் வழங்க சிறப்புத் திட்டம்

## கிளி. மாவட்ட செயலர் தெரிவிப்பு

கிளிநொச்சி, ஜூன் 25

கிளிநொச்சி மாவட்டத்தில் மீள்குடியமர்வு அமைச்சால் வழங்கப்பட்ட வீட்டுத் திட்ட பயனாளிகள் மணல் பெறுவதற்குச் சட்ட ரீதியான சிறப்புத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவ்வாறு கிளிநொச்சி மாவட்டச் செயலாளர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் வீட்டுத்தேவைகளுக்காகச் சட்ட விரோத மண் அகழ்வுகள் இடம்பெறுகின்றன என்று கூறுப்படும் குற்றச்சாட்டுத் தொடர்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

ஆற்றுப்படுக்கைகளில் மணல் அகழ்தல் மாவட்டச் செயலகத்தால் தடை செய்யப்பட்டுள்ளது. இதனால் மணல் களவு ஓரளவுக்குக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

வீட்டுத்திட்டப் பயனாளிகள் இதனால் பாதிக்கப்பட்டனர். அவர்கள் வீடு களை அமைப்பதற்கான மணல் பெறுவதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். அவர்கள் மணல் பெறுவதற்குத் தனியான செயற்றிட்டம் மாவட்டச்செயலகத்தால் நடைமுறைப் படுத்தப்படவுள்ளது. கிளிநொச்சி மாவட்டத்தின் கீழ் உள்ள பிரதேச செயலகங்களில் மணல் உள்ள பகுதிகளை அடையாளங்கண்டு, அதனை எமது மாவட்டக் குழு பரிசீலனை செய்யும். குறித்த இடத்தில் எவ்வளவு மணலைப் பெறலாம் என வரையறை செய்யப்படும். அந் தந்தப் பிரதேச செயலகங்களில் உள்ள மணலை மக்களுக்கு நியாயமான விலையில் வழங்கக்கூடியவர்கள் பிரதேச செயலாளர்களால் பரிந்துரை செய்யப்படுவர்.

அவர்களுடன் கலந் துரையாடி தொடர்ச்சியாக எதுவித பிரச்சினைகளும் இன்றி மணலை வழங்குவதற்கு ஏற்றவாறு ஏற்பாடு செய்யப்படும். இன்னும் இரு தினங்களின் பின்னர் அவர்கள் வேலைகளை ஆரம்பிப்பார்கள். கிளிநொச்சி மாவட்டத்தில் பச்சிலைப் பள்ளி பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் உள்ள பகுதிகளில் மணல் பெறக்கூடிய இடம் இதுவரை அடையாளம் காணப்படவில்லை - என்றார்.

(ற-ஜ-21,ரி3)



உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரியில் நேற்று வெள்ளிக்கிழமை மாணவ முதல்வர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வு நடைபெற்றது. கல்லூரி அதிபர் எஸ். கிருஸ்ணகுமார் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரியின் முன்னாள் பிரதி அதிபரும், தாமோதரா வித்தியாலய அதிபருமாகிய சு.விமலராஜன் கலந்து கொண்டு சின்னம் சூட்டினார்.

(ற-ஜ-422)

## ஆலய சூழலில் புகைத்தவருக்கு ரூ.2,500 தண்டம்

வவுனியா, ஜூன் 25

வவுனியாவில் பொது இடத்தில் (ஆலய சூழலில்) புகைத்தவருக்கு வவுனியா நீதிமன்று 2 ஆயிரத்து 500 ரூபா தண்டம் விதித்தது.

வவுனியா கிடாச்சூரி கண்ணகி அம்மன் ஆலயத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற உற்சவத்தின் போது குறித்த நபரை ஓமந்தை பொதுச் சுகாதார பரிசோதகர் குழு பொலிஸாரிடம் கையளித்தது. பிணையில் விடுவிக்கப்பட்ட அவருக்கு, எதிராக வவுனியா நீதிமன்றில் வழக்குத் தொடுக்கப்பட்டது. குறித்த நபர் தன் மீதான குற்றத்தை ஒப்புக் கொண்டார்.

அதே இடத்தில் இரு வியாபார நிலையங்களில் இனிப்புப் பண்டங்களை திறந்த நிலையில் விற்பனை செய்த குற்றத்துக்காக இருவருக்கு தலா 5 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. (ற-ஜ-4)

# அர்ஜுன மகேந்திரனுக்கு எதிராக மகிந்த அணியினர் போராட்டம்

## எம்.பிக்கள் இருவர் படுகாயம்

மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன மகேந்திரனுக்கு எதிராக மகிந்த ஆதரவு அணியானால் மிகப்பெரிய கவனவீர்ப்புப் போராட்டம் நேற்று நடத்தப்பட்டது. இதில் கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்களில் இருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். ரோகித அபேகுணவர்தன மற்றும் சிரியாணி விஜேவிக்ரம ஆகியோரே கொழும்பு தனியார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அர்ஜுன மகேந்திரனுக்கு எதிராக இந்தப் போராட்டம் நடத்தப்பட்டது. இதில் கலந்து கொண்டவர்கள் கறுப்பு உடை அணிந்திருந்தனர். மகேந்திரனின் பதவிக் காலத்தை நீடிக்க வேண்டாம். வற் வரி மற்றும் ஊழல், மோசடிகள் குறித்து உரிய விசாரணைகள் நடத்தப்பட வேண்டும். இவ்வாறு ஆர்ப்பாட்டக்காரர்கள் வலியுறுத்தினர். கொழும்பு ரீகல் திரையரங்குக்கு முன்னார் இந்தப் பேரணி ஆரம்பமானது. நிதி அமைச்சை நோக்கிச் சென்றனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்களான தினேஷ் குணவர்தன, நாமல் ராஜபக்ஷ, விமல் வீரவன்ச, மகிந்தானந்த அளுத்கமகே, ரோஹித அபேகுணவர்தன, சிரியாணி விஜேவிக்ரம மற்றும் பொதுமக்கள் என சுமார் ஆயிரத்துக்கு மேற்பட்டோர் இதில் கலந்து கொண்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் மத்திய வங்கிக்குள் செல்வதைத் தடுக்கும் வகையில், பன்னாட்டு வர்த்தக நிலையத்துக்கு முன்பாக பொலிஸார் தடையொன்றை ஏற்படுத்தியிருந்தனர். தடையை உடைத்துக்கொண்டு ஆர்ப்பாட்டக்காரர்கள் முன்னேறும் போது, பேரணியில் முன்நிலையில் நின்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் தடுக்கி விழுந்தனர்.

ஆர்ப்பாட்டப் பேரணியில் முன்னால் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் ரோகித அபேகுணவர்தன, பொலிஸார் ஏற்படுத்தி வைத்திருந்த இரும்புத் தடைகளின் மீது விழுந்துள்ளார். அவர்மீது மற்றுமோர் இரும்பிலான தடையொன்று விழுந்துள்ளது. இதன் காரணமாக தலையில் அடிப்பட்டது. அவர் உடனடியாகவே மயக்கமுற்றார். மயக்கமான நிலையில் அவர் தீவிர சிகிச்சைப் பிரிவுக்கு எடுத்துச் செல்லப்பட்டார்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு சன நெரிசலில் தடுக்கி விழுந்த அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிரியாணி விஜேவிக்ரம வும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார். (வ-5)



கிளிநொச்சி அக்கராயன் மணியந்தோட்டத்தில் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான மரக்குற்றிகளை அக்கராயன் பொலிஸார் கைப்பற்றினர். கடந்த புதன்கிழமை கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து பொலிஸார் குறித்த மரக்குற்றிகளையும், வாகனத்தையும் கைப்பற்றினர். சந்தேக நபர்கள் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர். இது தொடர்பான விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ற-ஜ-ரி3)

# மன்னாரில் நீர் விநியோகம் தடை பொதுமக்கள் பெரும் சிரமம்

மன்னார் நகரில் நேற்று அதிகாலையில் இருந்து நீர் விநியோகம் தடைப்பட்டதால் மாவட்டத்தின் பல பகுதிகளிலும் மக்கள் அசௌகரியங்களை எதிர்கொண்டனர். பாடசாலை மாணவர்களும் குடிதண்ணீர் இன்றி சிரமங்களை எதிர்கொண்டனர் என்று மக்கள் குற்றஞ்சாட்டினர். மாலையே குடிதண்ணீர் விநியோகம் சீரானது என்று தெரிவிக்கப்பட்டது.

தேசியநீர்வழங்கல்வடிகால்அமைப்பு சபையால் மன்னார் மாவட்டத்துக்குட்பட்ட பல பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட நீர் விநியோகம் நேற்று அதிகாலை முதல் தடைப்பட்டது. வீதிகளில் உள்ள நீர் குழாய்கள் எவற்றிலும் நீர் வரவில்லை. நீர் கலன்களுடன் பொதுமக்கள் நீண்ட நேரம் அந்த குழாய்களின் முன் காத்து நின்றனர்.

"அதிகாலை தொடக்கம் இந்த குழாய் முன்பாகக் காத்து நிற்கின்றோம். இன்னும் நீர் வரவில்லை. இப்போது 10.30 மணிக்கு மேல் ஆகின்றது. இனியும் நீர் வரவில்லை என்றால் எவ்வாறு சமைப்பது. கடைகளில் தனியார் பௌசர்கள் மூலம் நீர் விநியோகிக்கப்படுகின்றது. காசுக்காவது நீரை வாங்கலாம் என்றால் அங்கேயும் அளவுடன் தானாம். நாங்கள் என்ன செய்வது?" என்று அங்கலாய்த்தனர் மக்கள்.

மன்னார் பொது விளையாட்டு மைதானத்தை அண்மித்து உள்ள நீர் குழாயில் பெரிய வெடிப்பு ஏற்பட்டுள்ளது. அது திருத்தப்படுகின்றது. இன்னும் சில மணி நேரங்களில் வழமை போன்று நீர் விநியோகிக்கப்படும்' என்று தேசிய நீர்வழங்கல் சபையின் மன்னார் பொறுப்பாளர் நிமலன் தெரிவித்தார். அதேபோன்று சில மணி நேரத்தின் பின்னர் தண்ணீர் விநியோகம் சீரானது. (ற-ஜ-21,415)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூதூர் கிழக்கு மக்களின் காணிகளை விடுவிக்குக

## திருகோணமலை மாவட்டச் செயலரிடம் கிழக்கு உறுப்பினர் ஜெனார்த்தனன் கோரிக்கை

மூதூர், ஜூன் 25
மூதூர் கிழக்கில் பொதுமக்களின் காணிகளுக்கு வன வளத் திணைக்களம் எல்லைக்கல் நடுகின்றது. அதை உடனடியாக நிறுத்த வேண்டும். மீள்குடியமர்ந்த மக்கள் தமது காணிகளில் விவசாயத்தில் ஈடுபட அனுமதிக்க வேண்டும்.

இவ்வாறு திருகோணமலை மாவட்டச் செயலரிடம் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஜெ.ஜெனார்த்தனன் கோரிக்கை விடுத்தார்.
அவர் தெரிவித்ததாவது:

பட்டியடிக்குடா, புறவன்பாஞ்சான், தங்கபுரம், கணேசபுரம் போன்ற பல இடங்களில் 50 ஆண்டுகளுக்கு மேலாக விவசாயத்தில் ஈடுபட்ட மக்கள் 2006ஆம் ஆண்டுக்குப் பின்னர் அசாதாரண சூழல் காரணமாக விவசாயத்தில் ஈடுபடவில்லை.

மீண்டும் தமது நிலங்களுக்குத் திரும்பியவர்கள், தமது காணிகளில் பற்றைகளையும், புதர்களையும் துப்புரவு செய்து விவசாயத்தை ஆரம்பிக்க முற்பட்டனர். அங்குள்ள சிறிய மரங்களையும், புதர்களையும் துப்புரவு செய்ய பொலிஸார் தடை விதித்தனர்.

அதற்கான அனுமதியை பெற முயற்சிகள் செய்துவரும்நிலையில் இவர்களுடையகாணிகளை அரச காணிகள் என்று வனவளத் திணைக்களம் எல்லைக்கல் நடுகின்றது.

மக்களுடைய காணிகளில் உள்ள பற்றைகளையும், புதர்களையும் அகற்றி அவர்கள் மீண்டும் தமது நிலங்களில் விவசாயத்தில் ஈடுபட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கடிதம் மூலம் வலியுறுத்தினேன் - என்றார். (ற-ஜ-40)

## கூட்டுறவுப் பெரியாருக்கு சிலை

யாழ்ப்பாணம், ஜூன் 25
கூட்டுறவுப் பெரியார் வீரசிங்கத்துக்கு சிலை அமைக்க கூட்டுறவுச் சபை முடிவெடுத்துள்ளது என்று சபையின் உப தலைவர் எஸ்.இலகுநாதன் தெரிவித்தார்.

"சபையின் கூட்டம் கடந்தவாரம் வீரசிங்கம் மண்டபத்தில் நடந்தது. அதிலே ஏகமனதாக இந்த முடிவு எடுக்கப்பட்டது. சபையின் தலைவர் சுந்தரலிங்கம் தலைமையில் சிலை அமைக்கும் பணிக் குழுவும் அமைக்கப்பட்டது. எதிர்வரும் டிசெம்பர் மாதம் சிலையைத் திறப்பதற்கு எதிர்ப்பார்க்கப் படுகிறது"- என்றார். (ற-17)

## நூல் வெளியீடும் கலை நிகழ்வும்

கொழும்புத்துறை, ஜூன் 25
இளவாலை எழுச்சியகத்தின் ஏற்பாட்டில் நூல் வெளியீடும், கலை நிகழ்வுகளும் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு நடைபெறவுள்ளன.

ஜி.ரி. ரட்ணகுமார் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக அருட்திரு ம.போல்நட்சத்திரம் (அமதி) அடிகளார் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினர்களாக சண்டிலிப்பாய் கோட்டக்கல்விப் பணிப்பாளர் எஸ்.சிவானந்தராசாவும், சங்கானை பிரதேச செயலக கணக்காளர் ஏ.மோகன்ராஜும் கலந்து கொள்வர்.

நிகழ்வில் நடனம், சிறுவர் கலை நிகழ்வு, நாடகம் என்பனவும் மக்ஸ்வெல் றொபின்சன் எழுதிய "எட்டுமுழ வேட்டி" மேடை நாடகங்கள் நூல் வெளியீடும் நடைபெறும். (ற-ஜ-135)

## மாணவருக்கு உதவித் தொகை

யாழ்ப்பாணம், ஜூன் 22
'வறுமையில் திறமை' நிதியத்தால் க.பொ.த சாதாரண தர பரீட்சையில் தோற்றிய மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்கப்பட்டது.

தென்மராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்க எல்லைப் பரப்புக்குள் இயங்கும் பாடசாலைகளில் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் அதிசித்தி பெற்ற வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட 8 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

அவர்களுக்கு தலா 2 ஆயிரம் ரூபா வீதம் உதவித்தொகை வழங்கப்பட்டது.

தென்மராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் நடப்பாண்டுச் செயற்றிட்டங்களில், ஒன்றான 'வறுமையின் திறமை' நிதியத்தின் ஆரம்ப விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

சங்கத் தலைவர் எஸ். அமரசேகரம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் உதவித்தொகையும் வழங்கப்பட்டது. சங்கப் பொது முகாமையாளர், நெறியாளர்குழு உறுப்பினர்கள், பொதுச்சபை உறுப்பினர்கள், தெரிவுக்குழு உறுப்பினர்கள், மாணவர்கள் எனப் பலர் அதில் கலந்து கொண்டனர். (ற-ஜ-ரி,122)



'சிகரெட் நாற்றத்திலிருந்து விடுபட்டு, எமது குழந்தைகளைச் சுத்தமான காற்றைச் சுவாசிக்க வழிசமைப்போம்' என்ற தொனிப்பொருளில் போதைப்பொருள் எதிர்ப்பு விழிப்புணர்வுச் செயற்பாடு நேற்று நெல்லியடி பஸ் நிலையத்துக்கு முன்பாக நடந்தது. இதனை வடமராட்சி நல்லொழுக்க நிறுவனம் ஏற்பாடு செய்திருந்தது. மக்களுக்கு துண்டுபிரசுரங்கள் வழங்கப்பட்டன. ஒலிபெருக்கி மூலமும் விழிப்புணர்வு ஊட்டப்பட்டது. (ற-ஜ-108)

## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூன் 25
பிரபல எழுத்தாளர் நீர்வை பொன்னையனின் 'பாஞ்சான்' என்ற சிறுகதைத் தொகுதியின் வெளியீடும், அவரது படைப்புக்கள் பற்றிய கண்ணோட்டமும் நாளை பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

நீர்வேலி தெற்கு மாதர் சங்க மண்டபத்தில் நீர்வை கலை இலக்கிய வாசகர் வட்டத்தின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது.

ஓய்வு பெற்ற கோட்டக் கல்விப் பணிப்பாளர் துரை. எங்கரசு தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில், நூல் ஆய்வுரையை கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் பிரதி அதிபர் ச.லலீசன் வழங்குவார்.

நிகழ்வில் முற்போக்கு கலை இலக்கிய மன்றத்தின் வெளியீடுகள் காட்சிப்படுத்தப் படவுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-ஜ-4,17)

## சிறுதானியச் செய்கையாளருக்கு உரத்துக்குப் பதிலாக இனி பணம்

### யாழ். கமநல சேவைகள் ஆணையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 25
சிறு தானியச் செய்கையாளர்களுக்கு உரம் வழங்கப்படுவதற்குப் பதிலாகப் பணமே இனி வழங்கப்படவுள்ளது. 22.645 மில்லியன் ரூபா விவசாய அமைச்சால் இதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு யாழ். மாவட்ட கமநல சேவைகள் ஆணையாளர் நிசாந்தன் தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:

கடந்த போக நெற்செய்கையின் பின்னர் கடலை, கௌபி, சோளம், பயறு போன்ற பயிர்ச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு இந்தக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணத்தில் 15 கமநல சேவை நிலையங்கள் உள்ளன. அவற்றின் ஊடாக 3 ஆயிரத்து 602 விவசாயிகள் தெரிவு செய்யப்பட்டனர்.

மாவட்ட உரக் குழு ஊடாக தேசிய உரச் செயலகத்துக்கு அவர்களின் விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டுள்ளன. அவர்களின் வங்கிக் கணக்கில் பணம் வைப்பிலிடப்படும். பயனாளிகளின் பெயர், வங்கிகள் ஊடாக வைப்பிலிட்ட தொகை என்பன ஒவ்வொரு காரியாலயத்திலும் காட்சிப்படுத்தப்படும். விவசாயிகள் ஆகக் குறைந்தது 25 ஆயிரம் ரூபாவை உரத்துக்குப் பதிலாகப் பெற்றுக் கொள்ளலாம் - என்றார். (ற-ஜ-ரி,122)

"யாழ்ப்பாணத்தில் 15 கமநல சேவை நிலையங்கள் உள்ளன. அவற்றின் ஊடாக 3 ஆயிரத்து 602 விவசாயிகள் தெரிவு செய்யப்பட்டனர்"

## கணவனை இழந்தோர் தின நிகழ்வு நல்லூரில்



யாழ்ப்பாணம், ஜூன் 25
விழுது நிறுவனமும், வட மாகாண அமரர் குடும்பத்தைத் தாங்கும் பெண்கள் ஒன்றியங்கள் மற்றும் பெண்கள் சமாசங்கள் இணைந்து ஏற்பாடு செய்திருந்த சர்வதேச கணவனை இழந்தோர் தின நிகழ்வு நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது.

நிலைமாறு கால நிதியை வலியுறுத்தும் முகமாகவும், தேசிய கணவனை இழந்தோர் பட்டயத்தை அறிமுகப்படுத்தும் முகமாகவும் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

விழுது நிறுவனத்தின் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் தலைமை விருந்தினராக வட மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனும், சிறப்பு விருந்தினராக கிராம அபிவிருத்தித் திணைக்கள வட மாகாண பணிப்பாளர் யெ.பெலிசியனும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் முதலமைச்சரிடம் தேசிய கணவனை இழந்தோர் பட்டயம் கையளிக்கப்பட்டது. பெண் தலைமை தாங்கும் குடும்பங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பான கோரிக்கைகளும் முதலமைச்சரிடம் முன்வைக்கப்பட்டன என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (ற-ஜ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தகவல் அறியும் சட்டம் ஓர் ஆண்டின் பின்னரே

## பணியாளரைப் பயிற்றுவிக்க காலம் தேவை என பிரதமர் ரணில் நாடாளுமன்றில் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூன் 25
தகவல் அறியும் சட்ட வரைவு நிறைவேற்றப்பட்டாலும் அதை நடைமுறைப்படுத்துவதற்கு ஒரு வருடம் தேவைப்படும்.
இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.
தகவல் அறியும் சட்ட வரைவின் இரண்டாவது வாசிப்பு நாடாளுமன்றில் நேற்று முன்தினம் நடைபெற்றது. அதில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



அவர் தெரிவித்ததாவது:
இந்த நடவடிக்கையை முன்னெடுப்பதற்கு 12 ஆயிரம் வரையான பணியாளர்கள் தேவைப்படுகின்றனர். அவர்களுக்குப் பயற்சியளிக்கவேண்டும். அதற்கு ஒரு வருடம் தேவை.
தகவல்கள் கடந்த காலங்களில் மூடி மறைக்கப்பட்டன. அதனாலேயே ஊழல், மோசடிகள் தலைவிரித்தாடின. ஜனநாயகத்தையும், நல்லாட்சியையும் ஏற்படுத்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தச் சட்ட வரைவுக்கு ஒத்துழைக்கவேண்டும்.
2003ஆம் ஆண்டு ஐ.தே.க. தலைமையிலான அரசு இந்த சட்டவரைவை சமர்ப்பித்தது. 2004ஆம் ஆண்டு ஆட்சி மாற்றம் ஏற்பட்டதால் சட்டவரைவு நிறைவேற்றப்படவில்லை. முயற்சியை நாம் கைவிடவில்லை. பல வழிகளில் முயற்சித்தோம். சிவில் அமைப்புக்களும் கோரிக்கை விடுத்தன.
ஆட்சியிலிருந்தவர்கள் அவற்றை கவனிக்கவில்லை. 10ஆண்டுகளுக்கு மேலாக இழுத்தடிக்கப்பட்டது. 21ஆம் நூற்றாண்டில் தகவல் அறிதல் என்பது மக்களின் முக்கிய உரிமையாகும். அந்த உரிமை கடந்த காலங்களில் இங்கு மறுக்கப்பட்டது. சட்ட வரைவு கொண்டு வரப்பட்ட போதெல்லாம் ஊழல், மோசடிகளை மூடி மறைக்கவே தடுக்கப்பட்டது. இது நிறைவேற்றப்பட்ட பின்னர் எந்தத் தகவலையும் எதிர்காலத்தில் மறைக்க முடியாது.
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான தேசிய அரசு மக்களுக்கு இந்த உரிமையை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளது. தெற்காசியாவில் இந்தியாவில் நடைமுறையில் உள்ள தகவல் அறியும் சட்டத்துக்கு அடுத்த படியாக சிறந்ததொரு சட்ட வரைவு இலங்கையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.
கருத்து வேறுபாடு இருக்கலாம். மக்களின் உரிமைக்காக அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் - என்றார். (ற-ஐ-5)

## மாணவர் அனுமதி தொடர்பில் தேசிய கொள்கை விரைவில்

கொழும்பு, ஜூன் 25
மாணவர்களைப் பாடசாலைகளில் இணைப்பதற்கு புதிய தேசியக் கொள்கை அறிமுகப்படுத்தவுள்ளது. அரசு அதற்கான நடவடிக்கையை எடுத்துள்ளது.
இதன்மூலம் பெற்றோர் பாடசாலை அனுமதிக்காக அரசியல்வாதிகள், அரச அதிகாரிகள் பின் செல்வதைத் தடுக்க முடியும்.
இவ்வாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.
கொழும்பு றோயல் கல்லூரி பரிசளிப்பு விழா நேற்று முன்தினம் நடந்தது. அதில் ஜனாதிபதி மைத்திரிபால கலந்து கொண்டார்.
அவர் தெரிவித்ததாவது:
பாடசாலைகளில் பிள்ளைகளைச் சேர்ப்பது தொடர்பில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் வெற்றியளிக்கவில்லை. அரசுகள் கடுமையாக விமர்சிக்கப்பட்டன. பாடசாலை அனுமதிக்கான தீர்மானங்கள் வெற்றியளிக்கவில்லை. இதற்காகப் புதிய தேசிய கொள்கை அறிமுகப்படுத்தப்படவுள்ளது.
பிரபல பாடசாலைகளில் கிடைக்கும் வசதிகள் ஏனைய பாடசாலைகளுக்கும் கிடைக்க வேண்டும். அரசு என்ற வகையில் அதற்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டோம். பிரபல பாடசாலைகளில் காணப்படும் சிறப்புகளை போட்டித்தன்மையற்ற பாடசாலைகளிலும் உருவாக்க வேண்டும் - என்றார்.
விசேட திறமைகளை வெளிக்காட்டிய 35 மாணவர்களுக்கு ஜனாதிபதி விருது வழங்கப்பட்டது. 18 ஆசிரியர்களுக்கு சிறந்த ஆசிரியர்களுக்கான சான்றிதழ் வழங்கப்பட்டது. (ற-ஐ-5)

## சு.கவிலிருந்து பிரிந்தால் நிலைக்க முடியாது

கொழும்பு, ஜூன் 25
சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து பிரிந்து சென்று யார் கட்சி அமைத்தாலும் நீண்ட காலம் நிலைக்க முடியாது.
இவ்வாறு அமைச்சர் விஜித முனி சொய்சா தெரிவித்தார்.
சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நடத்தப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பில் இவ்வாறு அவர் தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
உள்ளூராட்சித் தேர்தலுக்கான வேட்பாளர்களைத் தெரிவு செய்ய நேர்முகப்பரீட்சை நடத்தப்படும். ஒவ்வொரு மாகாணத்துக்கும் நேர்முகத் தேர்வுக் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. கட்சியின் உள்ளூராட்சிச் சபை உறுப்பினர்கள் அனைவருக்கும் தேர்தலில் போட்டியிட வாய்ப்பு வழங்கப்படும். ஜனாதிபதி அதற்கு நடவடிக்கை எடுத்துள்ளார்.
கட்சியைப் பலப்படுத்த கீழ் மட்டத்தில் இருந்து வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன. கட்சியைப் பிளவுபடுத்தி புதிய கட்சியை உருவாக்கச் சிலர் முயற்சிக்கின்றனர். கட்சியை விட்டுச் சென்று மூன்றாம் நிலைக் கட்சியை உருவாக்க முயன்றவர்கள் நீண்ட காலம் நிலைத்திருக்கவில்லை. கடந்தகாலம் மூலம் அவர்கள் கற்றுக்கொள்ள வேண்டும் - என்றார். (ற-ஐ-5)

# திருத்தம் செய்தால் மட்டுமே சட்ட வரைவுக்கு எம் ஆதரவு

## மகிந்த அணியினர் போர்க்கொடி

கொழும்பு, ஜூன் 25
தகவல் அறியும் சட்ட வரைவில் திருத்தங்கள் முன் வைத்துள்ளோம். அவை ஏற்றுக்கொண்டாலே ஆதரவு வழங்குவோம்.
இவ்வாறு கூறியுள்ளனர் மகிந்த ராஜபக்ச ஆதரவு அணியினர்.
தகவல் அறியும் சட்ட வரைவின் இரண்டாவது வாசிப்பு நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் நடைபெற்றது.
அரசு முன்வைத்துள்ள சட்டவரைவைஅப்படியே ஏற்கமுடியாது. திருத்தங்கள் அவசியம். அவற்றை முன்வைத்தோம். அரசு சாதகமாகப் பதிலளிக்கவேண்டும். அப்போதுதான் எமது ஆதரவு கிடைக்கும்.
நாட்டின் பொருளாதாரத்துக்கு பாதிப்பு ஏற்படுத்தும் விடயங்களை அறியமுடியாதுள்ளது. அமெரிக்கா போன்ற நாடுகளுடன் செய்யும் ஒப்பந்தங்களின் உள்ளடக்கங்களை அறியமுடியாதுள்ளது. இந்தியாவுடன் செய்த ஒப்பந்தங்கள் குறித்தும் விளக்கமில்லை. ஒருபுறத்தில் கதவு திறக்கப்பட்டாலும் மறுபுறத்தில் அடைக்கப்படுகின்றது.
மக்களுக்குத் தகவல் அறியும் உரிமை முக்கியம். ஜனநாயகம் பலமடையும். தேர்தல் என்பதும் ஜனநாயகத்தின் முக்கிய அம்சமாகும். அது அரசுக்குப் புரியவில்லை. உள்ளூராட்சித் தேர்தலை அரசு இழுத்தடித்து வருகின்றது - என்று மகிந்த அணியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ கூறினார். (ற-ஐ-5)

## வலைகள் மாயம்; உதவிப் பணிப்பாளர் கைது

கொழும்பு, ஜூன் 25
மீனவர்களுக்குப் பகிர்ந்தளிப்பதற்காக வைக்கப்பட்டிருந்த, ஒரு தொகை மீன்பிடி வலைகள் காணாமற்போயுள்ளன. மீன்பிடி மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தித் திணைக்களத்தின் திருகோணமலை மாவட்ட உதவிப் பணிப்பாளர் சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டார்.
குறித்த திணைக்களத்தின் களஞ்சியத்துக்குப் பொறுப்பான பெண் எழுதுவினைஞரால் வழங்கப்பட்டிருந்த முறைப்பாட்டுக்கு அமையவே இவர் கைது செய்யப்பட்டார்.
திருகோணமலை நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. சந்தேகநபரை எதிர்வரும் 28ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டது. (ஐ-22)

## மின் சக்தியில் தன்னிறைவு காண தனியாருக்கு அழைப்பு

கொழும்பு, ஜூன் 25
நாட்டின் மின்சாரத் தேவையைப் பூர்த்தி செய்ய வேண்டும். மின் சக்தியில் தன்னிறைவு காணவேண்டும். அரசு முன்னெடுத்துள்ள நிகழ்ச்சித் திட்டங்களில் தனியார் முதலீட்டாளர்கள் இணைந்து கொள்ளவேண்டும்.
இவ்வாறு அழைப்பு விடுத்தார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.
மின் சக்தித் துறையில் புதிய முதலீடுகள் செய்வது தொடர்பான கலந்துரையாடல் ஜனாதிபதி தலைமையில் நடைபெற்றது.
காற்று மூலமான மின் கருத்திட்டத்தை தொடர்ந்து நடைமுறைப்படுத்தவேண்டும். தனியார் துறையினரின் பங்களிப்பை இதற்காகப் பெற முடியும். சூரிய ஒளி மூலமான மின் உற்பத்திக்கு இலங்கை திட்டமிட்டுள்ளது.
விக்டோரியா மின் உற்பத்தி நிலையத்தைப் பெரிதாக்க வேண்டும். அதற்கான சாத்தியப்பாடுகளை ஆராயுங்கள். விரிவான அறிக்கை ஒன்றை என்னிடம் தாருங்கள் - என்று ஜனாதிபதி அதிகாரிகளிடம் தெரிவித்தார். (ற-ஐ-5)

# போராளிகளின் இயல்பு வாழ்வுக்கு படைத்தரப்பால் தொடர் இடையூறு

## இந்திய ஊடகம் கூறுகின்றது

புனர்வாழ்வு வழங்கப்பட்ட முன்னாள் போராளிகள் இயல்பு வாழ்க்கைக்கு திரும்ப ஆர்வமாக உள்ளனர். அரசியல் தலைமைத்துவத்தின் ஆர்வமின்மை, படைத் தரப்பின் தொடர் கண்காணிப்பு, அதிகாரிகளின் அக்கறையின்மை போன்றவற்றால் அது சாத்தியமற்றுள்ளது.
இவ்வாறு இந்திய ஊடகமாக இந்தியன் எக்ஸ்பிரஸ் செய்தி வெளியிட்டுள்ளது.
இராணுவத்தால் தொடர்ந்து கண்காணிக்கப்படுகின்றோம். இது மீண்டும் எங்களைக் கடந்த காலத்துடன் பிணைக்கின்றது - என்று முன்னாள் போராளி ஒருவர் அந்த ஊடகத்திடம் தெரிவித்தார்.
"நான் கடந்த காலங்களை மறந்து புதிய வாழ்க்கைஆரம்பிக்கவிரும்புகின்றேன். ஆனால் வருடத்துக்கு மூன்று தடவைகள் படைத் தரப்பிடம் என்னைப் பற்றிய விவரங்களை வழங்கவேண்டிய நிலையில் உள்ளேன்" என்று தெரிவித்தார்; எறிகணையால் ஒரு கையை இழந்த முன்னாள் பெண் போராளி ஒருவர்.
"குற்றப் புலனாய்வுப் பிரிவினரின் அறிவிக்கப்படாத வருகையையும், கண்காணிப்பையும் நான் எதிர்கொள்ள வேண்டியுள்ளது. அவர்கள் எனது கடந்த காலங்கள் மற்றும் தற்போதைய நிலை குறித்து தொடர்ந்தும் கேள்வி கேட்கின்றனர். இறந்த எனது கணவர் குறித்தும் கேட்கின்றனர். அதனால் என்னால் கடந்த காலங்களை மறக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.
அவர்கள் வந்து சென்ற பின்னர் நான் எனது பத்து வயது மகளுக்கு அனைத்தையும் தெரிவிக்கவேண்டியுள்ளது. அது அந்தச் சிறுமியின் மீது கடும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. பொலிஸாரும் என்னைத் துன்புறுத்துகின்றனர். ஒரு முறை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் அனுமதியின்றி எனது வீட்டுக்குள் நுழைந்தனர்" - என்றும் அந்தப் பெண் இந்தியன் எக்ஸ் பிரஸ் ஊடகத்துக்குத் தெரிவித்துள்ளார். (ற-ஐ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடற்படைக் கொமாண்டர் வெலகெதர பதவியிறக்கம்

## இராணுவ நீதிமன்ற விசாரணையை அடுத்து

கொழும்பு, ஜூன் 25

கடற்படையினரின் வெள்ளை வான் கடத்தல் தகவல்களை வெளிப்படுத் திய கடற்படையின் முன்னாள் புலனாய்வு அதிகாரியான கொமாண்டர் கே.சி. வெலகெதர பதவியிறக்கம் செய்யப்பட்டார்.

கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ரவீந்திர விஜேகுண வர்த்தனவால் நியமிக்கப்பட்ட இராணுவ நீதிமன்றம் இவரைக் குற்றவாளியாக இனங்கண்டதை அடுத்தே கொமாண்டர் கே.சி. வெலகெதர பதவியிறக்கப்பட்டார்.

கடற்படைத் தலைமையகத்துக்கு தகவல் தெரிவிக்காமல் வெளிநாடு சென்றார், கடற்படையை இழிவுபடுத்தினார் என்ற குற்றச்சாட்டுகள் குறித்து இவரை இராணுவ நீதிமன்ற விசாரித்தது.

கடந்த மார்ச் 21ஆம் திகதி தொடக்கம், ஏப்ரல் 13ஆம் திகதி வரைவெலகெதர அனுமதியின்றி விடுமுறையில் இருந்தார். இந்தக் காலப்பகுதியில் கடற்படைத் தலைமையகத்துக்குத் தெரியப்படுத்தாமல் வெளிநாடு சென்றார் என்ற குற்றங்களின் அடிப்படையில் இராணுவ நீதிமன்றம், கொமாண்டர் கே.சி. வெலகெதரவின் மூப்புவரிசையை நான்கு ஆண்டுகளால் குறைத்து, அவரைக் கப்டனாகப் பதவியிறக்கம் செய்தது.

இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ஜெயநாத் ஜெயவீர இதனை உறுதிப் படுத்தினார்.

கொமாண்டர் வெலகெதர கடற்படையின் புலனாய்வு அதிகாரியாகப் பணியாற்றியவர். திருகோணமலையில் இருந்த கடற்படைச் சித்திரவதை முகாமுக்குப் பொறுப்பாக இருந்த அவர், ஆஸ்திரேலியாவுக்கு ஆட்களைக் கடத்தும் குழுவினருடன் தொடர்பில் இருந்தவர்.

முன்னைய ஆட்சிக் காலத்தில் நடந்த வெள்ளை வான் கடத்தல்கள் மற்றும் சட்ட விரோத ஆட்கடத்தல்கள் பற்றிய தகவல்களை அவர் தற்போதைய அரசின் விசாரணைகளில் ஒப்புக்கொண்டார்.

இவர் மீது இராணுவ நீதிமன்றம் நடவடிக்கை எடுத்திருப்பது குறித்து அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித சேனாரத்ன கவலை வெளியிட்டார். தம்மை நம்பி தகவல்களை வெளியிட்ட கொமாண்டர் வெலகெதரவுக்கு ஏற்பட்டுள்ள நிலை கவலையளிக்கின்றது என்று அவர் குறிப்பிட்டார். (ற-ஐ-5)

# விருப்பு வாக்கு முறைமையை இல்லாமல் செய்யத் தீர்மானம்

கொழும்பு, ஜூன் 25

விருப்புவாக்குமுறை இல்லாத புதிய தேர்தல் முறைமையை இருபதாவது அரசமைப்புத் திருத்தமாக நாடாளுமன்றத்தில் கொண்டுவருவதற்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழு தீர்மானித்தது.

கடந்த 21ஆம் திகதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இடம்பெற்ற சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுவின் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

முதலில் இருபதாவது அரசமைப்புத் திருத்தமாக புதிய தேர்தல் முறைமையை நாடாளுமன்றத்துக்குக் கொண்டு வருவதற்கும், அதிகாரப் பகிர்வு மற்றும் நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை இல்லாமல் செய்தல் போன்ற விடயங்களை அதன் பின்னர் நாடாளுமன்றத்துக்குக் கொண்டு வருவதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

நாட்டுக்கு ஒவ்வாத விருப்பு வாக்கு முறைமை ஒழிக்கவேண்டுமென்பதே மக்களின் தலையாய கோரிக்கையாக உள்ளது. முதலில் தேர்தல் முறையில் மாற்றத்தை ஏற்படுத்தி, அதன் பின்னர் அடுத்த கட்ட நடவடிக்கைகளாக அதிகாரத்தைப் பகிர்ந்தளிப்பது, நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை ஒழித்தல் போன்ற செயற்பாடுகளை நிறைவேற்ற முடியும் என்று கட்சியின் மூத்த தரப்பினர்களால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (ற-ஐ-22)

# மகிந்தவின் பாதுகாப்பிலிருந்து இராணுவம் முற்றாக நீக்கம்

கொழும்பு, ஜூன் 25

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் அனைத்து இராணுவப் பாதுகாப்பும் நீக்கப்பட்டது. ஜப்பான் பயணத்தை முடித்துக் கொண்டு மகிந்த அண்மையில் நாடு திரும்பினார். தற்போது அவரிடம் இறுதியாக இருந்த இராணுவப் பாதுகாப்பு அணியும் நீக்கப்பட்டுள்ளது.

மகிந்தவின் பாதுகாப்புக்காக கடமையில் அமர்த்தப்பட்டிருந்த கேணல் மகேந்திர பெர்னாண்டோ, நெருக்கமான பாதுகாப்பு உத்தியோகத்தரான மேஜர் நெவில் வன்னியாராச்சி உள்ளிட்ட ஐந்து உயர் இராணுவ அதிகாரிகள் பாதுகாப்புப் பணிகளிலிருந்து மீளப் பெற்றுக் கொள்ளப்பட்டனர்.

மகிந்தவுக்குப் பாதுகாப்பு வழங்கிய இராணுவ உத்தியோகத்தர்கள் மற்றும் அதிகாரிகள் பல்வேறு கட்டங்களாக மீளப் பெறப்பட்டனர். கடந்த மே முதலாம் திகதியிலிருந்து மீளப் பெற்றுக் கொள்ளும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இறுதியாக ஐந்து உயர் இராணுவ அதிகாரிகள் மகிந்தவின் ஜப்பான் பயணம் நிறைவடையும் வரையில் கடமையில் இருந்தனர்.

மகிந்தவின் ஜப்பான் பயணத்தைத் தொடர்ந்து உயர் இராணுவ அதிகாரிகளும் இராணுவத் தலைமையகத்துக்கு மீள அழைக்கப்பட்டனர். (ற-ஐ-5)

# சோமவன்ச பதவிக்கு விஜேசிங்க

கொழும்பு, ஜூன் 25

சோமவன்ச அமரசிங்கவின் மறைவால் மக்கள் சேவைக் கட்சியின் தலைமைப் பதவியில் வெற்றிடம் ஏற்பட்டது. அந்த வெற்றிடத்துக்கு கட்சியின் செயலாளரான ஜயந்த விஜேசிங்க நியமிக்கப்பட்டார்.

விரிவான வேலைத் திட்டங்களுடன் கட்சியை முன்னேற்றப் பாதையில் எடுத்துச் செல்லவுள்ளளேன் என்று புதிய தலைவர் ஜயந்த விஜேசிங்க கூறினார்.

ஆரம்பத்தில் கட்சி உருவாக்கத்தின் போது, ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட கொள்கைகளுக்கு முரணில்லாதவாறு மாற்றங்களைக் கொண்டு வரவுள்ளேன். கட்சியின் புதிய முன்னெடுப்புக்கள் தொடர்பில் அடுத்து வரும் ஓரிரு தினங்களில் நாட்டுக்கு அறிவிக்கவுள்ளேன் – என்று அவர் தெரிவித்தார். (ற-ஐ-5)

# ஏன் கைது செய்யப்பட்டோம் என்பதை அறியாது அரசியல் கைதிகள் சிறையில்

## சாந்தி சிறிஸ்கந்தராஜா எம்.பி. சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூன் 25

"தமிழ் அரசியல் கைதிகளில் பலருக்குத் தாம் ஏன் கைது செய்யப்பட்டோம் என்பது தெரியாது. தகவல் அறியும் சட்டத்தின் ஊடாக அவர்கள் அதனை அறிவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்."

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறிஸ்கந்தராஜா தெரிவித்தார்.

தகவல் அறியும் சட்ட மூலத்தின் இரண்டாம் வாசிப்பு நேற்று முன்தினம் இடம்பெற்றது. அங்கு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தற்போது போலி இணையத்தளங்களின் பாவனை அதிகரித்துள்ளன. திட்டமிட்ட அடிப்படையில் நபர்களை இலக்கு வைத்து தாக்குதல் நடத்தப்படுகின்றது. இது பற்றி தொலைத்தொடர்பு ஆணைக்குழு கவனம் செலுத்த வேண்டும்.

தமிழ் அரசியல் கைதிகளைப் பார்வையிடுவதற்கு சிறைச்சாலைக்கு சென்றோம். தாம் கைது செய்யப்படும்போது சிங்களத்தில் ஏதோ எழுதப்பட்டது. அது என்னவென்று தமக்குத் தெரியாது என்று அவர்கள் சுட்டிக்காட்டினர்.

பலருக்கு தாம் எதற்காகச் சிறை வைக்கப்பட்டனர் என்ற விவரம் கூட இன்னும் தெரியாது. இவை பற்றிய தகவல்களை வழங்குவதற்கு, தமிழ் அரசியல் கைதிகளுக்குத் தகவல் அறியும் சட்ட மூலம் வழி சமைக்கவேண்டும். நல்லிணக்கத்தை அது உறுதிப் படுத்தவேண்டும்.

தென்பகுதி மீனவர்களால் வடக்கு மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறது. இதற்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். வடக்கில் காடழிப்பு, மணல் அகழ்வு போன்ற நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன. இவற்றை சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் சுட்டிக்காட்டியும் இது வரையில் பயன் எதுவும் இல்லை – என்றார். (ற-ஐ-5)

# சீர்திருத்த நிலையங்களாக சிறைச்சாலைகள் மாறவேண்டும்

## அமைச்சர் கயந்த கருணாதிலக தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 24

"சிறைச்சாலைகளைச் சீர்திருத்த நிலையங்களாக மாற்றியமைக்க வேண்டும். சிறைச்சாலைகளை மறுசீரமைக்க வேண்டிய தேவை உள்ளமை அரசால் இனங் காணப்பட்டுள்ளது."

இவ்வாறு அமைச்சர் கயந்த கருணாதிலக தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர்கள் சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"இலங்கையில் நகரப் பிரதேசங்களில் உள்ள சிறைச்சாலைகளை இட வசதியுடன் கூடிய, மக்கள் நடமாட்டம் குறைந்த பகுதிகளுக்கு இடமாற்றம் செய்ய அரசு முடிவு செய்துள்ளது.

புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் டி. எம். சுவாமிநாதன் முன்னிலையில் இது தொடர்பான யோசனைக்கு அமைச்சரவையும் ஒப்புதல் வழங்கியுள்ளது.

அமைச்சர் வழங்கிய ஒப்புதலில் கொழும்பு, காலி, மாத்தறை, பதுளை, திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு சிறைச்சாலைகளை இடம் மாற்றுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சன அடர்த்தி கூடிய பகுதிகளிலுள்ள சிறைச்சாலைகளை, மக்கள் நடமாட்டம் அற்ற பகுதிகளுக்கு மாற்றும் நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

சிறைச்சாலைகளை இடமாற்றுவதற்கான நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்கு நியமிக்கப்பட்டுள்ள குழுவின் பரிந்துரையின் அடிப்படையில், இந்த முடிவு எடுக்கப்பட்டது"– என்று அவர் தெரிவித்தார். (ற-ஐ-4)

# இலங்கையில் 50 ஆயிரம் ஹெரோயின் பாவனையாளர்

கொழும்பு, ஜூன் 25

50 ஆயிரத்துக்கும் அதிகமான ஹெரோயின் பாவனையாளர்கள் இலங்கையில் காணப்படுகின்றனர். இந்தத் தகவலை அபாயகரமான போதைப் பொருள் கட்டுப்பாட்டுச் சபை வெளியிட்டுள்ளது.

ஒவ்வொரு வருடமும் ஆயிரம் தொடக்கம் 2 ஆயிரம் பேர் வரையில் ஹெரோயின் பாவனைக்கு உள்ளீர்க்கப்படுகின்றனர். போதைப்பொருள் பாவனை தொடர்பான தேசிய மட்டக் கணிப்பீடு ஒன்றை மேற்கொள்ளவுள்ளோம் என்று சபையின் அதிகாரி தெரிவித்தார்.

வடக்கு–கிழக்கில் கேரளாக் கஞ்சாவின் பயன்பாடு 2009 ஆம் ஆண்டின் பின்னர் அதிகரித்துச் செல்கின்றது. (ற-ஐ-5)

# புற்றுநோயாளருக்கான நிதியை வரையறையின்றிச் செலவிடுக

## சுகாதார அமைச்சர் பணிப்பு

கொழும்பு, ஜூன் 25

புற்றுநோயாளர்களின் சிகிச்சைகளுக்கான நிதியை வரையறையின்றிச் செலவிட வேண்டும் என்று சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்தார்.

புற்றுநோயாளர்களின் சிகிச்சைக்காக அரசால் 15 இலட்சம் ரூபா வரையறையறுக்கப்பட்டது. குறைந்த வருமானம் பெறும் நோயாளிகள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். அதனைக் கருத்தில்கொண்டு குறித்த வரையறையை நீக்கி, நோயாளி உயிர் வாழும் வரை அவருக்குத் தேவையான மருத்துவ உதவிகளை, இலவச சுகாதார சேவையூடாக வழங்க சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது என்று அமைச்சர் தெரிவித்தார்.

இதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு சுகாதார சேவைகள் பணிப்பாளர்நாயகம் பாலித மஹிபாலவுக்கும், அமைச்சின் செயலாளர் அனுர ஜயவிக்ரமவுக்கும் பணிப்புரை விடுத்தார். (ற-ஐ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## நச்சுத்தனமான உள்ளோட்டம்; அரசியல் சாணக்கியம் மேலெழட்டும்

பிரித்தாளும் தந்திரத்தைப் பயன்படுத்தி, மூலோபாயமாகக் கொண்டு, தென்னிலங்கை அரசியல்வாதிகள் தமிழ் மக்களுக்குக் கிடைக்க வேண்டிய நலன்களைத் தட்டிப்பறிப்பதில் மிகுந்த கில்லாடிகள். அதுவே இந்த நாட்டின் அரசியல் "சித்தாந்தம்" என்றும் ஆகிவிட்டது.

அதனை இப்போது எடுத்து உரைப்பதன் முகாந்திரம் என்னவென்று, வாசகர்கள் சலிப்புறக்கூடும்.

வடக்குக்கான உத்தேச பொருளாதார மையத்தை, எங்கே அமைப்பது என்பதில் உருவாகி உள்ள வாதப் பிரதிவாதங்கள், அவற்றுக்கு அனு சரணையாக மேல் உயர்ந்துள்ள தெற்கிலங்கை யின் இலக்குகள், மெதுமெதுவாகக் கருக் கொண்டு வருவதும், கனத்துப்பெருத்து வேகம் கொண்டுள்ளதும், வெட்ட வெளிச்சமாகப் புலப்படுகிறது!

அண்மைக் காலமாக, சூடான பேசு பொருளாகத் துளிர்த்து மையம் கொண்டிருப்பது, வடக்குக்கான பொருளாதார மையம் என்பதாகும். தமக்குக் கைவந்த பிரித்து ஆளும் தந்திரத்தைக் கையில் எடுத்து, தமிழர் தரப்பைத் தள்ளி விழுத்தும் போக்கு முகிழ்த்து, மெல்ல மெல்லப் பெருத்து வருகிறது!

அதன் பெறுபேறு தான் வடக்குக்கான பொருளாதார மையத்தை மதவாச்சிக்கு நகர்த்திச் செல்வதற்கான நரித்தனம்!

அறுபத்தையாயிரம் வீட்டுத் திட்டம், பொருளாதார மையம் என்பவற்றுக்கு வடக்கில் தேர்ந்து எடுக்கப்பட்டவர்களது கருத்துக்களை புறம் தள்ளிவிட்டு--

ஒரு வகை சார்ந்து திணிப்பை மேற்கொண்டு சர்வாதிகார நோக்கையும், போக்கையும் விரைந்து வீச்சாக்கும் முயற்சிக்கு, தமக்கு இதமான நிகழ்ச்சி நிரலை செயற்படுத்த, உள்ளாடும் கள்ளாடுமாக சதிவலை பின்னப்படுகிறது!

மறுபுறத்தில்--

கூட்டிக் கழித்துப் பெருக்கிப் பிரித்துப் பார்த்தால், வடக்கில் மக்களால் தெரிந்து எடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இடையே, பிளவுகளை உள்ளும் புறமுமாக உருவாக்கி,--

அவர்களின் சிறு சிறு கருத்து வேற்றுமைகளை பெருப்பித்து, "டாப்பர் மாமா" நிலை நின்று, ஊதிப்பருக்க வைத்து, மந்திர தந்திரங்களை உற்பவித்து நாசகாரப் 'பணி' செய்வதற்கும் முற்படக்கூடும்.

தமிழர் தரப்பு அது குறித்து உள்ளார்ந்து நோக்கி உய்த்துணர வேண்டிய வேளை இது. அதனை, ஒரு மணித்துளியும் மறந்துவிட லாகாது.

தமக்குள் பிளவுபடாமல் செயற்படுவதற்குக் கங்கணம் கட்ட வேண்டும். அதற்கான அரசியல் சாணக்கியமும், பரந்து விரிந்த பார்வையும் மிகப் பெரும் பருமனில் (Shape) உருவாக்கப்பட வேண்டும். அது தவிர்க்க முடியாத ஒன்று என்பதனை, ஓர்ந்து உணர்ந்து செயலாற்ற வேண்டும். அதுவே உடனடித் தேவை.

அதற்கான அரசியல் சாணக்கியம் மேலெழட்டும்.

# தனக்குத் தானே ஆப்பு வைத்துக் கொண்ட பஷீர்

எம்.ஐ.முபாறக்

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தவிசாளரும் முன்னாள் அமைச்சருமான பஷீர் சேகு தாவூத் இனி எந்தவொரு தேர்தலிலும் போட்டியிடுவதில்லை என்று எடுத்திருக்கும் தீர்மானம் தான் இன்று முஸ்லிம் அரசியல் அரங்கில் பரபரப்பாகப் பேசப்படும் தலைப்பாக மாறியுள்ளது. அவரது அந்தத் தீர்மானத்தின் பின்னணி என்ன ?அவர் இந்த நிலைமைக்குத் தள்ளப்படுவதற்கு காரணம் என்ன?என்று ஆராய்ந்து பார்த்தால் அவரது பிழையான அரசியல் நிலைப்பாடே இதற்கு காரணம் என்பதை அறியலாம்.



சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் நிறுவுனத் தலைவர் எம்.எச்.எம்.அஷ்ரப்பின் மறைவைத் தொடர்ந்து அந்தக் கட்சி பிளவு என்ற தலையிடியைச் சந்திக்கத் தொடங்கியது.அஷ்ரப் உயிருடன் இருந்தபோது தங்களது பதவி ஆசையை நிறைவேற்றிக்கொள்ள முடியாமல் இருந்தவர்கள் அஷ்ரப் இறந்த போது உள்ளார மகிழ்ந்தார்கள்.

### ஹக்கீமுக்கு எதிரான பரப்புரை

கட்சியின் அடுத்த தலைவர் ரவூப் ஹக்கீம் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர் அல்லர் என்ற ஒரு காரணத்தை முன்வைத்து, பிரதேசவாதத்தைத் தூண்டி அதனூடாக கட்சி தாவி அமைச்சுப் பதவிகளைப் பெற்று நீண்ட நாள் ஆசையை நிறைவேற்றிக் கொண்டனர்.

அவர்களின் திட்டப்படி கட்சி பிளவுபட்டது.அமைச்சுப் பதவிக் கனவும் நிறைவேறியது.அதன் பிறகு,2005இல் மு.கா. மற்றுமொரு பாரிய பிளவைச் சந்தித்தது.சந்திரிக்கா அம்மையார் ஜனாதிபதியாக இருந்த அந்தக் காலப்பகுதியில் மு.காவில் இருந்து ஹுசைன் பைலா, ரிசாத் பதியுதீன், அமீர் அலி மற்றும் நஜீப் ஏ மஜீத் ஆகியோர் அரசு பக்கம் பல்டி அடித்து அமைச்சுப் பதவிகளையும் பெற்றுக்கொண்டனர்.


இதனைத் தொடர்ந்து 2005 ஆம் ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த வெற்றிபெற்று அவரின் ஆட்சி ஆரம்பமானது.அவரது ஆட்சியின்போதும் மு.காவுக்குள் பிளவுகள் ஏற்படும் அறிகுறிகள் தென்பட்டன. மகிந்தவின் உறவினர்களுடன் நெருக்கத்தை ஏற்படுத்திக்கொண்டு அவர்களின் ஊடாக அமைச்சுப் பதவிகளைப் பெறுவதற்கு மு.கா. உறுப்பினர்கள் சிலர் இரகசியமாக முயற்சி எடுத்தனர்.

இந்தச் சதியை நன்கு உணர்ந்து -தொடர்ந்தும் எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்தால் தான் மட்டுமே கட்சியில் மிஞ்சுவேன் என்பதையும் அறிந்து ரவூப் ஹக்கீம் கட்சியின் பிளவைத் தடுப்பதற்காக அரைகுறை மனதுடன் மகிந்த அரசில் போய் இணைந்து கொண்டார்.

### தேசியப் பட்டியலுக்கான பஷீரின் போராட்டம்

அவ்வாறு இணைந்தும்கூட, அமைச்சுப் பதவிக்காக அங்கு இன்னுமொரு தடவை பிளவு ஏற்பட்டது. கட்சியின் தவிசாளராக இருந்துகொண்டு கட்சியின் தலைவருக்கே தெரியாமல் பஷீர் சேகுதாவூத் அமைச்சுப் பதவியைப் பெற்றுக்கொண்டமை தான் அந்தப் பிளவுக்குக் காரணம். ஆனால்,அவர் கட்சியை விட்டு வெளியேறவில்லை.

கட்சிக்குள் ஏற்பட்ட பிளவுகள் உட்பட அனைத்துப் பிரச்சினைகளுக்குமான தீர்வாக ஹக்கீம் ஆட்சி மாற்றத்தையே நாடினார். இதனால்தான் ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களில் மகிந்தவுக்கு எதிரான அணியில் நின்று போராடினார். 2015இல் அவர் எதிர்பார்த்த ஆட்சி மாற்றம் ஏற்பட்டது.கட்சியை மீளக் கட்டியெழுப்புவதற்கான சாதகமான நிலைமையும் தென்பட்டது. இருந்தாலும், அதே வருடம் இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தல் மு.காவுக்கு சாதகமானதாக அமையவில்லை. கடசியைப் பலப்படுத்துவதற்கு ஏதுவான பெறுபேறுகள் அந்தத் தேர்தலில் கிடைக்கவில்லை. 2010ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் இரண்டு தேசியப் பட்டியல் ஆசனங்கள் உட்பட எட்டு ஆசனங்களை மு.கா. பெற்றிருந்தது.ஆனால், 2015 ஆம் ஆண்டு நாடா ளுமன்றத் தேர்தலில் இரண்டு தேசியப் பட்டியல் ஆச னங்கள் உட்பட ஏழு ஆசனங்களையே பெற்றது. இருந்தஒன்று பறிபோனது. திருகோணமலை மற்றும் வன்னி ஆகிய மாவட்டங்கள் மு.காவுக்கு தோல்வியைக் கொடுத்தன.அந்த மாவட்டங்கள் கொண்டிருந்த தலா ஒவ்வோர் ஆசனமும் பறிபோனது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிலுக்கு அம்பாறை மாவட்டத்தில் ஓர் ஆசனம் அதிகரித்தது.மொத்தத்தில் ஓர் ஆசனம் பறிபோனது.இந்தப் தோல்விதான் தேசியப் பட்டியல் ஆசனப் பகிர்வில் மு.காவுக்கு சிக்கலை ஏற்படுத்தியது. திருகோணமலை மாவட்டத்தில் ஐக்கிய தேசிய கட்சியின் சார்பில் ஒருவரும் அமைச்சர் ரிசாத் பதியுதீனின் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் சார்பில் ஒருவரும் என இருவர் தெரிவாகினர். அதேவேளை,வன்னியில் ரிசாத் பதியுதீனின் கட்சியில் ஒருவரும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சார்பில் ஒருவரும் என இருவர் தெரிவு செய்யப்பட்டனர்.

இவ்வாறு இரண்டு மாவட்டங்களிலும் தலா இரண்டு எதிரணி எம்பிக்கள் இருக்கின்ற நிலையில்,மு.கா சார்பில் ஓர் எம்பியும் இல்லாவிட்டால் இந்த மாவட்டங்களில் மு.காவை வளர்த்தெடுக்க முடியாது என்பதை
நன்கு உணர்ந்த மு.காவின் தலைவர் ரவூப் ஹக்கீம், கிடைத்த இரண்டு தேசியப் பட்டியல் ஆசனங்களில் ஒன்றை திருகோணமலைக்கு வழங்கினார்.

இப்படியானதொரு இக்கட்டான நிலையில்தான் தொடர்ச்சியாக தேசிய பட்டியல் எம்பி பதவிகளை அனுபவித்து வந்த அக்கட்சியின் தவிசாளர் பஷீர் சேகுதாவூத்தும் செயலாளர் நாயகமாக இருந்த ஹஸன் அலியும் மீண்டும் தேசிய பட்டியல் எம்பி பதவி கேட்டு போராட்டத்தைத் தொடங்கினர்.அந்தப் போராட்டத்தில் தீவிரமாக நின்றவர் பஷீர். போராட்டம் தோல்வி கண்டதைத்தொடர்ந்து, தான் இனி எந்தவொரு தேர்தலிலும் போட்டியிடுவதில்லை என்ற முடிவை பஷீர் எடுத்துள்ளார்.

**தலைமைத்துவப் பதவியை கைப்பற்ற பஷீர் செய்த முயற்சி**

பஷீருக்கு இந்த நிலமை ஏற்படுவதற்குக் காரணம் அவருக்கும் கடசியின் தலைமைத்துவத்துக்கும் இடையில் ஏற்பட்ட முறுகல்தான். கட்சியின் தலைவர் பதவியைக் கைப்பற்றுவதற்கு பஷீர் 2010இல் எடுத்த பிழையான நடவடிக்கைதான் அவரை இந்த நிலைமைக்கு இட்டுச்சென்றது.

மகிந்த ஆட்சியில் மஹிந்தவின் சகோதரர் பஸில் ராஜபக்ஸவுடன் நெருங்கிய உறவை பஷீர் கொண்டிருந்தார் என்று தெரிவிக்கப்படுகிறது. பஷீரைக் கொண்டு காட்சியைப் பிளவு படுத்துவதற்கு பஸில் திட்டம் தீட்டினார்.



மு.காவின் தலைமைத்துவப் பதவியைப் பறித்து பஷீருக்கு வழங்குவதோடு அவருக்கு ஒரு கெபினட் அமைச்சுப் பதவி மற்றும் அவருடன் வருபவர்களுக்கு இரண்டு பிரதி அமைச்சுப் பதவிகள் வழங்கப்படும் என்று பசில் வாக்குறுதி வழங்கினார் என்றும் கூறப்படுகின்றது.

2010ஆம் ஆண்டு நோன்பு மாதம் மு.காவின் அரசியல் உயர்பீட உறுப்பினர்களுல் ஒருவரான முழக்கம் மஜீதை கொழும்புக்கு அவசரமாக அழைத்த பஷீர் அரசுடன் இணையும் யோசனையை அவரிடம் தெரிவித்தார்.தலைவர் ஹக்கீமிடம் பேசி இது தொடர்பில் முடிவெடுப்போம் என்று மஜீத் சொன்னதும் அதை நிராகரித்து தனதுதிட்டத்தை பஷீர் மஜீதிடம் கூறினார். ஹக்கீம் தலைமைத்துவத்துக்குத் தகுதி அற்றவர்.மு.காவின் தலைவர் பதவியை தனக்குப் பெற்றுத் தருவதாக பஸில் உறுதியளித்துள்ளார் என்று

> ஆரம்பத்தில் மிகவும் திறமையான– அரசியல் சாணக்கியமிக்க அரசியல் வாதி யாகத் திகழ்ந்த பஷீர் காலப் போக்கில் அரசியலில் எடுத்த பிழையான– தூர நோக்கமற்ற நிலைப்பாடுகள் இன்று அவரை இந்த நிலமைக்குக் கொண்டு வந்துள்ளன.

பஷீர் கூறினார் என்று சொல்லப்படுகிறது. இப்போதைய பிரதி அமைச்சர் ஏ.எச்.எம்.ஹரீஸையும் இவ்வாறே கொழும்புக்கு அழைத்து இதே விடயத்தைக் கூறினார் என்றும் கூறப்படுகின்றது. பஷீரின் இந்தத் திட்டத்துடன் ஹரீஸும் முழக்கம் மஜீதும் உடன்படவில்லை. இந்த சம்பவம் எதுவும் தெரியாமல் அப்போது ரவூவ் ஹக்கீம் பரீட்சை யொன்றுக்கான நுவரெலியாவில் தங்கியிருந்து படித்துக் கொண்டிருந்தார். ஹரீஸ் இந்த விடயத்தை உடனடியாக ஹக்கீமிடம் எத்திவைத்தார்.கட்சி மீண்டும் உடைய போகிறது என்பதை உணர்ந்த ஹக்கீம் அரசுடன் இணையும்முடிவைஎடுத்து அரசுடன் இணைந்து கொண்டார்.தனது திட்டம் பிழைத்துப் போனதால் தனித்துச் சென்று அமைச்சரவை மதிப்புள்ள அமைச்சுப் பதவியைப் பெற்றுக் கொண்டார் பஷீர். அப்போது இருந்துதான் தலைவர் ஹக்கீமுக்கும் பஷீருக்கும் இடையிலான பனிப் போர் தொடங்கியது.

**பஷீரை ஓரங்கட்டிய ஹக்கீம்**

கட்சிக்கும் தலைமைத்துவத்துக்கும் பஷீர் ஆபத்தானவர் என்பதை உணர்ந்த ஹக்கீம் அந்த ஆபத்தில் இருந்து தப்புவதற்காக அவருக்கே உரிய பாணியில் காய் நகர்த்தினார். பஷீருக்கு எதிராக பஷீரின் சொந்த ஊரான ஏறாவூரில் மாற்று ஏற்பாட்டை ஹக்கீம் செய்யத் தொடங்கினார்.

அந்த வகையில்,2012 கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் ஏறாவூரில் இருந்து ஹாபீஸ் நஸீர் அஹம்மட்டைக் களமிறக்கி முதலமைச்சராக ஆக்கினார். 2015 நாடாளுமன்றத் தேர்தலில் செய்யித் அலி சாஹீர் மௌலானாவைக் களமிறக்கி எம்பியாக்கினார்.

இந்த 2 பேரையும் கொண்டு பஷீருக்கு எதிரான தனது திட்டத்தை ஹக்கீம் செவ்வனேநிறைவேற்றினார். இனி எந்த வொரு தேர்தலிலும் போட்டியிடுவதற்கு தனக்கு கட்சிக்குள் வாய்ப்புகிடைக்காது. அவ்வாறு கிடைத்தாலும் வெல்ல முடியாது என்ற நிலை தோன்றிய தும் பஷீர் இப்போது தானாகவே ஒதுங்கிக் கொண்டார். மேற்படி இருவரும் இல்லாத நிலையில், பல வருடங்கள் ஏறாவூரில் தனி இராச்சியம் நடத்தியபோதுகூட தேர்தல்களில் வெல்ல முடிய வில்லை என்றால் இனி எப்படி வெல்ல முடியும் என்றஉண்மையைபஷீர்நன்கு உணர்ந்ததால்தான் இனி எந்தவொரு தேர்தலிலும் போட்டியிடுவதில்லை என்ற முடிவை எடுத்துள்ளார். ஆரம்பத்தில் மிகவும் திறமையான– அரசியல்சாணக்கியமிக்க அரசியல்வாதியாகத் திகழ்ந்த பஷீர் காலப் போக்கில் அரசியலில் எடுத்த பிழையான– தூர நோக்கற்ற நிலைப்பாடுகள் இன்று அவரை இந்த நிலைக்குக் கொண்டு வந்துள்ளன.

# பாவனைக்கு உதவாத நிலையில் காணப்படும் அல்லாரை/மீசாலை ஊர் எல்லை வீதி (மத்திய வீதி)

அல்லாரை/மீசாலை ஊர் எல்லை (மத்திய வீதி) வீதியில் வசிக்கும் இதே ஊரைச் சேர்ந்த மக்கள் பரம்பரை பரம்பரையாக இந்த வீதியைப் பாவிப்பவர்கள். முன்பு இந்த வீதி மணல் தரையாகவும் பற்றைகள் நிறைந்ததாகவும் காணப்பட்டது. இதனால் ஊர் மக்களாகிய நாங்கள் இந்த வீதியால் சைக்கிளில்கூட சரியாக பயணம் செய்ய முடியாத அவல நிலையில்இருந்தோம். இந்த நிலையில் சாவகச்சேரி நகர சபைக்கு பல முறை இது பற்றிக் கடிதம் மூலமும், நேரிலும் அறிவித்தோம், பயன் கிடைக்கவில்லை.

இந்த நிலையில் ஊர் மக்களாகிய நாங்கள் சாவகச்சேரியில் உள்ள நகர சபை, கைதடியில் உள்ள உள்ளூராட்சித் திணைக்களம், கொடிகாமத்தில் உள்ள சாவகச்சேரி பிரதேச சபை, ஆகிய நிறுவனங்களுக்கும் பல முறை இது பற்றிக் கடிதங்கள்பல எழுதினோம். இறுதியாக கடந்த சில வருடங்களுக்கு முன்பு உலக தரிசனம் என்ற ஸ்தாபனத்தார் இந்த வீதியைப் புனரமைக்கத் தொடங்கினார்கள். அவர்கள் இந்த மக்கி மணல் கொண்டு புனரமைத்தார்கள். இதனால் நாங்கள் மேலும் பல சிரமங்களை எதிர் கொள்ள வேண்டி உள்ளது. இந்த நிலை தொடர்பாக எமது சாவகச்சேரி நகர சபைக்கு நாங்கள் மீண்டும் பல முறை அறிவித்தோம். அவர்கள் இது பற்றி எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. கடைசியாக சாவகச்சேரி நகர சபையினரை நாங்கள் சந்தித்து இந்த விடயம் பற்றிக் கதைத்தோம். ஆனால் பயனேதும் கிட்டவில்லை.

மேலும் இந்த வீதியில் பல இடங்களில் கனரக வாகனங்களின் போக்குவரத்தால் பெரிய கிடங்குகள் பல இடங்களில் ஏற்பட்டுள்ளன. இதனால் நாங்கள் சரியான முறையில் போக்குவரத்துச் செய்ய முடியவில்லை. இதைவிட கோடை காலத்தில் சோழகக் காற்று வீசும்போது இந்த மக்கி மணல் காற்றுக்கு அள்ளுப்பட்டு எங்கள் வீடு வாசலுக்குள் நிறைந்து விடுகின்றது. இதே நேரம் வீதியால் போகும் எங்களுக்கும் இந்த மக்கி மணல் வீசப்படுகிறது. இதனால் எங்கள் உடம்பும், உடையும் பழுதடைகிறது. இதேநேரம் மாரி காலத்தில் மழை பெய்யும்போது இந்த மக்கி மணல் கரைந்து வழு வழுப்புத் தன்மையுடன் காணப்படுகிறது.

இதனால் இந்த வீதியால் போக்குவரத்து செய்யும் பாதசாரிகள் வழுக்கி விழுந்து காயமடைந்த சம்பவங்கள் பல நடந்ததுண்டு. பல வாகனங்கள் மாரி காலத்தில் புதைந்தும், வழுக்கல் காரணமாக விபத்திலும் சிக்கியதுமுண்டு. இதுபற்றி நாங்கள் சாவகச்சேரி நகரசபைக்குப் பலமுறை அறிவித்தோம் செய்வோம் என்றார்களே ஒழிய காலம் சென்றதுதான் மிச்சம். நொந்துபோன மனது டன் வாழும் இந்த ஊர் மக்களின் கவலையைப் போக்க இந்தக் கடிதத்தை விரைவாக தங்கள் பத்திரிகையில் பிரசுரிக்குமாறு ஊர் மக் கள் சார்பில் கேட்டுக்கொள்கின்றேன்.

அற்புதநாதன்

வாசகர் திருமுகம் பகுதிக்கு எழுதுபவர்கள் தமது பெயர், முகவரி, தொடர்பு எண் என்பவற்றை நிச்சயம் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். சொந்தப் பெயரை வெளியிட விரும்பாதவர்கள் அது பற்றிக் குறிப்பிட்டு, புனை பெயரையும் எழுதி அனுப்பலாம். ஆனால் உண்மையான விவரங்கள் குறிப்பிடப்படாத வாசகர் திருமுகங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா. எழுதியவர்களின் விவரங்கள் குறித்த இரகசியங்கள் தேவைப்படும் பட்சத்தில் காக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து வெளியேறியது பிரிட்டன்

## நெருக்கடிக்குள் உலக பொருளாதாரம் எச்சரிக்கின்றனர் நிபுணர்கள்




லண்டன், ஜூன் 25
பிரிட்டனில் நடத்தப்பட்ட மக்கள் வாக்கெடுப்பில் ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரிட்டன் விலக வேண்டும் என மக்கள் தீர்ப்பளித்துள்ளனர்.

51.97 சதவீத மக்கள் ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரிட்டன் விலக வேண்டும் என்று வலியுறுத்தினர். இதனால் ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரிட்டன் வெளியேறுவது உறுதியாகியது. இது உலகப் பொருளாதாரத்தில் பெரும் தாக்கத்தைச் செலுத்தும் என்று நிபுணர்கள் சுட்டிக் காட்டினர்.

வாக்கெடுப்பு முடிவுகள் வெளியாகத் தொடங்கியதும் பங்கு வர்த்தகங்களில் தளம்பல் ஏற்படத் தொடங்கியது. கடந்த 31 ஆண்டுகளில் இல்லாதவாறு பவுண்ட்ஸ் பெறுமதி வீழ்ச்சியடைந்தது. யூரோவும் குறிப்பிடத்தக்க வீழ்ச்சியை அடைந்தது. ஆசியாவின் பங்குச் சந்தை வர்த்தகத்திலும் பெரும் சரிவு ஏற்பட்டது.

ஜூன் 23ஆம் திகதியே பிரிட்டனின் சுதந்திர தினம் என்று கூறவேண்டும் என்றும் பிரிட்டன் ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து வெளியேற வேண்டும் என்றும் பரப்புரை செய்த சுயாதீனக் கட்சித் தலைவர் தெரிவித்தார்.

"ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து வெளியேற வேண்டும் என்பது மக்களின் விரும்பம். எதிர்வரும் மாதங்களில் ஐரோப்பாவில் பெரும் மாற்றங்களும், தாக்கங்களும் உணரப்படும்" என்று நிபுணர்கள் தெரிவித்தனர்.

பிரிட்டனின் இந்த முடிவால் ஆசிய வங்கிகள், உலக முதலீட்டாளர்கள் பெரும் நெருக்கடிகளுக்கு முகம் கொடுப்பர் என்று சுட்டிக் காட்டப்படுகிறது. இலங்கை போன்ற வளரும் நாடுகளும் நெருக்கடிகளைச் சந்திக்க வேண்டி ஏற்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. பிரிட்டன் ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து வெளியேறக்கூடாது என்று இலங்கை கோரிக்கை விடுத்திருந்தது. இந்த முடிவால் இலங்கையின் ஏற்றுமதி வர்த்தகத்தில் பெரும் பாதிப்புக்கள் ஏற்படும் என்றும் சுட்டிக்காட்டுகிறது.
(ற-ரி4)

பிரசெல்சைத் தளமாகக் கொண்ட ஐரோப்பிய ஒன்றியம் என்ற அதிகாரத்துவக் கட்டமைப்பில் பிரித்தானியா தொடர்ந்தும் நீடிப்பதா? இல்லை அதிலிருந்து விலகிச்செல்வதா? என்ற வினாக்களை மையப்படுத்தி வாக்கெடுப்பு நடந்தது.

இரு தரப்பினரும் கடந்த 4 மாதங்களாகக் கடுமையான பரப்புரைகளில் ஈடுபட்டிருந்தனர்.

கொன்சர்வேட்டிவ் கட்சியைப் பொறுத்தவரை ஐரோப்பிய ஒன்றியத்தில் நிலைக்க வேண்டும் என்ற தரப்புக்கு பிரதமர் டேவிட் கமரூன் தலைமை தாங்கினார். அவரது அமைச்சரவையின் முக்கிய சகாக்கள் அவருக்கு ஆதரவு வழங்கினர்.

ஒன்றியத்திலிருந்து விலக வேண்டும் என்ற தரப்புக்கு லண்டனின் கொன்சர்வேட்டிவ் கட்சியைச் சேர்ந்த முன்னாள் நகர முதல்வர் பொறிஸ் ஜோன்சன் தலைமை தாங்கினார். அவருக்கு ஆதரவாக அமைச்சர் மைக்கேல் கோவ் இயன், டங்கன் சிமித் மற்றும் அதி தீவிர வலதுசாரிக் கட்சியான சுயாதீனக் கட்சித் தலைவர் நைஜல் பராஜ் ஆகியோர் பரப்புரை செய்தனர்.

## விலகுகிறார் கமரூன்

லண்டன், ஜூன் 25
பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் பதவியில் இருந்து விலகுகிறார். இதனை அவர் நேற்று அறிவித்துள்ளார். எதிர்வரும் ஒக்ரோபர் மாதத்துடன் தான் பதவியிலிருந்து விலகத் தீர்மானித்துள்ளார் என்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.



ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து வெளியேற வேண்டும் என்பதற்கு ஆதரவாக பெரும்பாலான வாக்குகள் பதிவானதை அடுத்தே அவர் இந்த முடிவை எடுத்தார்.

ஐரோப்பிய ஒன்றியத்தில் பிரிட்டன் நிலைத்திருக்கவேண்டும் என அவர் பரப்புரை செய்திருந்தார்.

தனது பதவி விலகல் குறித்து மகாராணிக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என்றும், எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் இடம்பெறவுள்ள கொன்சர்வேட்டிவ் கட்சி மாநாட்டைத் தொடர்ந்து பதவியைப் புதிய பிரதமரிடம் கையளிக்க உள்ளார் என்றும் கமரூன் குறிப்பிட்டார்.
(ற)

## 27 நாடுகளோடு ஐரோப்பிய ஒன்றியம் செயற்படும்

லண்டன், ஜூன் 25
ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரிட்டன் வெளியேறினாலும் 27 நாடுகளுடன் ஐரோப்பிய ஒன்றியத்தை நடத்துவோம் என ஐரோப்பிய ஒன்றியத் தலைவர் டொனால்ட் ரஸ்க் தெரிவித்தார். பிரிட்டன் வெளியேறியதால் வேறெந்த மாற்றமும்ஏற்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார். இந்த மாற்றம் எதிர்பாராததுதான். மீண்டும் நாம் சிறந்த நிலையை அடைவோம் என உத்தரவாதம் அளிக்கின்றேன். அரசியல் மாற்றங்களை எம்மால் எதிர்வுகூற முடியாது. ஐரோப்பிய ஒன்றியம், பிரிட்டன் இடையிலான கொடுக்கல் வாங்கல்கள் சட்டத்துக்குட்பட்ட விதத்தில் விலக்கப்படும்– என்றார்.
(ற-ரி4)

## 47 ஆண்டுகளாகப் பரீட்சை எழுதும் 77 வயது முதியவர்

புதுடில்லி, ஜூன்.25
இந்தியாவின் ராஜஸ்தான் மாநிலத்தைச் சேர்ந்த சிவ்-சரன் யாதவ் எனும் 77 வயது முதியவர் 47




வருடங்களாக மாநில அளவில் இடம்பெறும் 10ஆம் ஆண்டுப் பரீட்சைக்குத் தோற்றி வருகிறார்.

இவர் பிறந்து 2 மாதங்களில் தாயை இழந்தார். யாதவுக்கு 10 வயது இருக்கையில் தந்தையையும் இழந்தார். இதன் பின்னர் உறவினர்களுடன் இருந்தாலும் தனிமையில் வாழ்ந்து வந்தார். இவர் 10ஆம் வகுப்பு படிக்கும்போது மாநிலப்பரீட்சையில் தோல்வி அடைந்தார். ஆனால் விடாப்பிடியாக, பரீட்சை எழுதி சித்தி பெறாமல் திருமணம் செய்ய மாட்டேன் என உறுதி பூண்டுள்ளார்.

1968ஆம் ஆண்டு முதல் முறையாக, கோகாரி கிராமத்தில் பரீட்சை எழுதினார். ஒரு சில பாடங்களில் சித்தி எய்தினாலும், சில பாடங்களைத் தவறவிட்டார்.

எல்லாப் பாடங்களிலும் நான் சித்தி அடைவது எனது இலட்சியம் என யாதவ் கூறுகின்றார். 1995ஆம் ஆண்டு கணிதத்தை தவிர ஏனைய அனைத்து பாடங்களிலும் சித்தி எய்தினார். "இம்முறை பாடசாலை ஆசிரியர்களிடம் சிறப்புப் பயிற்சி பெற்றுள்ளேன்" என அவர் தெரிவித்தார். விடா முயற்சியுடன் பரீட்சையில் தோற்றும் [illegible] பாராட்டியுள்ளனர்.
(ற-ரி4)



அமெரிக்காவில் தந்தை ஒருவர் தனது மகனுக்காக விசித்திரமான பச்சை கு
புற்றுநோய் காரணமாக ஏற்பட்ட கட்டியை அகற்றிய இடத்தில் ஏற்பட்ட த
மனப்பான்மையை ஏற்படுத்தக்கூடாது என்று எண்ணிய அவர், தன
அடையாளத்தை ஏற்படுத்தியுள்ளார். சமீபத்தில் பிளேட்-ரக் எனும் நிறு
தந்தைக்கான விருது வழங்கும் நிகழ்வுக்கு குறித்த ஒளிப்படத்தை குடும்ப
இணைய வாக்குகளுடன் சிறந்த தந்தைக்கான விருதை அவர் வென்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஞ்சள் காமாலையை தடுக்க தடுப்பூசி

கின்சா, ஜூன் 25
மஞ்சள் காமாலைத் தாக்கத்துக்கு உள்ளாகியுள்ள கொங்கோவின் தலைநகரான கின்சாவில் அவசர தடுப்பூசி செயற்றிட்டமொன்று முன்னெடுக்கப்படவுள்ளது.
அங்கோலா மற்றும் கொங்கோ நாடுகளின் எல்லைகளில், மஞ்சள் காமாலை பரவுவதைத் தடுக்கும் வகையில் உலக சுகாதார நிறுவனம் அவசர தடுப்பூசி செயற்றிட்டத்தை ஆரம்பிக்கவுள்ளது.
கடந்த பத்து ஆண்டுகளில் மிக மோசமான மஞ்சள் காமாலை பரவலாக இது கருதப்படுகின்றது.
அங்கோலாவில் இந்தநோயால் சுமார் 350 பேர் உயிரிழந்தனர். கொங்கோவில் எழுபதுக்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். (ற)



# பாறையில் படம் வரைந்ததால் இரு ஆண்டுகளுக்குத் தடை!

வொஷிங்டன், ஜூன் 25
அமெரிக்காவில் பெண் ஒருவருக்கு, அந்த நாட்டின் எந்த ஒரு தேசிய வன விலங்குப் பூங்காக்களுக்குச் செல்ல தடை விதிக்கப்பட்டது.
பாதுகாக்கப்பட்ட பாறைகள் மீது படம் வரைந்து சமூக வலைத்தளத்தில் பதிவேற்றியதால் இந்த தண்டனை விதிக்கப்பட்டது.
23 வயதான ஒபர்டோ என்ற பெண்ணுக்கு இந்தத் தடை இரு ஆண்டுகளுக்கு விதிக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவில் பல தேசிய பூங்காக்களில், புவியின் ஆய்வு தொடர்பாக புராதன பாறைத் தொடர்கள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.
2014ஆம் ஆண்டு 26 நாள்களில் பல்வேறுபட்ட பாறைகளில் ஒபர்டொ தனது முகத்தையும், பெயரையும் வரைந்துள்ளார் என அதிகாரிகள் தெரிவித்தனர்.
இவர் வரைந்த ஓவியங்களை பாறைகளில் இருந்து அகற்ற முடியவில்லை. அவற்றை அகற்ற மேலோட்டமாக செதுக்கவேண்டிய தேவை ஏற்படும். அது நிரந்தர வடுவாக மாறிவிடும் என்பதால் அதன் படியே விடப்பட்டுள்ளது.
ஒபர்டோவுக்கு எதிராக வழக்குத் தொடுக்கப்பட்டது. விசாரணைகளின் பின்னர் தண்டனையும், தண்டமும் விதிக்கப்பட்டது.
நான் ஓவியர், இவற்றை பாழாக்க இவ்வாறு செய்யவில்லை என்று ஒபர்டோ கூறியுள்ளார். (ற-ரி4)

# இயற்கை இடர்களால் சீனாவில் 98 பேர் உயிரிழப்பு; பலர் காயம்

பீஜிங், ஜூன் 25
சீனாவில் இடி, மின்னல், புயல் காரணமாக 98 பேர் உயிரிழந்தனர். நூற்றுக்கணக்கானோர் பாதிப்புக்குள்ளாகினர். அதிக பொது மக்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.
சீனாவில் சூறாவளிகள் அதிகம். வருடாந்தம் 10 சூறாவளிகள் சீனாவைத் தாக்குவது வழமை என



எண்ணிக்கையான கட்டடங்கள் முற்றாக அழிவடைந் தன என்று அதிகாரிகள் தெரிவித் தனர்.
நே[illegible]று முன்தினம் யென்செங் நகருககு அருகில் புயல் மையம் கொண்டது. இதனால் அதிகளவான மக் கள் பாதிப்படைந்தனர். வீதிகள் வெள்ளத்தால் மூடப்பட்டன.
தொழிற்சாலைக்கட்டடங்கள் தரைமட்டமாகின. மின்சாரம் துண்டிக்கப்பட்டது. 800 பேர் காயமடைந்தனர். 200 பேரின் நிலை மிக ஆபத்தில் இருக்கின்றது என்று சீன வானியல் ஆராய்ச்சி மையத்தினர் தெரிவித்தனர். மக்கள் தொகை அதிகம் என்பதால் இவ்வாறான இடர்களால் பெருமளவு பாதிப்புக் கள் ஏற்படுகின்றன என்றும் தெரி விக்கப்பட்டது.
கடந்த ஒரு வாரகாலமாக தென்-கிழக்கு சீனா கடும் இயற்கை இடருக்கு முகம்கொடுத்துள்ளது. நகர வடிவமைப்பும், வடிகால் அமைப்பும் திறம்பட அமைக்கப்படாமை இதற்கு முக்கிய காரணம் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற-ரி4)

# ஆர்ப்பாட்டம் வன்முறையானது அரச சொத்துகள் தீயிட்டு எரிப்பு

## தென்னாபிரிக்காவில் சம்பவம்





பிரிட்டோரியா, ஜூன்.25
தென்னாபிரிக்காவில் ஆளுநர் தேர்தலுக்கு ஆளும் கட்சியில் இருந்து வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்டனர். அதையடுத்து தலைநகர் பிரிடோரியாவில் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. ஆர்ப்பாட்டம் வன்முறையாக மாறியதில் நகர பஸ்கள், வர்த்தக மையங்கள் என அரச சொத்துக்கள் தீயிட்டு எரிக்கப்பட்டன.
கடந்த செவ்வாய்க்கிழமை இந்த அசம்பாவித சம்பவங்கள் ஆரம்பமாகின. பொது இடங்களில் வன்முறை செய்த குற்றத்துக்காக 54 பேர் கைது செய்யப்பட்டனர் என அரசு தெரிவித்தது.
ஆளுநருக்கான வேட்பாளர் தெரிவு தொடர்பில் பொது மக்களுடன் கலந்தாலோசிக்கப்படவில்லை என்று தெரிவித்தே ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.
சுமார் 20 பஸ்கள் எரிக்கப்பட்டன. பல வாகனங்களும் தீயிட்டப்பட்டன. வன்முறைகளை அடுத்துப் பல வீதிகள் மூடப்பட்டன.
இந்த வன்முறைகள் யாரால் ஏற்பட்டது என்பது தெரியாது. இந்த வன்முறைக்கு காரணமானவர்கள் தண்டிக்கப்படுவார்கள். அதில் பாரபட்சம் காட்ட[illegible] மாட்டது என்று மத்திய ஆபிரிக்க மாகாணத்தின் பி[illegible]த மர்டேவிட் மகுறா கூறினார். (ற-[illegible]4)



[illegible]ச குத்தியுள்ளார். மகனுக்கு மூளைப் [illegible]ட தழும்பு அவனது மனதில் தாழ்வு [illegible] தனது தலையிலும் அவ்வாறான [illegible]நிறுவனத்தால் நடத்தப்பட்ட சிறந்த [illegible]ம்பத்தினர் அனுப்பினர். 5 ஆயிரம் [illegible]றார். (ற-ரி4)

# தைரியமிருந்தால் கருணாநி[illegible] சட்ட சபைக்கு வரட்டும் பார்ப்போ[illegible]

## தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா சவால்

சென்னை, ஜூன் 25
கச்சதீவு விவகாரத்தில் தி.மு.க. தலைவருக்கு தைரியம் இருந்தால் அவைக்கு வந்து பதில் கூறட்டும் இவ்வாறு சவால் விடுத்தார் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா.
சட்டசபையில் ஆளுநர் உரை மீதான விவாதத்துக்கு நன்றி தெரிவித்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
இரண்டாவது முறையாக என்னை முதல்வராக்கிய மக்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். மக்கள் சக்தியைக் கொண்டு கடந்த காலத்தில் செயல்பட்டதால்தான் மக்கள் மீண்டும் ஆட்சியை வழங்கியுள்ளனர். மக்கள் நிம்மதியாக வாழ பல திட்டங்களை அரசு செயற்படுத்தியுள்ளது. அதனால்தான் மக்கள்



மீண்டும் ஆட்சியைத் தமக்கு வ[illegible] யுள்ளனர்.
கச்சத்தீவு தொடர்பாக கருண[illegible] விளக்கம் கொடுத்தார். கச்சத்தீவு[illegible] சட்டசபையில் பேசாமல் வெளி[illegible] இருந்து பேசுகிறார். கேள்விக[illegible] பயந்து தி.மு.கவினர் கூச்சல் கு[illegible]தில் ஈடுபடுகின்றனர்.
கச்சத்தீவு பிரச்சினையை எடுத்[illegible] தி.மு.க.வினர் ஓடுகின்றனர். கச்ச[illegible] விவகாரத்தில் வழக்குத் தாக்கல் [illegible] மாறு வாஜ்பாய் சொல்லியும் கரு[illegible]நிதி ஏன் முன்வரவில்லை?. கச்ச[illegible] குறித்து பதில் அளிக்க கருணாநி[illegible] திமுகவினர் சட்ட சபைக்கு அ[illegible] வரவேண்டும் - என்றார். (ற-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிறப்பு முதல் இறப்பு வரை
## பிறந்த எண்ணின் பலன்கள் 8

(பிறந்த எண்ணின் பலன்கள் என்ற தொடரில் பிறந்த எண் 8 குறித்த விவரங்கள் கீழே பிரசுரமாகின்றன.)

8 ஆம் எண்ணில் பிறக்கும் போதே, மனிதன் விதியின் வசப்படுகிறான், 8 ஆம் எண் பிறவி எண்ணாக வரும்போது. வாழ்க்கையில் கடும் போராட்டத்தையும், உடலில் அல்லது மனத்தில் ஏதாவது சிறிய நோயையும் கொடுத்து விடுகிறது. ஆனால் விதி எண்ணாக வரும்போது, அவனது முயற்சிகளையும், ஊக்கத்தையும் தனது காலத்தில் (30 வயதுக்கு மேல்) கொடுத்து, அவனைத் தடுமாற வைத்து விடுகிறது. அவனது சொந்தங்கள், உறவுகள், நண்பர்கள் அனைவரிடமும் கெட்ட பெயர் அல்லது அவமானம் அடைய நேரிடுகிறது. பின்பு அவனை தன் வழியே போராடும் குணத்தை 8 எண் வாரி வழங்குகிறது. புதிய சூழ்நிலை, புதிய மனிதர்கள், புதிய ஊர் என்று ஒரு புதிய அற்புத வழியைத் திறந்து விடுகிறது. எனவே மக்களும், தங்களது கடுமையான உழைப்பால் வாழ்க்கையின் உச்சியை 45 வயதுக்கு மேல் எப்படியும் அடைந்து விடுகிறார்கள். இதுவே அனுபவ உண்மை ஆகும்.

பாடசாலையில் தனது போதனையாலும் தேவைப்பட்டால் தண்டனையாலும் ஒரு மாணவனைச் சீர்திருத்தும் ஆசிரியரைப் போன்றவரே சனீசுவரராவார். எனவே 8 ஆம் எண் விரும்பத் தக்கதேயன்றி வெறுக்கத்தக்கதன்று. சில அன்பர்கள் கோடீஸ்வரர் குடும்பத்தில் பிறந்திருப்பார்கள்.

இவர்கள் என்னதான் வசதி மிகுந்த நிலையில் வாழ்ந்தாலும், வண்டுகள் துளைத்த மாங்கனியைப் போல் உள்ளக் குடைச்சல்கள் நிறைந்தவர்கள். மனத்தில் ஏதாவது ஒரு சோகத்தையும், வியாதியையும் வைத்துக் கொண்டு, மனதில் நிம்மதியில்லையே என்று அலைவார்கள். பாசமாவது ஒன்றாவது. அது வீதியில்தான் கிடைக்கிறது' என்று புலம்புவார்கள்.

ஏதாவது ஒரு பெரிய குறை அல்லது குறைபாடு மனதை அரித்துக் கொண்டே இருக்கும். குழந்தையில்லை, மனைவியால் இன்பமில்லை. நண்பனால் சுகமில்லை என்று எதையாவது நினைத்துத் தங்களை வருத்திக் கொள்வார்கள்.

வாழ்க்கையை வெறுத்து முதியோர் இல்லம், ஆன்மிக மடங்கள், அநாதை இல்லங்கள் ஆகியவற்றில் இருப்பவரும், அதனை ஆரம்பிப்பவரும் 8 ஆம் எண் காரர்களேயாகும். 'எட்டாவது பெண் பிறந்தால் எட்டிப் பார்த்த இடமெல்லாம் குட்டிச்சுவர்' என்பது பழமொழி. மக்களும் 8, 17, 26 ஆகிய திகதிகளைக் கண்டுதான் பயப்படுகிறார்கள். எந்தவொரு நற்காரியத்தையும் தவிர்த்து விடுகிறார்கள்.

8, 17, 26 ஆகிய திகதிகளில் பிறந்தவர்களும், 8 ஆம் எண்ணை விதி எண்ணாக உடையவர்களும் 9ஆம் எண்ணில் தங்களது பெயரை உடையவர்களும், தங்களது வாழ்வில் பல தோல்விகளையும், வேதனைகளையும், சில அவமானங்களையும் சந்தித்தே ஆகவேண்டும் என்பதே 8 எண் கூறும் வாழ்க்கை நியதி.

8 ஆம் எண்ணில் பிறந்த அதிர்ஷ்டசாலிகள் (சனி வலிமை நல்லநிலையிலிருந்தாலும்) பெருத்த தனவான்களாகவும், பல்வேறு தொழில்களை உடையவர்களாகவும், நல்லவர்களாகவும் இருப்பார்கள். தியாகிகளாகவும், அருளாளர்களாகவும், சிறந்த நீதிபதியாகவும், பேராசிரியர்களாகவும், அமைச்சர்களாகவும், உயர் அதிகாரிகளாகவும், கோடீஸ்வரர்களாகவும் இருப்பார்கள். ஆனால் 8 ஆம் எண்ணில் பிறந்த மற்றவர்கள் தங்களது பிரச்சினைகளிலிருந்து விடுபட முடியாமல் வாழ்க்கை முழுதும் தவிக்கின்றவர்களே. பெரும்பாலும் கொலை, களவு, கொள்ளை, கடத்தல், பொய்க்கையெழுத்து வன்புணர்வு, குடி, சூது, நம்பிக்கைத்துரோகம் போன்ற பல்வகை சூழ்நிலைகளில் மாட்டிக் கொண்டு தவிக்கின்றார்கள்.

ஆனால் மேற்சொன்ன துர்ப்பலன்களைக் கண்டு வாசகர்களே பயப்படவேண்டாம்! 8ஆம் எண்காரர்களும் அதிர்ஷ்டம் மிகுந்த வாழ்க்கை வாழ வேண்டுமெனில் தங்களது பெயரை மிகவும் ஆராய்ந்து, நல்ல பெயர் ஒலியிலும், பெயர் எண்ணிலும் வைத்துக்கொண்டால், தங்களது கெட்ட விதியைக்கூட மாற்றிவிட முடியும். பல அன்பர்கள் பெயரை சீர் படுத்தி பயனடைந்துள்ளார்கள்.

எனவே கவலைப்படவேண்டாம். அது மட்டுமன்று பிரபல சினிமா நட்சத்திரங்களும், பெருத்த வியாபாரிகளும் தனவந்தர்களும் அதிகாரிகளும், கோடீஸ் வரர்களும் 8 ஆம் எண்ணில் தான் பிறந்துள்ளனர். தெய்வ நம்பிக்கை இவர்களிடம் தீவிரமாகவே உண்டு. ஒன்று கடவுளே இல்லை. என்று வாதிடுவார்கள். அல்லது கடவுளே கதி என்று இறைவனை நம்புவார்கள்.

தங்கள் நல்லதென்று நினைத்து, எடுத்து செய்கின்ற காரியங்களை எவ்வளவு எதிர்ப்புகளும் தடைகளும் வந்தாலும், அவைகளைப் பற்றிக் கவலைப் படாமல் செய்து முடிக்கும் வலிமை இவர்களுக்கு உண்டு. ஓரளவு பிடிவாத குணம் நிறைந்தவர்கள்.

(தொடரும்)

---

திருமதி சித்ரூபினி விஜயநேசன்

# விதவைகளின் வாழ்வில் ஒளியூட்டுவது அனைவரதும் சமூகப் பொறுப்பாகும்

உலகம் முழுவதும் கணவன்மாரை இழந்து ஆதரவின்றித் தவிக்கும் பெண்களின் நிலை குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் ஜூன் 23ஆம் திகதியை பன்னாட்டு விதவைகள் நாள் என ஐ.நா. சபை அறிவித்துள்ளது. இந்த நாளில் உலகம் முழுவதும் உள்ள கோடிக்கணக்கான கைம்பெண்கள் சந்தித்து வரும் பிரச்சினைகள் மற்றும் இன்னல்கள் குறித்து ஐ.நா. கண்காணித்து தீர்வுக்கு வழி வகுக்கும்.

விதவைத் தன்மை ஒவ்வொரு பெண்ணையும் வறுமையில் தள்ளி அவர்களுக்கான அடிப்படை உரிமைகளை மறுத்து, அவர்களது வாழ்வாதாரத்தைக் கேள்விக்குறியாக்கியுள்ளது. குறிப்பாகக் கணவனை இழந்த ஒரு பெண் எந்தக் காரியங்களிலும் பங்கேற்க விரும்புவதில்லை. அப்படி அவள் பங்கேற்க நினைத்தாலும் சமூகம் அவளை அபசகுனம் எனக் கருதி அங்கீகரிக்க மறுக்கின்றது.

ஜூன் 23 பன்னாட்டு விதவைகள் தினம்

விதவைகள் விழி இருந்தும் குருடர்களாக சமூகத்தில் வலம் வந்து கொண்டிருக்கின்றார்கள். அவர்களது உணர்வுகளுக்கு போதிய மதிப்பளிக்கப்படுவதில்லை. இதனால் கடுமையான மன அழுத்தம், வடுக்கள், சோதனைகள், வாழ்வியல் போராட்டம் எல்லாவற்றையும் எதிர்கொண்டு நிற்கிறார்கள்.



தொழில்வாய்ப்பின்மை, பொருளாதாரக் கஷ்டம், வறுமை, பாதுகாப்பின்மை, வன்முறைக்கு உள்ளாதல், மோசமான சமூகப் பார்வை, பிள்ளைகள் இருந்தால் அவர்களின் கல்வி, சுகாதாரம், போசாக்கு என்பவற்றில் உரிய கவனம் செலுத்த முடியாமை, சிறு விடயத்துக்கேனும் பிறரின் தயவை நாடவேண்டிய சிக்கல் ஆகியனவற்றுக்குப் பெரும்பாலான விதவைகள் முகங்கொடுக்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

அச்சம், எதிர்கால நிச்சயமற்ற தன்மை, வெட்கம், தன்னம்பிக்கை இன்மை, சரியான தூக்கமின்மை, குற்ற உணர்வு, கோபம், உள அதிர்ச்சி போன்ற உளவியல் சிக்கல்களையும் இவர்கள் எதிர்நோக்குகின்றனர். இலங்கையில் ஏறக்குறைய மூன்று தசாப்தங்களாக ஏற்பட்ட போர் காரணமாக ஏனைய மாகாணங்களைவிட அதிக விதவைகளை வடக்கு - கிழக்கு மகாணங்கள் உள்ளடக்கியுள்ளன.

வடக்கு - கிழக்கில் மட்டும் ஏறக்குறைய 1 லட்சம் பேர் விதவைகளாக வாழும் அதேவேளை யாழ்ப்பாணத்தில் மட்டும் 27 ஆயிரம் பேர் கணவரை இழந்து வீட்டுத் தலைமைப் பொறுப்பை ஏற்றுச் செயற்பட்டு வருகின்றனர். அந்தவகையில் 2009ஆம் ஆண்டு போர் நிறைவடைந்தாலும், கணவன்மாரை இழந்தவர்களின் சமூகப் போர் தொடர்கின்றது.

பல நடுத்தர வயது விதவைகள் தனியாக வாழ்கின்ற அதே வேளை பெரும்பாலான இளம் விதவைகள் பெற்றோருடனோ அல்லது உறவினர்களுடனோ தங்கி வாழ்கின்றனர். அவர்கள் சில தொண்டு நிறுவனங்கள் மற்றும் அரசின் அற்ப உதவியுடன் வாழ்கின்றனர். சில விதவைகள் அன்றாடம் தொழிலுக்குச் சென்று கிடைக்கும் சிறு வருமானத்தில் வாழ்கின்றனர். தொழில்புரியும் இடங்களில் அவர்களது பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் நிலவுகின்றது. பெண்களைப் போற்றிப் புகழ்ந்து காவியம் படைத்து போராட்டம் நடத்தி, மேடைப் பேச்சுக்களால் அதிர வைத்து முன்னேறியவர்கள் பலர். ஆனால் நடைமுறையில் விதவைகளின் பிரச்சினைகள் தொடர்பில் ஒதுங்கி நிற்கின்றனர்.

சில அரசியல்வாதிகள் விதவைகளில் ஒரு சிலரைத் தெரிவு செய்து வாழ்வாதார உதவிகள் வழங்கி, ஊடகங்களில் விளம்பரப்படுத்தி விடுவதோடு தம் பணி முடிந்துவிட்டது என்றெண்ணி விடுகின்றனர். இவர்கள் தம் உதவியால் விதவைகள் பெறும் வருமானம் போதுமானதாகவுள்ளதா என்பதைப் பார்க்கத் தவறி விடுகின்றனர். ஆகவே பல்வேறு பிரச்சினைகளுக்கு மத்தியில் வாழும் விதவைகளின் வாழ்வை ஒளிமயமாக்கும் சமூகப் பொறுப்புடன் செயற்படுவது சமூக ஆர்வலர்களினதும் சமூக அமைப்புக்களினதும் கற்றோர்களினதும் பொறுப்பாகும்.

*கட்டுரையாளர்: ஆசிரியை யா/நவாலி மகா வித்தியாலயம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ந. சதாசிவஐயர்



# வடமாகாண காணிப் பிரச்சினைகளுக்கு தீர்வுதான் என்ன?

நீண்டகால அவலத்தின் பின் மெல்ல மெல்லத் திரும்பிக் கொண்டிருக்கின்றது வடமாகாண மக்களின் இயல்பு நிலை. அரசுடனும் பெரும்பான்மையுடனும் போராடிக் கொண்டிருக்கும் நிலையில் நமக்குள் நாமே அடிபட்டுக் கொள்வதைத் தவிர்க்க முடியாதிருப்பது கவலைக்குரிய விடயமாகும்.

காணிப்பிரச்சினையே இதற்கு முக்கிய காரணமாக உள்ளது. வடக்கில் யாழ். மாவட்டம் பெருமளவில் தனியார் உரித்துக் காணிகளை கொண்டிருக்கும்போது, ஏனைய நான்கு மாவட்டங்களும் அரச காணிகளையே பெருமளவில் கொண்டுள்ளன.

தனியார் காணிகளைப் பொறுத்தளவில் உறுதிகளே உரித்தை உறுதிப்படுத்துகின்றன. ஆனாலும், யாழ். காணிப்பதிவகத்தில் 1940ஆம் ஆண்டுக்கு முன்னயதான உறுதிகள் எவையுமில்லை. காணிப் பதிவேடுகளிலும்கணிசமான இழப்புக்கள் உள்ளன. 1983 முதல் 2010 வரை யாழ். காணிப்பதிவகமானது பத்துமுறை இடம்மாறியுள்ளது. பூனை, குட்டியைக் காவுவதுபோல் உறுதிகளும் பதிவேடுகளும் அங்கும் இங்கும் காவப்பட்டுப் பாதுகாக்கப்பட்டுள்ளன. அதுமட்டுமன்றிநொத்தாரிஸ் கட்டளைச்சட்டமும் ஆவணப்பதிவு கட்டளைச் சட்டமும் நூறு வருடங்களுக்குமேல் பழைமையானவையாகக் காணப்படுகின்றன. 1983க்குமுன்னரும்கூட, யாழ்ப்பாண நீதிமன்றுகள் காணிவழக்குகளால் நிரம்பி வழிந்தன என்பதும் மறுக்க முடியாத உண்மை. பொதுவான சட்டங்களுடன் வடக்கில்வலுவிலஉள்ள சிக்கல்கள் நிறைந்த தேசவழமைச் சட்டமும் சேரும்போது முடிவெடுப்பதில் சிக்கலும் தாமதமும் தவிர்க்க முடியாதவையாகின்றன.

கிளிநொச்சி, முல்லைத்தீவு காணிப்பதிவக ஆவணங்களில் மிகக் குறைந்தளவான ஆவணங்களே எஞ்சியுள்ளன. தனியார் காணிகள் தொடர்பிலான பிரச்சினைகள் உரிய ஆவணங்கள் இல்லாததால் மட்டுமன்றி இருக்கும் ஆவணங்கள் போதிய ஆதாரமானவையாக இல்லாதிருப்பதால் தீர்க்க முடியாதவையாக உள்ளன. அதுமட்டுமன்றி மிகப்பழைமையான நொத்தாரிஸ் கட்டளைச் சட்டம், ஆவணப் பதிவுக் கட்டளைச் சட்டம் என்பவற்றை ஆதாரமாக வைத்துக்கொண்டு பொறுப்பற்ற முறையில் உறுதிகளை வரைவதும் அத்தாட்சிப்படுத்துவதுமே அதிகமான காணிப்பிரச்சினைக்கு காரணங்களாக அமைகின்றன.

அரச காணிகளைப் பொறுத்தளவில் அந்தக் காணி எவருக்கு வழங்கப்பட்டது? எதற்காக வழங்கப்பட்டது? என்பதை அறிவதில் சிக்கல் காணப்படுகின்றது. அதன் வழங்கல் கை மாற்றம் பதிவு என்பன அரசின் கைகளிலேயே உள்ளன. காணியைப் பெற்றவர் தத்தனை ஆவணங்களை ஆதாரமாக வைத்திருந்தாலும், அதனை அவர் எதற்காக வழங்கப்பட்டதோ அதற்காக உபயோகித்தாரா? இல்லையா என்பதைப் பார்ப்பதும், அனுமதிப்பதும் இல்லாது செய்வதும் அரச அதிகாரிகளிலேயே தங்கியுள்ளது. அரச அலுவலகப் பதிவேட்டில் எப்படி உள்ளதோ அப்படியே முடிவெடுக்கப்படும். அரச அதிகாரிகள் உரிய முறைப்படி செயற்படாதபோது, அதனால் தாம் பாதிக்கப்படுவதாக அறியும்போது ஒருவர் அரசுக்கு எதிராக நீதிமன்றை நாட முடியும்.

அரச அதிகாரிகளுக்கு வழிகாட்டுவதற்குச் சட்டங்கள், நிலையியற் கட்டளைகள், சுற்றறிக்கைகள், படிவங்கள் உள்ளன. இதற்கமையவே அவர்கள் செயற்படுவர். இன்று கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் எழுந்துள்ள காணிப் பிரச்சினைகளுக்குக் காரணம் அதிகாரிகள் சட்டப்படி தம் கடமையைச் செய்ததேயாகும். அரச காணி மக்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படுவது, மக்களுக்கு வசதிகளைச்செய்து கொடுத்து வாழ்வாதாரத்தை மேம்படுத்தி, நாட்டின் அபிவிருத்தியை மேம்படுத்துவதற்காகும். அதற்குத் தகுந்தவாறே சட்டங்களும் ஆக்கப்பட்டன, செயற்படுத்தப்பட்டன. ஆனால், காணி எந்த நோக்கத்துக்காக கொடுக்கப்பட்டதோ அந்த நோக்கம் உரியவரால் நிறைவேற்றப் படாதபோது அதனை மீளப் பெற்று வேறொருவருக் குக் கொடுக்கும் அதிகாரம் அதிகாரிகளுக்கு உண்டு.

ஆனால், போர் சூழ்நிலையால் எதற்காகக் காணி தரப்பட்டதோ அதனை நிறைவேற்ற முடியாமல் உரியவர் விட்டுப்போக வேறொருவர் அதனை பொறுப்பேற்கிறார். போர் முடிந்த பின் முன்னவர் வந்து பார்க்கும்போது வேறொருவர் இருக்க, நானா? நீயா? எனும் பிரச்சினை எழுகின்றது. அதே வேளை, அரச காணியாக இருந்தாலும் வழங்கப்பட்ட சட்ட முறையின் கீழ் காணி பெற்றவர் தனியார் காணி போன்று உரித்துக் கோரும் உரிமை உள்ளவிடத்து அவர் நீதிமன்றை நாட வேண்டிய நிலை ஏற்படுகின்றது. ஆனாலும், ஆவணரீதியாகச் சாட்சியங்கள் போதுமானவையாக இருப்பதில்லை. அதிகாரிகளிடமும் இவை இல்லை.

போர் நடைபெற்றவேளையில் தலை தப்பினால்போதும் எனும் நிலையில் கைத்துண்டு மூலம் காணியை அறா விலைக்கு கொடுத்துச் சென்றவர்களும் உண்டு. இப்போது வந்து மீள உரிமை கோருகின்றனர். இப்படியான பிரச்சினைகளுக்கு அரச அதிகாரிகள் முகம் கொடுத்து, தம்மால் முடிந்த அளவு தீர்வு கண்டு வருகிறார்கள். அவர்கள் போரால் பாதிக்கப்பட்ட மக்கள் என்பதற்காக வேறு விதமாக தன்னிச்சையாக முடிவெடுக்க முடியாது. எமது அதிகாரிகளும் சும்மா இருக்கவில்லை. இதனைக் கவனத்தில் கொண்டு பல அதிகாரிகள் கூடி அமைச்சு மட்டத்தில் ஆராய்ந்து, செயற்படுத்தும் வழிமுறைகள் சிலவற்றை வகுத்தனர். சுற்றறிக்கைகூட வெளி வந்தது.

ஆனால் அதுவும் நடைமுறைச் சாத்தியமற்றதாகியது. வெட்கப்பட வேண்டிய விடயமென்னவென்றால் காணிக்காக சண்டை போடுபவர்களில் பெரும்பாலானோர் இருக்க, வேறு வீடோ, காணியோ இருப்பவர்கள்தான் என்பதும், ஏக்கர்கணக்கான காணி யைப் பகிர்ந்து கொள்ளவோ அல்லது அதில் ஒன்றிரண்டு பரப்புக் காணியைக்கூடவிட்டுக்கொடுக்கவோ விரும்பாதவர்களாய் இருப்பதுமே.

இதன் காரணமாக இன்று வன்னி மாவட்டத்தில் ஒரே காணிக்கு இருவரல்ல மூவர், நால்வர்கூட உரிமை கோரும் நிலையைக் காணக்கூடியதாக உள்ளது. இதற்குத் தீர்வுதான் என்ன? "உன்னைச்சொல்லிக் குற்றமில்லை என்னைச் சொல்லிக் குற்றமில்லை ...." என்ற பாடல் வரிகள்போல். "காலம் செய்த கோலமிது" எனக்கருதி ஓரளவு விட்டுக் கொடுப்புடன் முழுவதும் வேண்டாம் பகிர்ந்துகொள்வோம் என பெருமனதுடன் முன் வரின் பெருமளவு பிரச்சினைகளை அதிகாரிகள் சுலபமாகத் தீர்க்கக்கூடியதாக இருக்கும்.

அதேபோல் புலம்பெயர்ந்து போய் இன்று வெளிநாட்டில் நல்ல நிலையில் இருப்போர் பலர் இங்குவந்து, தங்கள் முன்னோர் காணிகளென உரிமை கொண்டாடிப் பெற்றபின்னர் ஒருசிலர் நல்லகாரியங்களுக்குக் கொடுத்துச் செல்வதும் வேறு, சிலர் தற்போது அத்துமீறி இருப்பவருக்கே குறைந்த கட்டணத்தில் குத்தகைக்குக் கொடுத்துச் செல்வதும் விற்பதும் வரவேற்கத்தக்க விடயங்கள். அதேபோல் ஏனையோரும் நடந்தால் மேலும் கணிசமான பிரச்சினைகள் தீர வழியுண்டு.

இப்போது பிரதேச செயலக மட்டத்தில் இணக்க சபைகள் உள்ளன. மாவட்ட மட்டத்திலும் காணி தொடர்பான இணக்க சபைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அவற்றினூடாக இயன்ற அளவு விரைவாகவும் பணவிரயமின்றியும் உங்கள் காணிப்பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளுங்கள். போகும் போதே என்னாலான அளவு விட்டுக் கொடுப்பேன் என உங்கள் குலதெய்வத்திடம் சொல்லி வணங்கிச் செல்லுங்கள். நிச்சயம் உங்கள் பிரச்சினை தீரும்.

ஆக, இதற்குத் தீர்வுதான் என்ன? எமது மண் எமது மண் என ஒட்டுமொத்தமாக மண் காக்கப் போராடிய நாம், போராடிக் கொண்டிருக்கும் நாம், எத்தனையோ இழப்புக்களை சந்தித்து விட்டோம். இருப்பதற்கு வீடற்று நாதியற்று எத்தனை பேர் நடுத் தெருவில் இருக்கையில், எமக்குள் ஏன் இந்த வீண் சண்டை? இருப்பதைப் பகிர்ந்து கொள்வோம். இல்லாதவருக்கு இயன்றதை விட்டுக்கொடுப்போம் வாருங்கள்!


*கட்டுரையாளர்: ஓய்வு பெற்ற மேலதிக பதிவாளர் நாயகம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வர்ணம்

## தீட்டுவோம் வாங்க....



# சிறுவனின் அறிவு

ஒரு நாட்டின் அரசன் அரண்மனையிலிருந்து அதிகாலையில் எழுந்து ராஜ வீதியைச் சாளரத்தின் வழியாக எட்டிப் பார்த்தான். அப்போது கடைகளில் சிந்திக் கிடக்கும் பொருள்களை சிறுவன் ஒருவன் பொறுக்கி எடுத்துக் கொண்டிருந்தான்.



அரசன் தலையை உள்ளுக்குள் இழுத்தபோது சாளரத்தின் சட்டம் தலையில் இடித்துக் காயம் உண்டாகி சிறிது குருதிகசிந்தது. "இன்று விடியற்காலையில் எழுந்து அந்தச் சிறுவன் முகத்தில் விழித்ததால் எனக்கு குருதிக் காயம் ஏற்பட்டது. மேலும் இப்படியே நாள்தோறும் இவன் முகத்தை எத்தனை பேர் பாப்பார்களோ? அவர்களுக்கு எல்லாம் என்னென்ன தீமைகள் நேரிடுமோ? ஆகையால் அந்த மக்கள் பாதகனை சிரச்சேதம் செய்ய வேண்டும்" என எண்ணி அவ்வாறே சேவகர்களுக்கு அரசன் உத்தரவிட்டான்.

சேவகர்கள் சிறுவனைப் பிடித்து விவரத்தைக் கூறி சிரச்சேதம் செய்வதற்குக் கொண்டு சென்றார்கள். அப்பொழுது அந்தச் சிறுவன் "நான் ராஜாவைப் பார்த்து ஒரு வார்த்தை சொல்ல வேண்டும். அதன் பிறகு உங்கள் காரியத்தை நிறைவேற்றலாம்" என்று தயவுடன் கேட்டுக் கொண்டான்.

சேகவர்கள் அரசனிடம் அதைக் கூறி அனுமதி பெற்று அவனைக் கொண்டுபோய் அரசன் முன் நிறுத்தினார்கள். அவன் ராஜாவை வணங்கி, "அரசர் பெருமானே! இன்று உங்களுக்கு ஏற்பட்ட சிறிய சங்கடம் என் முகத்தில்விழித்ததினால் உண்டாயிற்று என்று என்னைச் சிரச்சேதம் செய்யுமாறு உத்தரவிட்டீர்கள். ஆனால் நானோ தூங்கி எழுந்து முதன் முதலில் உங்கள் முகத்தைப் பார்த்ததால்ணைக்குத்தலையை வெட்டக்கூடிய தண்டனை நேரிட்டதே! இதற்கு என்ன தீர்ப்பு என்று கேட்டுத் தெரிந்து கொண்டு பிறகு என் தலையைக் கொடுக்கலாம் என்று வந்தேன்" என்றான் சிறுவன்.

ராஜா அதைக் கேட்டதும் திடுக்கிட்டு சிறுவனுடைய அறிவைப் பாராட்டி தண்டனையை உடனே நீக்கி அரண்மனையிலேயே அவனை வைத்துக் கொண்டான்.

# அன்னை தெரேசா

*(கடந்த சனிக்கிழமை வெளிவந்த பகுதியின் தொடர்ச்சி)*

1979 ஆம் ஆண்டு டிசெம்பரில் ஒஸ்லோ சமாதானத்துக்கான நோபல் பரிசு அன்னை தெரேசாவுக்கு வழங்கப்பட்டது. இந்த விழாவுக்கு வந்திருந்த அன்னையின் சகோதரர் லாசர் அன்னையின் இளமைக் காலத்தைப் பற்றி ருசியான சில தகவல்களை உலகுக்கு வெளிப்படுத்தினார். தன் தங்கை சமாதானத்துக்கான நோபல் பரிசு பெற்ற விழாவில் கலந்துகொள்ள வந்த அவர், தன் தங்கையைப் பற்றிய சில குறிப்புக்களைச் சொன்னார்.



"குழந்தையாயிருந்தபோது நாங்கள் அவளை ஆக்னேஸ் என்று அழைக்கமாட்டோம். அரும்பு தன்னுள் தேக்கி வைத்திருக்கும் நறுமணத்தை நேரம் முதிரும்போது இதழ் விரித்து வெளிக்கொணரும். அரும்பை மொட்டு என்றுதான் கூப்பிடுவோம். இதை எங்களுடைய மொழியில் "கோங்ஹா" என்று சொல்வோம். எனது தங்கை சிவந்த மேனி, கொழுத்த கன்னங்கள் கொண்டவள். அவள் எப்போதும் சுத்தமாக இருப்பாள். பிறருக்கு உதவும் இதயமும் கரங்களும் உடையவள். நான் சிறுவனாயிருந்தபோது எனக்கு இனிப்பு வகைகள் மிகவும் பிடிக்கும். இரவு நேரங்களில் அடிக்கடி சமையலறைக்குப் படையெடுப்பேன். உணவு வைத்திருக்கும் பேழையையும் நான் அடிக்கடி திறப்பேன். கோங்ஹா ஒருத்தி மட்டுமே பழ ஊறல்களை ஒருபோதும் திருடித் தின்னாதவள். மாறாக நள்ளிரவுக்கு பின் எந்த உணவையும் தொடக்கூடாது என்று நினைவூட்டுவாள்.

சிறப்பாக மறுநாள் காலையில் திருப்பலிக்குப் போய் நற்கருணை வாங்க வேண்டுமானால் முன்னைய விதிமுறைப்படி நடுச்சாமம் தொடங்கி நன்மை வாங்கும் வரை ஒன்றும் சாப்பிடாமலும் குடியாமலும் இருக்கவேண்டும் என்பதை நினைவூட்டுவாள். ஆனால் அண்ணன் சமையலறைக்கு உணவுப் பேழையைத் தேடிப்போகும்போது இது பற்றித் தாயிடம் ஒருபோதும் கோள் சொன்னதில்லை.

கோங்ஹாவின் தாய் உயர்ந்த மதிப்பீடுகள் மீது மென்மையான உணர்வு உடையவர். குழந்தைகளாகிய நாங்கள் எங்கள் தாயை "நானாலோக்" என்று செல்லமாக அழைத்தோம். "நானா" என்பதற்கு "தாய்" என்றும் "லோக்" என்பதற்கு "ஆன்மா" என்றும் அர்த்தமாகும். "என் ஆன்மாவின் தாய்" என்பது இதன் பொருள். எதையும் வீணாக்குவதோ, விரயம் செய்வதோ, சேதமாக்குவதோ, பாழ்படுத்துவதோ இவருக்கு ஒருபோதும் பிடிக்காது.

ஒருநாள் மாலை குழந்தைகள் தங்கள் தாயைச் சுற்றி அமர்ந்திருந்தனர். இந்தச் சத்தம் பல குருவிகள் ஒன்று சேர்ந்து கத்தினால் எப்படியிருக்குமோ அப்படித்தான் இருந்தது. இப்படியே அவர்கள் வெகு நேரம் பேசிக்கொண்டிருந்தனர். இவர்கள் அர்த்தமில்லாமல் இப்படிக் கத்திப் பேசிக் கொண்டிருந்த முழுநேரமும் இவர்களின் தாய் ஒன்றுமே பேசாமல் மௌனமாகவே இருந்தார். இறுதியாக அந்த அறையை விட்டு வெளியே போனார். மின் விசையை அணைத்தார். வீடு முழுவதையும் இருள் ஆக்கிரமித்துக் கொண்டது. இருளில் மூழ்கிய வீட்டில் அன்னையின் வார்த்தைகள் தெளிவாகவே அனைவர் காதிலும் விழுந்தன. "இதுபோன்று சிறுபிள்ளைத் தனமான பயனற்ற பேச்சுக்காக மின்சாரத்தை விரயமாக்கக்கூடாது" என்றார்.

*(அடுத்த சனிக்கிழமை தொடரும்)*

# வரலாற்றில் இன்றைய தினம்

1658 - ஆங்கிலோ - ஸ்பனிஷ் போரின்போது ஜமைக்காவை மீட்டெடுப்பதில் ஸ்பானியப் படைகள் தோல்வி கண்டன.

1935 - சோவியத் யூனியன் மற்றும் கொலம்பிய நாடுகளிடையே ராஜரீக உறவு ஏற்படுத்தப்பட்டது.

1940 - இரண்டாம் உலகமகா போர்: பிரான்ஸ் ஜேர்மனியிடம் உத்தியோக பூர்வமாகச் சரணடைந்தது.

1943 - போலந்து கெற்றோவில் யூதர்கள் நாஸிகளுக்கு எதிராக எழுச்சி கொண்டனர்.

1950 - தென்கொரியா மீது, வடகொரியா ஆக்கிரமிப்பை மேற்கொள்ள முயன்றதை அடுத்து கொரியா போரைத் தொடங்கியது.

1967 - எமது உலகம் எனும் நேரலைத் தொலைக்காட்சி ஒளிபரப்பு சற்றலைற் ஊடாக மேற்கொள்ளப்பட்டது.

1975 - மொசாம்பிக் சுதந்திரம் அடைந்தது.

1982 - இராணுவத்தில் சேர்பவர்களின் தலைமுடியை வழிக்கும் செயற்பாட்டை கிரேக்க நாடு இல்லாமல் செய்தது.

1991 - யூகோஸ்லேவியாவிடமிருந்து குரேஷியாவும் ஸ்லோவேனியாவும் தமது சுதந்திரத்தைப் பிரகடனப்படுத்தின.

1992 - பூசா தடுப்பு முகாமில் இடம்பெற்ற கோஷ்டி மோதலில் ஒருவர் சாவு, 62 பேர்க்குக் காயம். தமிழருக்குப் பாதிப்பில்லை.

1992 - மலாயன் - இலங்கையர் சங்கத்தால் ஜீம்மா மசூதி வீதியில் 30 லட்சம் ரூபா பெறுமதியான காணி யாழ்.பல்கலைக்கழகத்துக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

1992 - பாலஸ்தீனருக்கு சுயாட்சி வழங்குவது பற்றி இஸ்ரேலிய புதிய அரசு ஆராயும் எனத் தெரிவிப்பு.

1993 - கனடாவின் முதல் பெண் பிரதமராக கிம் கம்பல் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

1993 - சர்வதேச மனித உரிமைகள் மாநாட்டில் வியன்னாப் பிரகடனம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

1996 - சவுதி அரேபியாவில் இடம்பெற்ற கோபர் கோபுர குண்டுத் தாக்குதலில் 19 அமெரிக்க ஆயுதப் படையினர் கொல்லப்பட்டனர்.

2004 - அமெரிக்க படைகளுக்குப் போர்க் குற்றங்களிலிருந்து விலக்களிக்கும் பிரேரணையை ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் நிராகரித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உடுவிலூர் கலா

# வன்முறையை வன்முறை செய்வோம் வாரீர்

உலக இயக்கமே பெண்தான். சமுதாய உட்கருவும் பெண்தான். குடும்பத்தின் குல விளக்கும் பெண்தான். இவற்றுக்கெல்லொம் மாறாக பெண்களுக்கெதிரான வன்முறைகளில் பெண் முழுமையாகத் தோய்ந்துள்ளாள். பெண் பிறர்க்கென வாழும் பொது நலவாதி. பெண் விடுதலை கிடைத்து விட்டது என்பதைவிட பெண்களுக்கான வன்முறை வலுப்பெற்றுவிட்டது என்பதே உண்மை. நாளாந்தம் வலிகளையும் வேதனைகளையும் பெண்கள் சுமக்கின்றனர். ஆனாலும், நாட்டுக்கும் வீட்டுக்கும் நன்மையே செய்கின்றனர். ஆணாதிக்கத்தின் கோரப்பிடிக்குள் பெண் நடைப்பிணமாகிச் சேவை செய்கிறாள்.

பண்டைக்காலம் தொட்டு இற்றைவரை இணையங்கள், மெகாத் தொடர்கள் எல்லாமே பெண்களுகெதிரான வன்முறைகளை நடைமுறைப்படுத்தத் தவறவில்லை. "எங்கு வந்தாய் போ" எனக் கத்திய தக்கன் முதல் அக்கினிக் குளியல் வைத்த இராமன் வரை ஆணாதிக்கத்தை நிலை நிறுத்தினர். ஏன் இன்றைய நவீனப் பெண்கள்கூட ஆணாதிக்கவலையில் அகப்பட்டுக்கொண்டுவெளிவர முடியாமல் தத்தளிக்கின்றனர். அன்றும் பெண்களால் எந்த ஒரு முடிவையும் எடுக்க முடியவில்லை இன்றும் அதே நிலைதான். ஆனால், கல்வியில் ஆண்களைவிட முன்னேறிவிட்டனர் இன்றைய பெண்கள்.

தமது பிள்ளைகளையும் முழுமையான கல்வியைப் பெற்றுக்கொள்வதற்காகப் பாடாய்ப் படுகின்றனர்.

வன்முறைகளால் பல பெண்கள் வாழாமலே மடிந்துள்ளனர். பாலியல் வன்முறைகள் சமுதாயத்தில் பெரும் பதிவுகளை இட்டுள்ளன. பாடசாலையொன்றில் கழிப்பறையில் சி.சி.ரி.வி கமரா பொருத்தப்பட்ட செய்தியானது அந்தப் பாடசாலையின் பெண் ஆசிரியர்களைப் பார்வை ரீதியான வன்முறைக்குள் இட்டுச்சென்றது. கல்வி போதிக்கும் அரச பாடசாலைகளில் இப்படி என்றால், பிரத்தியேகக் கல்வி நிலையங்களை எவர் கேள்வி கேட்பது? பெண்கள் இலக்கு நோக்கிப் பயணிக்கிறார்கள். அவர்களது இலக்கைத் தோற்கடிக்க ஆணாதிக்கம் தன் வக்கிர கரங்களால் பெண்மையை அடித்து நொறுக்குகிறது. பெண் மாடாய் உழைக்கிறாள். எருது மாடும் பெண்களும்சமம்என்பார்கள். அந்தளவுக்கு [illegible]பர்ந்து வேலை செய்யும் பெண்களை நன்[illegible] புணர்வின்றி ஆணாதிக்கம் சிறை கொள்கி[illegible]து.

அன்று கல்வி வாசனை தெரியாத பெ[illegible]ணகள் இன்று கல்வியால் சகல துறைகளிலு[illegible] கால் பதித்து விட்டனர். கட்டளையதிகாரியா[illegible] பல ஆண்களுக்குக் கட்டளையிடுகின்றன[illegible] தன் பிள்ளைகளுக்கு மட்டுமல்ல சமுதாய[illegible]க்கே கல்வி புகட்டுகின்றனர், சேவை மனப்[illegible]மை யுடன் சேவை செய்கின்றனர். ஆ[illegible]திக்க வன்முறைகளுக்கும் முகம் கொடுத்து [illegible]முது மாய்கின்றனர்.

ஆண்கள் செய்யும் அராஜகங்கள[illegible] ஒரு பொருட்டாக மதிக்காத சமூகத்தில் பெ[illegible] எடுபிடியாக, கிள்ளுக் கீரையாக வாழும் [illegible] வலம் சொல்லி மாளாது. பெண்களின் இந்த நிலையை யாரும் சிந்திப்பதாகவோ உணர்வதாகவோ இல்லை. ஏன் பெண்களே தங்களது அடிமை நிலையை உணர்ந்து வெளிவருவதில்லை. ஆணாதிக் கத்தின் தோல் உரிக்கப்பட வேண்டுமானால் பெண் தன்னிலையை முதலில் உணர வேண்டும்.

வன்முறைகளை வெளிக் கொணராது மூடி மூடி வாழ்வது பாரதூரமான வன்முறைகளைத் தோற்றுவிக்கும். ஆண்களால் பெண்களுக்கு வன்முறை செய்து வாழமுடியுமானால் பெண்களாலும் அவற்றுக்கெதிராக வாழ முடியும். சில விடயங்களில் பெண்கள் பொறுமையோடு பணிந்து செல்வதை அடிமைத்தனம் எனக் வீரமுழக்கம் இடும் ஆண்கள் அவர்களின் பொறுமையைச் சோதிக்கிறார்கள். ஆணாதிக்க சிந்தனைகளை அக்கம் பக்கம் முன்பின் எனக் கண்டு அனுபவித்த பெண்கள் இனியும் அவற்றுக்கு துணைபோகாது துணிந்து எழ வேண்டும். உடனுக்குடன் தட்டிக் கேட்க வேண்டும். அடுத்த வீட்டுப் பெண்ணுக்கு அடி விழுந்தால் உடனே குரல் கொடுப்பதை விடுத்து வீண் வம்பு என ஒதுங்கினால் ஆண்களின் கரங்கள் பெண்களை அடித்துக் கொண்டே யிருக்கும். எனவே எங்கெங்கு வன்முறைகள் தெரிகின்றனவோ அங்கு அவற்றின் சிரசைக் கொய்வதற்கு பெண்கள் தயாராகவேண்டும்.

அது மட்டுமல்ல வன்முறைக்குள்ளாகும். பெண்கள் எவராக இருப்பினும் கௌரவத்துக்குப் பயந்து மூடி மூடி வாழ்வதை விடுத்து தம் மீதான வன்முறைகளை எவருக்காவது தெரிவிக்கவேண்டும். வீராங்கனை சுசந்திகா தன் கணவனின் வன்முறைகளை அம்பலப்படுத்தி "பத்து வருடங்கள் சிறையில் அடைத்தாலும் தண்டனை அனுபவிப்பேன். எனக்கு விடுதலை வேண்டும்" எனக் கூறியது போல் ஒவ்வொரு பெண்ணும் தமக்கான வன்முறைகளை அம்பலப்படுத்தவேண்டும். வன்முறைக்கான தீர்வு என்பது வலிகளோடு மனதுக்குள் புலம்பி வாழ்வது அல்ல.

பெண்களே வன்முறைக்கு ஒத்துப் போகாதீர்கள். இனியும் வன்முறைகளுக்கு ஒத்துப் போவதால் பெண் சமத்துவம் இன்றோ நாளையோ கிடைக்கப் போவதில்லை. நாம் எமது கால்லில் நிற்கிறோம் என்கிற மன உறுதியோடு போராடுங்கள். யாராக இருந்தாலும் தானைத் தலைவனாக இருந்தாலும் நெற்றிக் கண் திறப்பினும் குற்றம் குற்றமே என நீதி கோருங்கள். சமுதாயத்தின் வார்த்தைகளுக்குப் பயந்து ஒதுங்காதீர்கள். பெண்ணினமே முன்வந்து தவறுகளைத் தட்டிக் கேட்டால் ஆணாதிக்கம் தோற்றுப் போய்விடும். எமது பெண்கள் மற்றும் சிறுமிகளைப் பாதுகாக்க வேண்டியது எம் ஒவ்வொருவரது தலையாய கடமையாகும்.

சமுதாயக் கோட்பாடுகளை நிலை நிறுத்தி ஆட்சி செய்யும் ஆணாதிக்கத் தைக் கொன்று போட ஒவ்வொரு பெண்ணும் இன்றே, இந்த நிமிடமே விழித்துக்கொள்ள வேண்டும். வன்மு[illegible] வாழ பெண்களே [illegible]

## கொத்துக் கொத்தாக அழிக்கப்பட்டதற்கு கொத்துக் குண்டுகளும் காரணமா?

இறுதிப் போர் ஓய்ந்து ஏழு ஆண்டுகள் கடந்து விட்டன. ஆனால் மழை நின்றும் தூவானம் ஓயாத நிலைதான் இங்கு காணப்படுகின்றது. போரினால் ஏற்பட்ட வடுக்கள் தமிழர்களிடமிருந்து இன்னமும் அகலவில்லை. அகலும் என்ற நம்பிக்கையும் அறவே இல்லை. ஆனால் போரின்போது இடம்பெற்ற குற்றச் செயல்களையும் மனித உரிமை மீறல்களையும் மூடிமறைக்கும் வகையிலான செயற்பாடுகளில் 'நல்லாட்சி' என்ற நல்ல முத்திரையைத் தனக்குத்தானே குத்திக்கொண்ட அரசு இறங்கியுள்ளமைதான் போரின் வலிகளை அதிகப் படுத்தி வருகின்றது.

இறுதிப் போரின்போது அரச படைகள், செய்யக் கூடாதவை என வரையறை செய்யப்பட்ட அனைத்தையும் எவ்வித அச்சமும் இல்லாமல் மேற்கொண்டன. அரசின் ஆசீர்வாதமும், பேருதவியும் கிடைத்ததால் படைகள் கிஞ்சித்தும் தயங்காமல் தமிழர்களை வேட்டையாடுவதில் தீவிரமாக ஈடுபட்டன. அழிவுகளை எவ்வளவு விரைவாக ஏற்படுத்த முடியுமோ அந்த அளவுக்குத் தடைசெய்யப்பட்ட அனைத்து ஆயுதங்களும் பயன்படுத்தப்பட்டன. ஆனால் இவை யாவும் மூடிமறைக்கப்பட்டுவிட்டன. அழிக்கப்பட்ட தமிழர்களின் உடல்கள் மண்மூடி மறைக்கப்பட்டதைப் போன்று இவற்றையும் மறைத்து விடலாமென அரசு நினைத்தது. ஆனால் கொத்துக் குண்டுகளைப் படைகள் பயன்படுத்தியமை தொடர்பாகப் பன்னாட்டு ஊடகமொன்று படங்களை ஆதாரமாகக் கொண்டு செய்திகளை வெளியிட்டுள்ளதால் அரசு கலங்கிப் போய் நிற்கின்றது. ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டம் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் இந்தவேளையில் மேற்படி பத்திரிகை வெளியிட்டுள்ள செய்தி அரசுக்கு உவப்பாக இருக்கப் போவதில்லை.

இதனால் கொத்துக்குண்டுகளைப் படைகள் பயன்படுத்தவேயில்லை என அவசர அவசரமாக மறுத்து வருகின்றது.

அரசில் அங்கம் வகிக்கும் முக்கிய அமைச்சர் ஒருவர் இது தொடர்பாகக் கேள்விக்கணைகள் பலவற்றைத் தொடுத்துள்ளார். பயன்படுத்தப்பட்ட கொத்துக் குண்டுகள் இராணுவத்துக்குரியவை என்பதை நிரூபிக்க முடியுமா? குறிப்பிட்ட பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட படங்கள் உண்மையானவையா? ஏழரை வருடங்கள் இதை வெளிப்படுத்துவதற்கு ஏன் காத்திருக்கவேண்டும்? கொத்துக் குண்டுகளைப் புலிகள் ஏன் பயன்படுத்தியிருக்க முடியாது? இவ்வாறு அவரது வாயிலிருந்து கேள்விக் கணைகள் சீறிப் பாய்ந்து வெளிவந்துள்ளன. போர் தென்பகுதியில் இடம்பெறவில்லை என்பதையும் போரில் சிக்கிக் கொண்டவர்கள் தமிழர்கள் என்பதையும் அமைச்சர் மறந்துவிட்டாரா? புலிகள் மக்களைக் கேடயமாகக் கொண்டிருந்தனர் என்று அரசு கூறியது உண்மையாக இருந்திருக்குமானால் புலிகள் தம்மைத் தாமே அழிப்பதற்கு கொத்துக் குண்டுகளைப் பயன்படுத்தினார்களா? என்ற கேள்வியும் மறுதரப்பிலிருந்து எழுகின்றது.

ஆனால் கொத்துக் கொத்தாகத் தமிழர்களின் உயிர்கள் பறிக்கப்பட்டமைக்கு கொத்துக் குண்டுகளும் காரணமாக இருந்திருக்கலாம் என்பதை இப்போது ஏற்றுக் கொள்ள வேண்டியுள்ளது. இது உண்மையாக இருக்குமானால் சர்வாதிகாரி ஹிட்லர் யூத இன மக்களுக்கு ஏற்படுத்திய அழிவுக்கு ஒப்பானதாகவே. இங்கும் நிகழ்த்தப்பபட்டுள்ளது. ஆனால் இவற்றையெல்லாம் மூடி மறைக்கின்ற செயற்பாடுகளில் நல்லாட்சி எனக் கூறிக் கொள்ளும் அரசும் ஈடுபட்டுள்ளதை எந்த வகையிலும் நியாயப்படுத்திவிட முடியாது.

படையினருக்கு எதிரான குற்றங்களை விசாரிப்பதற்கு இந்த அரசு தயங்குமேயானால் உலக நாடுகளின் மதிப்பையும், நம்பிக்கையையும் விரைவிலேயே அது இழந்துவிடும். இவ்வாறானதொரு நிலை ஏற்படுமாயின் மகிந்த அரசுக்கும் இந்த அரசுக்கு மிடையே என்ன வேற்றுமை இருக்கப் போகின்றது? நல்லதைச் செய்து நல்லாட்சி என்ற நற்பெயரைப் பெறுவதே சிறந்தது. இல்லையென்றால் இந்தச் சொல்லுக்கே அர்த்தம்இருக்காது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வாழ்க்கையில் இரண்டு வாய்ப்புகள் உள்ளது. ஒன்று உன்னால் மாற்ற முடியாதவற்றை ஏற்றுக்கொள்வது அல்லது ஏற்றுக்கொள்ள முடியாதவற்றை மாற்றிக்காட்டுவது

**கருணைமலர்** @karunaimaLar

திருவள்ளுவர் இரண்டு அடியில் வாழ்க்கையைப் புரிய வைக்க நினைத்தார். ஆனால் நாம் இங்கு பல அடிகள் பட்டுத் தான் வாழ்க்கையைப் புரிந்துகொள்ளவே ஆரம்பிக்கின்றோம்...

1.8K 1.2K

## சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | | | | 5 | | | | |
| | | 8 | | 1 | | 3 | 7 | 5 |
| | | 2 | 3 | | 4 | | | |
| 9 | 7 | | | | | | | |
| 8 | | | 1 | | 5 | | | 9 |
| | | | | | | | 2 | 4 |
| | | | 6 | | 1 | 9 | | |
| 5 | 1 | 9 | | 3 | | 6 | | |
| | | | | 9 | | | | 7 |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 1 | 6 | 7 | 2 | 4 | 9 | 3 | 8 |
| 9 | 7 | 8 | 3 | 1 | 5 | 2 | 4 | 6 |
| 4 | 2 | 3 | 6 | 8 | 9 | 5 | 7 | 1 |
| 6 | 9 | 2 | 1 | 5 | 3 | 7 | 8 | 4 |
| 7 | 4 | 1 | 8 | 6 | 2 | 3 | 5 | 9 |
| 3 | 8 | 5 | 4 | 9 | 7 | 1 | 6 | 2 |
| 2 | 6 | 7 | 5 | 4 | 1 | 8 | 9 | 3 |
| 1 | 5 | 4 | 9 | 3 | 8 | 6 | 2 | 7 |
| 8 | 3 | 9 | 2 | 7 | 6 | 4 | 1 | 5 |

சுடோக்கு ஒரு எண் விளை யாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப் படை. 1–9 வரையான எண்களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரை களையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரை களையும் கொண்டிருக் கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங் கள், பகுதிகள், உப சதுரங் கள் என்றும் அழைக் கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரை யிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தட வைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகை யில் உள் பெட்டிகளுக் குள்ளும் அவ்வாறே 1–9 இலக் கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டி ருக்கும். தர்க்கரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்ப தாகும். 1986 இல் ஜப் பானிய நிறுவன மான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்ய மானது.



# கை கோர்க்கும் இயக்குநர்கள்

வெங்கட் பிரபு தற்போது 'சென்னை–28' படத்தின் இரண்டாம் பாகத்தை இயக்கி வருகிறார். முதல் பாகத்தில் நடித்த ஜெய், சிவா, பிரேம்ஜி, அமரன் உட்பட அனைவரும் இரண்டாம் பாகத்திலும் நடிக்கிறார்கள். முதல் பாகத்துக்கு இசை அமைத்த யுவன் சங்கர் ராஜாவே, இரண்டாம் பாகத்துக்கும் இசை அமைக்கிறார்.

இந்தப் படத்தில் ஒரு காட்சியில் வெங்கட் பிரபுவின் உதவி இயக்குநர்களாகிய 'நளனும் நந்தினியும்' பட புகழ் வெங்கடேஷ் ராமகிருஷ்ணா, 'வடகறி' பட புகழ் சரவண ராஜன், 'கனிமொழி' பட புகழ் ஸ்ரீபதி, 'நவீன சரஸ்வதி சபதம்' பட புகழ் சந்துரு ஆகிய நால்வரோடு 'காவல்' படத்தின் இயக்குநரும், வெங்கட் பிரபுவின் நண்பருமான நாகேந்திரனும் நடிக்கின்றனர்.

ஏற்கனவே இரசிகர்களிடம் பெரும் எதிர்பார்ப்பில் இருந்து வரும் இந்தப் படத்தில் இப்போது 5 இயக்குநர்களும் இணைந்து நடித்து வருவதால், இந்தப் படத்தின் மீதான எதிர்பார்ப்பு மேலும் அதிகரித்துள்ளது.

**அப்பா:** இன்றைக்கு உனக்கு லீவு தானே, இப்போ என்ன படிக்கிறாய்?

**மகன்:** குழந்தை வளர்ப்பது எப்படி? என்ற புத்தகம் படிக்கிறேன் அப்பா.

**அப்பா:** நீ சின்னப் பையன் தானே. நீ ஏன் இந்த புத்தகமெல்லாம் படிக்கிறாய்?

மகன்: நீங்கள் என்னைச் சரியா வளர்க்குறீங்களா? என்று தெரிஞ்சுக்கத்தான்!




**மேடம்:** உற்சாகத்துடன் பணியில் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில், எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர். புத்திரர் விரும்பிக் கேட்ட பொருளை வாங்கிக் கொடுப்பீர்கள்.

**இடபம்:** சிலரது பேச்சு, மனதைச் சங்கடப்படுத்தலாம். தொழில் வளர்ச்சிக்காக, புதிய நுட்பங்களைப் பயன்படுத்துவது அவசியம். இலாபம் சுமாராக இருக்கும். வாகனப் பயணத்தில் மிதவேகம் நல்லது.

**மிதுனம்:** உறவினர்களிடம், கருத்து வேற்றுமை உருவாகலாம், கவனம். தொழிலில், விற்பனை தாமதகதியில் இயங்குவதால், இலாபம் சுமாராக இருக்கும். பெண்கள், ஆடம்பர எண்ணத்துடன் செயற்படுவர்.

**கடகம்:** மனதில் உற்சாகம் நிறைந்திருக்கும். தொழிலில், உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். வருமானம் பன்மடங்கு உயரும். மாமன் மைத்துனர் தேவையறிந்து உதவி செய்வீர்கள்.

**சிங்கம்:** குடும்பத்தில் இனிய நிகழ்வு உருவாகும். தொழில், வியாபார வளர்ச்சியால், வருமானம் உயரும். சமூக அந்தஸ்தும், வாழ்க்கைத் தரமும் உயரும். அரசியல்வாதிகளுக்குப் பதவி கிடைக்க அனுகூலம் உண்டு.

**கன்னி:** மாறுபட்ட சூழ்நிலையால் பணிகள் தாமதமாகும். தொழில், வியாபாரத்தில், வருமானம் மிதமாக இருக்கும். உறவினர் வருகையால் செலவு அதிகரிக்கும். அறிமுகம் இல்லாதவருக்கு வாகனத்தில் இடம் கொடுக்க வேண்டாம்.

**துலாம்:** பிடிவாத குணத்தால், சிலரின் அதிருப்திக்கு ஆளாவீர்கள். விடாமுயற்சியுடன் செயற்பட்டால், தொழிலில் இலாபத்தைத் தக்கவைக்க முடியும். பெண்கள், நகையை இரவல் கொடுக்க, வாங்க வேண்டாம்.

**விருச்சிகம்:** சான்றோரின் அறிமுகமும், ஆசியும் கிடைக்கும். தொழிலில், உற்பத்தி, விற்பனை முன்னேற்றம் பெறும். பணவரவு அதிகரிக்கும். வெகுநாள் வாங்க நினைத்த பொருளை வாங்குவீர்கள்.

**தனுசு:** செயல் நிறைவேறும் முன், முடிவைப் பற்றி பிறரிடம் பேச வேண்டாம். தொழில் வளர்ச்சிக்கு, புதிய உத்திகளைப் பயன்படுத்துவது அவசியம். உடல் நலனில் அக்கறை தேவை. பெண்கள் கணவரின் அன்பைப் பெறுவர்.

**மகரம்:** உங்களின் மதிநுட்பச் செயல் கண்டு, பிறர் பாராட்டுவர். தொழிலில், உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். வருமானம் பன்மடங்கு உயரும். குடும்பத்துடன், விருந்து விழாவில் கலந்து கொள்வீர்கள்.

**கும்பம்:** செயல்களில் நிதானமாக இருப்பது நல்லது. தொழிலில், எதிர்பார்த்ததை விட இலாபம் குறையும். பெண்கள், செலவுக்குப் பணமின்றி சிரமப்படுவர். பிள்ளைகளின் செயற்பாடு ஆறுதல் அளிக்கும்.

**மீனம்:** புதிய வாய்ப்பின் மூலம், வளர்ச்சி காண்பீர்கள். தொழிலில், உற்பத்தி, விற்பனை வியத்தகு அளவில் அதிகரிக்கும். லாபம் உயரும். அரசியல்வாதிகளுக்கு எதிரிகளின் தொல்லை மறையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தரிக்காய் பஜ்ஜி



### தேவையானவை

பெரிய கத்தரிக்காய்– 4
கடலை மா–1 கப்
மிளகாய்த்தூள்–கால் கரண்டி
சமையல் சோடா
– அரை சிட்டிகை
பெருங்காயத்தூள்–1கரண்டி
அரிசிமா–2 கரண்டி
உப்பு– தேவையான அளவு
எண்ணெய் – தேவையானஅளவு

### செய்முறை

கத்தரிக்காயின் காம்பை நீக்கி வட்ட வடிவமாக நறுக்கிக் கொள்ளவும். ஒரு பாத்திரத்தில் கடலை மா, அரிசி மா, பெருங்காயத்தூள், மிளகாய்த்தூள், சமையல் சோடா, உப்பு தேவையான அளவு தண்ணீர் சேர்த்து கெட்டியாக கரைத்துக் கொள்ளவும். சட்டியில் எண்ணெய் ஊற்றி காயவைத்து நறுக்கிய கத்தரிக்காய்த் துண்டுகளை மாக்கலவையில் தோய்த்து எண்ணெயில் போட்டு வேகவைத்து எடுக்கவும். சுவையான கத்தரிக்காய் பஜ்ஜி ரெடி..

## வீட்டுக்குறிப்புக்கள்

- வெண்டைக்காய் சமைக்கும்போது ஒன்றோடு ஒன்று ஒட்டாமல் இருக்க, சமைப்பதற்கு முன் அதில் சிறிதளவு எலுமிச்சைச் சாறைத் தெளிக்கவும்.
- கீரையை வேகவிடும்போது சிறிது எண்ணெயை அதனுடன் சேர்த்து வேக வைத்தால் கீரை பசுமையாகவும் ருசியாகவும் இருக்கும்.
- பாகற்காயைச் சிறுசிறு வில்லைகளாக நறுக்கி, முற்றியதாக இருந்தால் அகற்றி, தேவையான அளவு எலுமிச்சை சாறில் கொட்டி வெளியில் எடுத்து ஊற வைக்கவும். ஒரு வாரத்தில் நன்றாக ஊறிப் பக்குவப்படும். தினமும் நன்கு குலுக்கி வெயிலில் வைக்க வேண்டும். கசப்பு துளியும் இராது. நீண்ட நாள் கெடாமல் இருக்கும்.
- பெருங்காயம் கல்போல் இருந்தால் உடைப்பது கஷ்டம். இரும்புச் சட்டியை அடுப்பில் வைத்துக் காய்ந்தவுடன் பெருங்டிகாயத்தை அதில் போட்டால் இளகும். அதைக் கொஞ்சம் கொஞ்சமாகப் பிய்த்து தனித்தனியாகப் போட்டுவிட்டால் ஆறியவுடன் டப்பியில் போட்டுக் கொள்ளலாம்.
- காய்கறிகள் எதுவாக இருந்தாலும் அவற்றை நறுக்கத் தொடங்குமுன் கைவிரல் களில் லேசாக எண்ணெய் தடவிக்கொண்டு நறுக்குவது நல்லது. வேலை முடிந்ததும் சிகைக்காய் போட்டுக் கழுவி விடவும். விரல்கள் கறுத்துப் போகாமல் இருக்க இது உதவும்.
- மோர் மிளகாய் தயாரிக்கும் போது அத்துடன் பாகற்காய் களையும் வில்லைகளாக அரிந்து போட்டு வற்றலாக்கலாம். பாகல் வற்றல் கார முடனும், மிளகாய் சிறு கசப்புடன் சுவை மாறி ருசியாக இருக்கும்.



## நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | கொடிகாமம் | பருத்தித்துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 700 | 600 | 700 | 800 | 900 | 800 |
| நண்டு | 250 | 400 | 300 | 400 | 400 | 300 | – |
| கணவாய் | 600 | 600 | 500 | 500 | 600 | 700 | – |
| பாரை | 550 | 600 | 500 | 650 | 500 | 700 | 400 |
| சுறா | 500 | 600 | 600 | 800 | 800 | 600 | – |
| சீலா | 300 | 500 | 400 | 800 | 450 | 500 | 400 |
| விளை | 650 | 500 | 400 | 800 | 450 | 600 | 450 |
| முரல் | 300 | 400 | 350 | 400 | 300 | 450 | – |
| கும்பிளா | 400 | 400 | 300 | 450 | 400 | – | – |
| கிளாக்கன் | 800 | 1000 | – | – | 600 | 400 | – |
| ஓரா | 400 | 400 | – | – | 450 | 200 | 350 |
| திரளி | 300 | 300 | 200 | 200 | 300 | 300 | 370 |
| நகரை | 250 | 300 | – | 300 | 400 | 300 | 350 |
| சூடை | 150 | 200 | 100 | 200 | 200 | 200 | – |
| ஓட்டி | 300 | 300 | 150 | 400 | 250 | – | – |
| திருக்கை | 150 | 400 | 200 | 350 | 400 | 300 | – |
| மதனம் | 150 | 250 | 180 | – | 280 | – | 200 |
| கொய் | 100 | 150 | 60 | 100 | 100 | 100 | – |
| பாலை | 400 | 250 | 250 | 400 | 400 | 400 | – |
| வாழை | 100 | 200 | 200 | – | 300 | 300 | – |

## நாளை


ஆனி-12
ஞாயிற்றுக்கிழமை
- 26.06.2016
திதி: ஷஷ்டி பி.ப.01.12 வரை
நட்சத்திரம்: சதயம் மு.ப.08.17 வரை
ராகுகாலம்:
04.25–05.55 வரை
சுபநேரம்: 08.55–10.25 வரை



## நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | மருதனார்மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி | கொடிகாமம் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 80 | 80 | 100 | 160 | 50–60 | 120 | – | 60 |
| கத்தரி | 100 | 70 | 80 | 80 | 60–70 | 200 | – | 40 |
| கரட் | 200 | 300 | 160–300 | 140 | 280 | 300 | – | 160 |
| மரவள்ளி | 80 | 70 | 70 | 80 | 70 | 80 | – | 50 |
| பயிற்றை | 160 | 130 | 150 | 140 | 140 | 120 | – | 80 |
| பாகல் | 200 | 200 | 150 | 200 | 200 | 200 | – | 150 |
| கருணைக்கிழங்கு | 200 | 110 | 120 | 160 | 100–120 | – | – | 80 |
| பெ.வெங்காயம் | 80 | 80 | 100 | 90 | 80 | 100 | – | 80 |
| சி.வெங்காயம் | 120 | 160 | 150 | 180 | 140 | 200 | – | 160 |
| பூசணி | 70 | 80 | 80 | 70 | 80 | 100 | – | 80 |
| தக்காளி | 200 | 220 | 200 | 140 | 160–180 | 200 | – | 200 |
| வாழைக்காய் | 100 | 80 | 80 | 80 | 60 | 80 | – | 40 |
| கீரை | 15 | 30 | 30 | 20 | 20 | 40 | – | 20 |
| பொன்னாங்காணி | 25 | 40 | 30 | 15 | 20 | 40 | – | 10 |
| பச்சை மிளகாய் | 800 | 600 | 600 | 600 | 600–700 | 800 | – | 500 |
| புடோல் | 80 | 100 | 70 | 120 | 80–100 | 120 | – | 100 |
| கோவா | 180 | 140 | 200 | 140 | 140–160 | 220 | – | 140 |
| வெண்டி | 120 | 100 | 120 | 120 | 80–100 | 200 | – | 80 |
| போஞ்சி | 200 | 140 | 180 | 200 | 200 | 240 | – | 120 |
| லீக்ஸ் | 200 | 160 | 140–300 | 140 | 160 | 250 | – | 150 |
| தேங்காய் | 40 | 30 | 40 | 30–35 | 30 | 35 | – | 30 |
| உருளைக்கிழங்கு | 100 | 70 | 100 | 100 | 100–120 | 100 | – | 120 |
| தேசிக்காய் | 200 | 200 | 200 | 140 | 200 | 150 | – | 280 |
| வல்லாரை | 10 | 20 | 10 | 15 | 15 | 20 | – | 10 |
| கறிமிளகாய் | 200 | 280 | 240 | 200 | 400 | 200 | – | 200 |
| இராசவள்ளி | 160 | – | – | 180 | – | 160 | – | 120 |
| முருங்கைக்காய் | 600 | 500 | 800 | 400 | 700–900 | 300 | – | 350 |







இது புதுசு

## சுவர் ஸ்ரிக்கர்

முப்பரிமாண சுவர் ஸ்ரிக்கர் அறிமுகமாகியுள்ளது. வெறுமை யான சுவரை அலங்கரிக்க இவை பயன்படும். இவற்றில் கண்ணாடி பிரே போன்ற படங்களும் அறிமுகமாகியு ளன. முப்பரிமாணமாகத் தொட் ணரக்கூடிய இவை அறை, ஹோல் என்பவற்றுக்கு மேலும் அழகு சேர்க்கும். இவற்றின் விலை 500 ரூபா தொடக்கம் 700 ரூபா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நுட்பம்



### பி.எம்.டபிள்யூ. நிறுவனத்தின் நுண்ணறிவுக் கார்

உலகின் உயர்தரமான கார்களை உற்பத்தி செய்து சந்தைப்படுத்தும் பி.எம்.டபிள்யூ. நிறுவனம் நுண்ணறிவுள்ள எதிர்கால காரொன்றை அறிமுகப்படுத்தியுள்ளது.
ரோல்ஸ் ரொய்ஸ் எனப் பெயரிடப்பட்டுள்ள இந்தக் காரை 2040ஆம் ஆண்டு சந்தையில் அறிமுகப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது என்று பி.எம்.டபிள்யூ. நிறுவனம் தெரிவித்துள்ளது.
எதிர்காலத்தில் வாடிக்கையாளர்களின் தனிப்பட்ட அடையாளங்களை வெளிப்படுத்தும் வண்ணம் அவர்களின் விருப்பத்துக்கேற்ப கார்களை நிர்மாணிக்கும் திட்டமானது நடைமுறைப்படுத்தப்படும் என்றும் தெரிவித்துள்ளது.
எதிர்காலத்தில் அறிமுகப்படுத்தவுள்ள தானியங்கிக் கார் மாதிரிகளையும் பி.எம்.டபிள்யூ. நிறுவனம் காட்சிப்படுத்தியுள்ளது.

### கைபேசிகளுக்கு வில்லை அறிமுகம்



தொடுதிரைக் கைபேசிகளின் வருகைக்குப் பிறகு அதன்மூலம் புகைப்படம் எடுப்பது அதிகரித்துள்ளது. தொடுதிரைக் கைபேசிகளில் இணைக்கும்படியான வில்லைகளை (லென்ஸ்) எக்சோ லென்ஸ் என்ற நிறுவனம் லென்ஸ் தயாரிப்பில் பிரபலமான கார்ல் ஜீயஸ் நிறுவனத்துடன் இணைந்து அறிமுகப்படுத்தியுள்ளது.
அப்பிள் நிறுவனத்தின் ஐபோன் 6 மற்றும் 6 எஸ் மொடல்களுக்கு மேற்பட்ட மொடல்களில் சிறியவகை ஸ்டீல் மவுண்டிங் மூலம் இணைத்துக் கொள்ளும்வகையில் இந்த வில்லைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.
விரைவில் ஏனைய நிறுவன தொடுதிரைக் கைபேசிகளுடன் இணைக்கும்வகையில் வில்லைகள் அறிமுகப்படுத்தப்படும் என்று தயாரிப்பு நிறுவனம் தெரிவித்துள்ளது.
தொடுதிரைக் கைபேசி பயனாளர்களுக்கும் சிறந்த புகைப்படும் எடுக்கும் அனுபவத்தைக் கொடுக்கும் வகையில் தொடுதிரைக் கைபேசிகளில் இணைக்கும் வகையிலான புதிய வில்லைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

# சிலிம் நாஸ்கோ விருதுகள்




இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவனம், தேசிய விற்பனை முன்னணி விருது 2016க்கான நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது. இது, விற்பனைத் துறையில் ஈடுபட்டுள்ளோரின் செயற்பாடுகளைக் கௌரவிக்கும் ஒரு முக்கிய நிகழ்வாகும்.
நிறுவனங்களின் விற்பனைக் குழாமில், மிகச் சிறப்பாகச் செயற்படுவோரை அடையாளம் கண்டு, அவர்கள் தனது தொழிற் றுறையின் அடுத்த கட்டத்தை அடைய உதவும் வகையில் NASCO அடித் தளத்தை அமைத் துக் கொடுக்கிறது.
NASCO 2016இல் கலந்து கொள்ளும் பங்கு பற்றுநர்களுக்கான விளக்கமளிக்கும் நிகழ்வு கொழும்பு ஹில்டன் ரெசிடன்சிஸில் அண்மையில் இடம்பெற்றது.
வித்தியாசமான 15 துறைகளில் இந்த விருதுகள் வழங்கப்படவுள்ளன. இதன்போது ஒவ்வொரு துறையிலும் வலய முகாமையாளர், விற்பனை நிறைவேற்று அதிகாரி அல்லது விற்பனை மேற்பார்வையாளர் மற்றும் வெளிக்கள விற்பனை உத்தியோத்தர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர்.
தங்கம், வெள்ளி மற்றும் வெண்கலம் ஆகிய விருதுகளுக்கு மேலதிகமாக ஒவ்வொரு துறையிலும் மிகச் சிறந்த இரு பெண் உத்தியோகத்தரும் கௌரவிக்கப்படவுள்ளனர். நிறுவனங்கள், வலய முகாமையாளர் துறையில் விற்பனை நிறை வேற்று அதிகாரி அல்லது விற்பனை மேற்பார்வையாளர் எனும் தலைப்பில் 4 பேர், வெளிக்கள விற்பனை உத்தியோகத்தர்கள் என்ற தலைப்பில் 7 பேர் கௌரவிக்கப்படுவர்.
இந்த விருதுக்கு இலங்கையில் பதிவு செய்யப்பட்டு வர்த்தக நடவடிக்கைகளை முன்னெடுத்து வரும் வரையறுக்கப்பட்ட நிறுவனங்கள், கூட்டு வர்த்தகங்கள், தனியுரிமை வியாபாரங்கள் ஆகிய சகல வர்த்தக நிறுவனங்கள் விண்ணப்பிக்கலாம்.

# அமென்ற் (Amante) நிறுவனத்தின் புகழ்பெற்ற - பெண்கள் உள்ளாடைகள் இப்போது யாழ்ப்பாணத்தில்

பெண்களுக்கான உள்ளாடைகள் தயாரிப்பில் உலகில் முன்னணி வகிக்கும் அமென்ற் இப்போது ஸீக்ரெட்ஸ் நிறுவனத்தின் பங்களிப்புடன் தனது தயாரிப்புக்களை யாழ்ப்பாணம் கார்கில்ஸ் சதுக்கத்தில் களமிறக்குகிறது.
நவீன உள்ளாடைகளை வரவேற்பதுடன், அவற்றை விரும்பி அணியும் யாழ்ப்பாண மங்கையர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் நோக்கில் ஸீக்ரெட்ஸ் நிறுவனத்தின் களஞ்சியசாலையில் அமென்ற் தயாரிப்புகள் களமிறக்கப்பட்டுள்ளன. சர்வதேச புகழ்பெற்ற அமென்ற் தனது தயாரிப்புக்களில் சொகுசு கவர்ச்சி மற்றும் நவீனத்துவத்தைப் புகுத்துவதில் பிரபல்யம் பெற்றது.
தெற்காசிய நாடுகளில் பெண்களின் உள்ளாடை இறக்குமதியில் மாஸ் ஹோல்டிங்ஸ் நிறுவனத்தின் துணை நிறுவனமான அமென்ற், இலங்கையில் தனது காலடியை வெற்றிகரமாகப் பதித்திருக்கிறது. நியூயோர்க், லண்டன் மற்றும் ஹொங்கொங் போன்ற பிரதான நகரங்களில் வெற்றிநடை போட்டுக் கொண்டிருக்கும் அமென்ற் தயாரிப்புகள், இலங்கைப் பெண்களின் மனங்களில் உன்னதமான இடத்தைப் பெற்றிருக்கின்றது. சர்வதேச தரம், வடிவமைப்பு மற்றும் நவீனத்துவம் ஆகியவற்றைக் கொண்ட இந்த உள்ளாடைகள், 25 வருட அனுபவத்தையும் நிபுணத்துவத்தையும் கொண்டிருப்பது அதன் சிறப்புக்கு ஒரு காரணமாகிறது.
சர்வதேச புகழ்பெற்ற அமென்ற் தனது உறுதியான காலடிகளை ஆசியப் பிராந்தியத்தில் பதித்தபின், பிரமாண்டமான இந்தியச் சந்தையில் பெற்ற அனுபவத்தையும் பெறுபேறுகளையும் அடிப்படையாகக் கொண்டு இலங்கைச் சந்தையில் பெற்ற அனுபவத்தையும் பெறுபேறுகளையும் அடிப்படையாகக் கொண்டு இலங்கைச் சந்தையில் 2013 டிசெம்பரில் தனது முதலாவது காட்சியறையை கொழும்பில் திறந்த அமென்ற், அதைத் தொடர்ந்து நவம்பர் 2015இல் தனது இரண்டாவது காட்சியறையை கண்டி சிற்றி சென்ரரில் திறந்தது. தற்போது இலங்கை முழுவதும் 70 சில்லறை விற்பனைக் கூடங்களையும் 35 விற்பனை ஆலோ சகர்களையும் கொண்டிருக்கும் இந்த நிறுவனம், இத்துறையில் நீண்டகால அனுபவத்தையும் உயரிய நிபுணத்துவத்தையும் கொண்ட பணியாளர்கள் குழுவைக் கொண்டிருப்பது அதன் மற்றொரு சிறப்பம்சமாகும்.
யாழ்ப்பாணத்தில் தற்போது காலடி வைத்திருக்கும் அமென்ற், தனது சர்வதேச கீர்த்தியையும் நம்பிக் கையையும் மீண்டும் நிலைநாட்டும் என்பதில் சந்தேகமில்லை.

**வணிகம்**

CSE COLOMBO STOCK EXCHANGE

பங்குச் சந்தை தகவல்கள்

24/06/2016
www.cse.lk

| சுட்டிகள் | | இன்று | நேற்று |
|---|---|---|---|
| ASPI | -27.95 | 6,370.11 | 6,398.06 |
| S&P SL20 | -20.06 | 3,341.65 | 3,361.71 |
| வியாபாரப்புரள்வு | | 261,285,813 | 822,046,765 |
| உள்நாட்டு- கொள்வனவு | | 230,937,472 | 734,991,104 |
| விற்பனை | | 229,219,552 | 456,036,608 |
| வெளிநாட்டு- கொள்வனவு | | 30,344,268 | 87,038,368 |
| விற்பனை | | 32,062,188 | 365,992,896 |



| அதிகூடிய பங்குப்புரிமாற்றம் கம்பனி | குறியீடு | இறுதி விலை | பங்குகள் | புரள்வு (Rs) |
|---|---|---|---|---|
| ஹேமாஸ் ஹோல்டிங்ஸ் | HHL.N | 87 | 275,924 | 24,004,078 |
| கொமர்சியல் வங்கி | COMB.N | 123 | 172,256 | 21,182,697 |
| ரெக்ஸ்டேட் ஜேர்ஸி | TJL.N | 35.90 | 592,856 | 21,152,192 |
| ஜோன் கீல்ஸ் கோல்டிங்ஸ் | JKH.N | 156 | 134,146 | 20,674,047 |
| அக்ஸஸ் இஞ்சினியறிங் | AEL.N | 22.2 | 574,765 | 12,708,66[illegible] |
| அலுமக்ஸ் | ALUM.N | 17.1 | 524,471 | 8,920,712 |
| சிலோன் கோல்ட் ஸ்டோரர்ஸ் | CCS.N | 540 | 16,074 | 8,585,843 |
| ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் | JKH.W | 7.5 | 1,079,661 | 8,428,410 |
| சணச அபிவிருத்தி வங்கி | SDB.N | 118.2 | 53,080 | 6,368,513 |
| ஏசிய அஸெட் பைனான்ஸ் | AAF.N | 1.5 | 3,959,300 | 5,938,960 |

அறிவித்தல்கள்

பங்குலாபம்
யோர்க் ஆர்கேட் (YORK ARCADE)- பங்கு ஒன்றிற்கு Rs. 0.50

| சந்தைக் குறிகாட்டிகள் | |
|---|---|
| கம்பனிகள் | 294 |
| பரிமாற்றத்தில் | 205 |
| விலை உழைப்பு | 13.1 |
| புத்தகப்பெறுமதி | 1.5 |
| பங்கிலாப விளைவு | 3 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இளைஞன்

ரின்னர் எரிபொருளை அருந்தி ஆபத்தான நிலையில் சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். சம்பவத்துடன் தொடர்புடைய இளைஞன் பொலிஸில் பணியாற்றுபவர் என்று மக்களால் தெரிவிக்கப்பட்ட போதும் அவருக்கும் பொலிஸுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று தெரிவிக்கப்பட்டது. (உ-வ-21,10)

## பிரிட்டனின்

பிரிட்டனின் வெளியேற்றமானது பன்னாட்டுப் பொருளாதாரத்தில் எத்தகைய தளம்பலை - நெகிழ்வுத் தன்மையை ஏற்படுத்தும் என்பதை சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி ஆகியவற்றால்கூட தெளிவான முறையில் கணிப்பிட முடியாதுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரிட்டனின் வெளியேற்றமானது உலகப் பொருளாதாரத் தில் மிகப் பெரிய மாற்றங்களை ஏற்படுத்தும். அவை எத்தகைய மாற்றங்கள் என்பதை உரிய வகையில் எதிர்வுகூற முடியாது பன்னாட்டுப் பொருளாதாரத்தில் ஏற்படும் தாக்கமானது எமது பொருளாதாரத்திலும் நிச்சயம் தாக்கத்தைச் செலுத்தும்.

ஐரோப்பிய ஒன்றியத்துக்கான இலங்கையின் ஏற்றுமதியில் 40 சதவீதமானவை பிரிட்டனையே சார்ந்துள்ளன. ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரிட்டன் வெளியேறினால் வரிச்சலுகை கிடைப்பதில் சிக்கல் ஏற்படும். எனவேதான், ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரிட்டன் விலகக்கூடாது என்ற நிலைப்பாட்டில் இலங்கை அரசு இருந்தது. அதற்குரிய முயற்சிகளையும் எடுத்திருந்தது. ஆனால், முடிவு சாதகமாக அமையவில்லை. அடுத்த கட்ட நடவடிக்கையாக பிரிட்டனுடன் வர்த்தக உடன்படிக்கை கைச்சாத்திடப்படும். இதுபற்றி பிரதமர் சபைக்குத் தெரியப்படுத்துவார் - என்றார்.

இந்த விடயம் தொடர்பில் இலங்கை வர்த்தகச் சம்மேளனம் தெரிவித்ததாவது:

பிரிட்டனில் இடம்பெற்ற பொது வாக்கெடுப்பின் முடிவுகள் காரணமாக வெளிநாட்டுச் சூழல் குழப்பகரமானதாக மாறுவதற்கு வாய்ப்பு உள்ளது. இலங்கை வெளிநாட்டுக் கடன்களைப் பெற்றுக் கொள்வதில் நெருக்கடியை எதிர்கொள்ளலாம். ஏற்றுமதியாளர்கள் தங்கள் சந்தையைப் பன்முகப்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

இந்தத் தாக்கம் 2008ஆம் ஆண்டின் நிதிநெருக்கடி போன்று காணப்படாது. அவ்வேளையிலும்கூட இலங்கை கடும் பாதிப்புகள்எதனையும்எதிர்கொள்ளவில்லை. அதேவேளை, அந்தக் காலப் பகுதியை விட இலங்கை அதிகளவுக்கு சர்வதேச சந்தை அனுபவத்தைக் கொண்டிருக்கும் நாடாக மாறியுள்ளதால் தாக்கம் குறைவாகவே இருக்கும்.

ஐரோப்பிய ஒன்றியத்துடனான பிரிட்டனின் புதிய உறவுகள் குறித்த பேச்சுகள் இரண்டு வருட காலத்துக்கு நீடிக்கலாம் என்பதால், சர்வதேச வர்த்தகத்தில் இந்தத் தேர்தல் முடிவுகள் ஏற்படுத்தப் போகும் தாக்கத்தை தற்போதைக்கு மதிப்பிட முடியாது.

பிரிட்டன், ஐரோப்பிய ஒன்றியத்தின் உறுப்பு நாடுகளுடன் எத்தகைய வர்த்தக உறவுகளைக் கொண்டிருக்கப் போகின்றது என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டியுள்ளது - என்று வர்த்தக சம்மேளனம் குறிப்பிட்டது. (உ-வ-5)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம்
30
12
1955

மறைவு
26
05
2016

### அமரர் பொன்னையா குமாரசாமி

கடந்த (26.05.2016) வியாழக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (25.06.2016) சனிக்கிழமை மு.ப 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் தாங்களும் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.)

தோப்பு வீதி,
மட்டுவில் வடக்கு.
மனைவி, பிள்ளைகள்.



## நினைவஞ்சலி

3 ஆம் ஆண்டு | 1ஆண்டு ண்டு | 3 ஆம் ஆண்டு





அமரர் அப்புக்குட்டி நல்லதம்பி
அவனிக்கு முத்தாக 05.09.1918
அரனது சொத்தாக 27.06.2013

திருமதி நல்லதம்பி புனிதவதி
12.03.1925
01.07.1998

அமரர் நல்லதம்பி புவனகுமார் (புந்தா)
10.09.1953
15.08.2013

பண்புக்கும் அன்புக்கும் உதாரணமாய் வாழ்ந்துகாட்டி
நல்வாழ்வு நெறிவாழ வழிகாட்டியெம்மை நெறிப்படுத்தி
எம் வாழ்வை வளமாக்கிவைத்த எம் அன்புத்தெய்வங்கள் நீவிர்;
எம் உயிருள்ளவரை உங்கள் நினைவு எம்நெஞ்சில் நிலைத்திருக்கும்
உங்கள் ஆத்மாக்கள் ஆண்டவன் நிழலில் அமைதிபெறப் பிரார்த்திக்கின்றோம்.

உரும்பிராய் மேற்கு,
உரும்பிராய்.
(லே.2389) (13.17)
குடும்பத்தினர்.



## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

### டேவிற் அல்வின்

(கிறீன்கிங்ஸ் சனசமூக நிலைய ஸ்தாபகர், அல்வின் ஹாட் வெயார் உரிமையாளர்)



பிறப்பு
1946.04.07

இறப்பு
2011.06.25

அன்பிலே சிறந்தவராய் மண்ணிலே உதித்து
அமைவற்ற வாழ்வினில் நறுமணம் பரப்பி
இல்லத்தின் விருட்சமாய் பாசநிழல் தந்தையாய்
உறவுகள் பேணிடும் கருணை வடிவமாய்
உரிமையாய் உணர்வை அன்பாய் பகிர்ந்தே
விண்ணக வாழ்வை நாடியே சென்றீர்கள்
ஐந்து ஆண்டுகள் பறந்தோடிச் சென்றதால்
என்றும் அவர் பாசம் போற்றியே பணிந்திடுவோம்

இல.60/4, சொலமன் ஒழுங்கை,
பழையபூங்கா வீதி, யாழ்ப்பாணம்.
பிரிவால் துயருறும் குடும்பத்தினர்.



## முதலாம் ஆண்டு நினைவலைகள்



அமரர்
### கௌரிஅம்பாள் பத்மநாதன்

உதயம்
10.03.1949

உதிர்வு
07.07.2015

திதி:
அபரபக்க சஷ்டி

உதரத்துள் உயிர் தந்தீர் உதிரத்தைப் பகிர்ந்தளித்தீர்
உத்தமராய் வளர்த்தெடுத்து உறவுகளைத் தேடித்தந்தீர்
பரிந்து எமை அரவணைத்து பாசத்தினில் மூழ்கச் செய்து
பலகாலம் வாழாமல் நீங்கள்
பறந்தோடிப் போனதனை தாங்காமல் நாங்கள்

ஒரு வருடம் ஆயினும் ஓயவில்லை எம்துயர்
ஒவ்வொரு அழைப்பினிலும் தேடுகிறோம் உங்கள் குரலை

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

315, அத்தியடி புதுவீதி,
அத்தியடி, யாழ்ப்பாணம்.
குடும்பத்தினர்.



## 31 ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பு

கடந்த 27.05.2016
வெள்ளிக்கிழமை
இறைவனடி சேர்ந்த
எமது
குடும்பத்தலைவர்

### அமரர் தம்பு குருநாதன்

[ஓய்வு பெற்ற மருந்துக் கலவையாளர்]



அவர்களின் சிவபதப்பேறு குறித்த அந்தியேட்டிக் கிரியைகள் கடந்த 16.06.2016 வியாழக்கிழமை கீரிமலை புண்ணிய தீர்த்தக்கரையில் நடைபெற்றன. வீட்டுக்கிருத்தியக்கிரியைகள் 26.06.2016 ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவிருப்ப தால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு: தனிப்பட்ட அழைப்பிதழ் கிடைக்கப்பெறாத உற்றார், உறவினர்கள், நண்பர்கள் இவ் அறிவித்தலை ஏற்று இந் நிகழ்விற்கு வருகை தருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இல. 187/A, கோயில் வீதி,
குருமன்காடு, வவுனியா.
குடும்பத்தினர்.
024 222 6281


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறும்பட வெளியீடு

கிருத்திகனின் இருட்டறை என்ற குறும்பட வெளியீடு இன்று மாலை 5:30 மணிக்கு யாழ்.இந்துக் கல்லூரியில் இடம் பெறவுள்ளது. இலங்கையில் பெண்களுக்கு எதிரான வன்முறைகளில் உள்ள சைபர் குற்றம் சட்டத்தின் குறைபாடுகள் பற்றிய விழிப்புணர்வைக் கருப்பொருளாகக் கொண்டு இந்தப் படம் தயாரிக்கப்பட்டுள்ளது. (ற-ரி4)


## மரண அறிவித்தல்கள்

திருமதி

**பவளமலர் (பவளம்) கணபதிப்பிள்ளை**



உரும்பிராய் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பவளமலர் (பவளம்) கணபதிப்பிள்ளை கடந்த (23.06. 2016) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சரவணை-கதிராசி தம்பதியரின் மூத்த புதல்வியும் காலஞ்சென்றவர்களான கம்பர் மலையைச் சேர்ந்த நாகமுத்து-தங்கம் தம்பதியரின் அன்பு மருமகளும் அமுதா, வரதன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயும் குலசிங்கம், வாணி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியும் பாதுசன், கெலனா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான செல்வரத்தினம், நவரத்தினம் (ஜேர்மனி) மற்றும் சாரதாம்பாள், ஜீவரத்தினம், சபாரத்தினம், குவேந்திரன் ( C.T.B குணம்-பிரான்ஸ்), ஈஸ்வரி, சந்திராதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.06.2016) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மு.ப 10.00 மணிக்கு வேம்பன் இந்து மயானத்துக்கு தகனத்திற்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பழைய பேக்கரி ஒழுங்கை,
உரும்பிராய் மேற்கு.

தகவல்:
குடும்பத்தினர்.

திருமதி **கெங்காம்பிகை செல்வநாயகம்**

(முன்னாள் ஆசிரியை புனித சூசையப்பர் கல்லூரி - திருகோணமலை, ஆதி கோணேஸ்வர மகாவித்தியாலம் - தம்பலகாமம்)

பிறப்பு
25 . 07 . 1930



இறப்பு
23 . 06 . 2016

திருகோணமலையைப் பிறப்பிடமாகவும், கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த திருமதி கெங்காம்பிகை செல்வநாயகம் 23.06.2016 வியாழக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்வநாயகம் - தையல் நாயகி தம்பதியரின் அன்பு மகளும், ஸ்ரீஸ்கந்தராஜா (கணநாதன் - ஜேர்மனி) அவர்களின் அன்புத் தாயும், ரதி (ஜேர்மனி) அவர்களின் மாமியாரும், காலஞ்சென்றவர்களான விஜயரட்ணம், அரியரட்ணம், மகேஸ்வரி, கௌரி, சிவக்கொழுந்து (UK) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (25.06.2016) சனிக்கிழமை பிற்பகல் ஒருமணிமுதல் கல்கிசை மஹிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, நாளை (26.06.2016) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று அதனைத் தொடர்ந்து பிற்பகல் 4.00 மணியளவில் கல்கிசை பொது மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்**
**ஸ்ரீஸ்கந்தராஜா**
**(மகன்)**
**+ 491 5211 563 368**
**(ஜேர்மனி)**

தகவல்:
**திருமதி சந்திரா**
**பாலசுப்பிரமணியம்**
**075 802 1188**
**இல.6 4/1, IBC வீதி,**
**வெள்ளவத்தை.**

(சி.22741)
(13.18)


## தகவலறியும்

இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் நேற்றுமுன்தினமும் நேற்றும் நடத்தப்பட்டது.

வெளிநாட்டுடன் செய்து கொள்ளப்படும் உடன்படிக்கைகள் தொடர்பான தகவல்களைப் பெறுவதற்குரிய சரத்தை சேர்க்குமாறு மக்கள் விடுதலை முன்னணி முன்வைத்த கோரிக்கையை அரசு சேர்க்கவில்லை. அதனைப் பிறிதொரு சட்ட வரைவாக கொண்டு வருமாறுயோசனை முன்வைக்கப்பட்டது.

தகவலைப் பெற இருக்கும் உரிமைக்கான ஏற்பாடுகளை முன்னெடுக்கவும், தகவலுக்கான உரிமை ஆணைக்குழுவை நிறுவவும், தகவலைப் பெறுவதற்கான நடவடிக்கைகளை வழங்கவும், அதனுடன் தொடர்புள்ள விடயங்களை மேற்கொள்ளவும் இந்தச் சட்ட வரைவு தயாரிக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம், குடிமகன் ஒருவருக்கு ஏதும் நிறுவனத்தின் உடைமை அல்லது அதன் கட்டுப்பாட்டிலுள்ள தகவலைப் பெற உரிமை வழங்கப்படுகின்றது.

ஒருவரின் தனிப்பட்ட தகவல்கள், அரசின் பாதுகாப்பு மற்றும் ஆள்புல ஒருமைப்பாடு, தேசிய நலன் தொடர்பான தகவல்கள், நாட்டின் சர்வதேச உறவுகளுடன் தொடர்புள்ள தகவல்கள், வரி விதிப்புகள், ஒருவருக்கு எதிராக வழக்குத் தொடர்வதைத் தடுக்கும் தகவல்கள், நீதிமன்றத்தை அவமதிக்கும் வகையிலான தகவல்கள், பரீட்சைத் திணைக்கள அல்லது உயர்கல்வி நிறுவனப் பரீட்சைகளுக்கு இடையூறான தகவல்கள் என்பவற்றை வழங்குவதற்கு விலக்களிக்கப்பட்டுள்ளது.

தகவல்களைக் கோரினால் அதனை வழங்குவதை மறுக்க முடியாது எனவும் இந்தச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தகவல் பெற விண்ணப்பமொன்றை நிரப்பவேண்டும். அத்துடன் ஆணைக்குழு முடிவு செய்யும் கட்டணமொன்றையும் செலுத்தவேண்டும்.

தகவல் அறியும் சட்டத்தை செயற்படுத்த ஆணைக்குழுவொன்று நியமிக்கப்படவுள்ளது. அதற்கான 5 உறுப்பினர்கள், அரசமைப்புச் சபையின் பரிந்துரையில், ஜனாதிபதியால் நியமிக்கப்படுவர்.

மேலும், தகவல் வழங்க மறுத்தால், அதற்கு எதிராக முறையிட முடியும். அந்த முறைப்பாடு குறித்து ஒழுக்காற்று அதிகாரசபை விசாரணை நடத்தும். நீதிவான் விசாரணையின் பின்னர் குற்றவாளியாகத் தீர்ப்பளிக்கப்பட்டால், 50 ஆயிரம் ரூபாவுக்குக் குறையாத அபராதமோ 2 வருடங்களுக்குக் குறையாத சிறைத்தண்டனையோ அல்லது இரு தண்டனைகளுமோ விதிக்கப்படும் வகையில் சட்ட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

(வ-5)

## ஸ்ரேலிங்

நாணய வர்த்தகர்கள் இந்த வாக்கெடுப்பு முடிவுகளை அதிர்ச்சியுடன் எதிர்கொண்டதை அடுத்து இந்த வீழ்ச்சி ஏற்பட்டது.

வாக்கெடுப்பு எண்ணிக்கை நடந்த முதல் ஒரு மணி நேரத்தில் அமெரிக்க டொலருக்கு எதிராக ஸ்ரேலிங் பவுண்ஸின் மதிப்பு உயர்ந்தது. ஆனால், பிரிட்டன் ஐரோப்பிய ஒன்றியத்தை விட்டு விலக வேண்டும் என்ற தரப்பு வெல்லக் கூடும் என்று ஆரம்பகட்ட வாய்ப்புகள் தெரியத் தொடங்கியபோது, அது வீழ்ந்தது.

உலக பொருளதார நெருக்கடி 2008ஆம் ஆண்டில் ஏற்பட்டதிலிருந்து இத்தகைய அதிரடியான வீழ்ச்சியை தாங்கள் பார்த்ததில்லை என்று வர்த்தகர்கள் கூறுகின்றனர்.

ஆசியப் பங்குகளும் விலைகளில் சரிவைச் சந்தித்தன. இலங்கையில் ஸ்ரேலிங் பவுண்ஸின் மதிப்பு 10 வீதத்தால் வீழ்ச்சி கண்டது.

(வ-5)

## போலி

களை ஆரம்பித்திருந்தனர். அவர்களது விசாரணையில் நடந்தது அனைத்தும் ஒருதிட்டமிட்ட நாடகம் என்று தெரிய வந்துள்ளது. இதையடுத்து வங்கி போலி நாணயத் தாளைத் தந்தது என்று தெரிவித்த பெண், அவருக்கு நாணயத் தர்ளை வடிவமைத்துக் கொடுத்தார் எனக் கூறப்படும் அச்சகப் பணியாளர், நாணயத் தாள்களை அச்சடித்துக் கொடுத்த டிஜிட்டல் அச்சக உரிமையாளர் ஆகியோர் குற்றப்புலனாய்வுப் பொலிஸாரால் நேற்றுக் கைதுசெய்யப்பட்டு கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

வங்கியிலிருந்து தான் பெற்ற 4 லட்சத்து 90 ஆயிரம் ரூபாவில் இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான போலி நாணயத் தாள்கள் இருந்தன என்று குறித்த பெண் தனது முறைப்பாட்டில் தெரிவித்திருந்தார். 5 ஆயிரம் ரூபா தாள்களே போலியானவையாக இருந்தன என்றும் அவர் கூறியிருந்தார்.

(உ-வ-101,26)

## வீதி

காணிகளும் இரு வீதிகளும் பாதுகாப்புச் செயலர் கருணாசேன ஹெட்டியாராச்சியால் இன்று மக்களிடம் கையளிக்கப்படவுள்ளன. இராணுவத் தளபதி லெப்ரினன்ட் ஜெனரல் கிரிசாந்த டி சில்வாவும் நிகழ்வில் கலந்து கொள்வார்.

காணி மற்றும் வீதி ஒப்படைப்பு நிகழ்வு காங்கேசன்துறை தொடருந்து நிலையத்துக்கு அருகில் காலை 10 மணிக்கு இடம் பெற இருக்கின்றது.

இந்த நிகழ்வில் வைத்து வல்லை - அராலி வீதி முழுமையாக மக்கள் பாவனைக்குத் திறந்துவிடப்படவுள்ளது. இந்த வீதியில் வறுத்தலை விளான் பிள்ளையார் கோயில் வீதியிலிருந்து கட்டுவன் சந்தி வரையான வீதி இராணுவக் கட்டுப்பாட்டில் இருந்தது. இதனைத் திறந்து விட்டாலேயே மக்களின் போக்குவரத்து இலகுவாகும் என்று மக்கள் பிரதிநிதிகளும் அரச அதிகாரிகளும் வலியுறுத்தி இருந்தனர். ஏற்கனவே விடுவிக்கப்பட்ட பகுதிகளில் மக்களின் மீள்குடியமர்வைத் துரிதப்படுத்த இது அவசியம் என்றும் வலியுறுத்தி இருந்தனர். இராணுவத்தினரும் அதற்கு இணங்கி இருந்தனர்.

இதனால் இன்று இந்த வீதி மக்கள் பாவனைக்குத் திறக்கப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது. தமது கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ள வீதித் துண்டை இராணுவம் திறந்து விடவில்லை. பதிலாக வறுத்தலைவிளான் பிள்ளையார் கோயில் வீதியில் இருந்து மல்லாகம் - கட்டுவன் வீதி வரையில் தனியார் காணிகளை ஊடறுத்து இணைப்பு வீதித் துண்டு ஒன்றை இராணுவம் புதிதாக ஏற்படுத்தியுள்ளது. இதனையே இன்று பொதுமக்களின் பாவனைக்குக் கையளிக்கவும் உள்ளது.

தனியார் காணிகளுக்கூடாக இந்தப் புதிய இணைப்பு வீதியை ஏற்படுத்த இராணுவம் எந்த அனுமதியையும் பெற்றிருக்கவில்லை என்று பொதுமக்கள் குற்றஞ் சாட்டுகின்றனர்.

(வெள்ளை வட்டத்தினுள் கறுப்பாக நிறமூட்டப்பட்டுள்ள வீதியையே விடுவிக்குமாறு கோரப்பட்டது. ஆனால் வெள்ளைக் கோட்டினால் அடையாளப் படுத்தப்பட்டுள்ள புதிதாக அமைக்கப்பட்டுள்ள வீதியே விடுவிக்கப்படவுள்ளது)

## மைத்திரிக்கு

மனுவில் பிரதிவாதிகளாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உட்பட அரச அதிகாரிகள் பலர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் 225 உறுப்பினர்களுக்கு சொகுசு வாகனங்களை வாங்குவதற்கு சுங்க வரி நீக்கப்பட்ட அனுமதிப் பத்திரங்களை பெற்றுக்கொடுப்பதன் மூலம் நாட்டுக்கு சுமார் ஆயிரம் மில்லியன் ரூபாவுக்கு மேல் நட்டம் ஏற்படுவதாக மனுதாரர் தெரிவித்தார்.

நாடு பெரும் பொருளாதார இக்கட்டைச் சந்தித்துள்ள நிலையில், இவ்வாறான திட்டங்களை நடைமுறைப்படுத்துவதை அனுமதிக்க முடியாதென்றும் மனுவில் அவர் குறிப்பிட்டார்.

எனவே இந்த வாகன அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக்கொடுக்கும் தீர்மானத்தை நீக்கும் உத்தரவைப் பிறப்பிக்குமாறு மனு மூலம் வேண்டுகோள் விடுத்தார்.

(வ-5)


## மரண அறிவித்தல்

**சின்னத்தம்பி பாலசுப்பிரமணியம்**

(ஓய்வு பெற்ற உபஅதிபர்-ஆனைக்கோட்டை R.C.T.M.S)



அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் இல.56, அரசடி வீதி, வண்ணார்பண்ணை யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி பாலசுப்பிரமணியம் நேற்று (24.06. 2016) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மலாயன் பென்சனியர் சின்னத்தம்பி மற்றும் அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற ராதாராணியின் (ஆசிரியை) அன்புக் கணவரும், காலஞ்சென்ற கந்தசாமி-தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் வித்தியாசினியின் அன்புத் தந்தையும் நாவேந்தன் (மின் அத்தியட்சகர்-சுன்னாகம்) அவர்களின் அன்பு மாமனும் காலஞ்சென்றவர்களான மனோன்மணி (ஆசிரியை), சரஸ்வதி (மருந்தாளர்) மற்றும் Dr.பேரின்பநாயகம் (பிரதேச வைத்தியசாலை பண்டத்தரிப்பு), பரஞ்சோதி ஆகியோரின் அன்புச் சகோதரனும் தர் ஷனா, திலோஜன் ஆகியோரின் அன்புப் பேரனும் மகேஸ்வரி (ஓய்வு பெற்ற மருந்தாளர்-யா/ போதனா வைத்தியசாலை), மனோரஞ்சிதம் (ஓய்வு பெற்ற சுருக்கெழுத்தாளர்-வவுனியா நீதிமன்றம்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.06.2016) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

56, அரசடி வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்: நாவேந்தன் (மருமகன்)
வித்தியாசினி (மகள்)
021 222 0035


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக் குழு சென்றதாலேயே பதவியைத் துறக்கிறார் கமரூன்

## மகிந்த அணி சாடல்

கொழும்பு, ஜூன் 25
ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரிட்டன் வெளியேறக் கூடாது எனப் பரப்புரை மேற் கொள்வதற்காக இலங்கை அரசு அமைச்சர்கள் மட்டத்திலான குழுவொன்றை அனுப் பியிருந்தது. அந்த முயற்சி தோல்வியடைந்து டேவிட் கமரூன் தனது பதவியை விட்டு விலகும் நிலை உருவாகியுள்ளது. இவ்வாறு தெரிவித்தார் மகிந்த ஆதரவு அணி நாடாளுமன்ற உறுப்பினரான தினேஷ் குண வர்தன.

இதனால், அவருக்கும் பிரதி வெளிவிவகார அமைச்சருக்குமிடையில் சபையில் நேற்று கடும் சொற்போர் இடம்பெற்றது.

நாடாளுமன்றத்தில் தகவல் அறியும் சட்ட வரைவு மீதான விவாதம் நேற்று நடைபெற்றது. இதன்போது மேற்படி சர்ச்சை உருவாகியது.

தனது உரையின்போது தினேஷ் குணவர்தன, ஐரோப்பிய ஒன்றியத்தில் பிரிட்டன் நீடிக்க வேண்டும். இதற்காக அந்தநாட்டு பிரதமர் டேவிட் கமரூனுக்கு ஆதரவாக பரப்புரை மேற் கொள்வதற்கு அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ, பிரதி அமைச்சர் ஹர்ச டி சில்வா, ரோஸி சேனாநாயக்க ஆகியோர் அடங்கிய குழுவை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க களமிறக்கியிருந்தார்.

ஐரோப்பிய ஒன்றியத்தில் பிரிட்டன் நீடிக்க வேண்டுமென இலங்கைக் குழு பரப்புரை செய்தாலும், அந்த நாட்டு மக்கள் அதற்கு மாறாக வாக்களித்தனர். அதாவது, பொருளாதார நிலைவ்ரத்தைக் கருத்திற் கொண்டு பிரிட்டன் வெளியேற வேண்டும் என வாக்களித்தனர்.

பரப்புரைக்காக இலண்டன் சென்ற இலங்கைக் குழுவினரால், பிரதமர் டேவிட் கமரூன் அசௌகரியத்திற்கு உள்ளாகியுள்ளார். பதவி விலகப் போவதாகவும் அறிவிப்பு விடுத்துள்ளார், என்று சுட்டிக்காட்டினார்.

தனது உரையைத் தொடர்ந்த பிரதி வெளி விவகார அமைச்சரும் பொருளியல் நிபுணருமான கலாநிதி ஹர்ச டி சில்வா, நாம் லண்டன் சென் றோம். அங்குள்ள இலங்கையர்களுடன் பேச்சு நடத்தினோம். பிரிட்டனில் என்ன நடந்தாலும் எமக்கென்ன? என்ற மனோநிலையில் கிணற்றுத் தவளை போல் எமக்கு இருக்க முடியாது – என்றார். (வ-5)

## 100 பயனாளிகளுக்கு உதவித் திட்டங்கள்

முல்லைத்தீவு, ஜூன் 25
ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையத்தால் 100 பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவியாக தலா ஒரு இலட்சம் பெறுமதியான உதவித்திட்டங்கள் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வு ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையத்தில் நேற்றுக் காலை இடம் பெற்றது.

கிணறு அமைத்தல், கிணறு திருத்தம் செய்தல், நீரிறைக்கும் இயந்திரம் மற்றும் சூழல் நீர்ப் பாசனத் தொகுதி என்பன வழங்கப்படவுள்ளன.

விவசாயிகள் விவசாயத்தில் சாதனை படைப்பது தொடர்பாக விவசாயிகளுக்கான விழிப் புணர்வுக் கலந்துரையாடல் ஒன்றும் நேற்று ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையத்தில், முல்லைத்தீவு மாவட்ட உதவி கமநல சேவை ஆணையாளரால் நடத்தப்பட்டது. (ஐ-ரி7)

## அனுமதி அட்டை கிடைக்காதோரும் இன்றைய பரீட்சைக்கு தோற்ற முடியும்

யாழ்ப்பாணம்,ஜீன்.25
ஆரம்ப மற்றும் அடிப்படைச் சிங்கள மொழிப் பாட நெறிகளுக்கான இறுதிப் பரீட்சைகளுக்கு தோற்றவுள்ள பரீட் சார்த்திகளில் இதுவரை அனுமதி அட்டைக்ளை கிடைக் காதோரும் தோற்ற முடியும்.

இவ்வாறு யாழ் பிராந்திய நிலைய உதவிப் பணிப் பாளர் தெரிவித் தார்.

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் மொழிக் கற்கைகள் துறையினால் 2014/15 கல்வியாண்டில் மேற்படி கற்கை நெறி நடத்தப்பட்டது. இதற்கான பரீட்சைகள் இன்று 25 ஆம் திகதி சனிக்கிழமையும் மறுநாள் 26 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமையும் திறந்த பல்கலைக்கழக யாழ் பிராந்திய நிலையத்தில் இடம்பெறவுள்ளன. (ற-ரி2)

## பரிசளிப்பு விழா இன்று

உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரியின் பிரதான மண் டபத்தில் நடைபெறவுள்ளது. கல்லூரி அதிபர் எஸ். கிருஸ்ணகுமார் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்விற்கு, பிரதம விருந்தினராக கரவெட்டி பிரதேச செயலாளர் எஸ். சிவஸ்ரீ கலந்து கொள்ளவுள்ளார். (422)

## விபத்தில் முதியவர் படுகாயம்

மோட்டார் சைக்கிள் – டிப்பர் வாகனம் விபத்துக் குள்ளானதில், மோட்டார் சைக்கிளில் சென்ற முதியவர், படுகாயமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு முன்பாக இடம்பெற்றது.

சாவகச்சேரி சந்தைக்குச் சென்று விட்டு, மோட்டார் சைக்கிளில் வீடு திரும்பிய, மீசாலை ஐயா கடையடியைச் சேர்ந்த 73 வயது முதியவரை, டிப்பர் வாகனம் மோதியுள்ளது. இதனால் கீழே வீழ்ந்த முதியவரின் காலின் மீது வாகனச் சில்லு ஏறியதாகவும் சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர்.

இதன்போது படுகாயமடைந்த முதியவர் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

இதேவேளை எழுதுமட்டுவாழ் பகுதியில் நேற்று முன்தினம்இரவு லொறியுடன், மோட்டார் சைக்கிள் மோதியதில் அதே இடத்தைச் சேர்ந்த 22 வயது இளைஞன் காயங்களுக்கு இலக் கா னார். இவர் யாழ். போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டார். (வ-ஐ-9)


## மரண அறிவித்தல்

### குமாரு துரைச்சாமி

பிறப்பு
27 . 09 . 1939



இறப்பு
24 . 06 . 2016

கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும், மிருசுவில் வடக்கை வசிப்பிடமாகவும், தற்போது கொடிகாமம் மத்தி J/ 327 ஐ தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட குமாரு துரைச்சாமி நேற்று (24.06.2016) வெள்ளிக்கிழமை அதிகாலை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பவளம்மாவின் அன்புக் கணவரும், சிவலோகநாதன் (ஜேர்மனி), ஸ்ரீ ரஞ்சினிதேவி (இலங்கை), ஸ்ரீ சிவாஜினிதேவி (லண்டன்), சிவரஞ்சன் (பிரான்ஸ்), ஸ்ரீகுமுதினி தேவி (இலங்கை), சிவரூபன் (இலங்கை) ஆகியோரின் அன்புத் தந்தையும், வசந்தி (ஜேர்மனி), வதனன் (பனை அபிவிருத்திச்சபை - யாழ்ப்பாணம்), கணேசலிங்கம் (லண்டன்), புவிகரன் (இலங்கை), லலிதா (இலங்கை) ஆகியோரின் அன்பு மாமனாரும், அனோஜன், அஜந்தன், ரஷ்மி, ரஜவின், ராகவி, இசையழகன் (கண்ணன்), இசைப்பிரியன் (கர்ணன்), பவிஜன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.06.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் கொடிகாமம் மத்தியிலுள்ள மகள் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மிருசுவில் வடக்கு, மிருசுவில் பெரியான் ஓடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முதலாம் ஒழுங்கை,
கச்சாய் வீதி, கொடிகாமம்.

(11,17)

தகவல்:
குடும்பத்தினர்.

## பணிப்பெண் தேவை

சிறிய குடும்பம் ஒன்றிற்கு வீட்டில் தங்கி யிருந்து வேலை செய்வதற்கு பணிப்பெண் ஒருவர் தேவை.

077 2626944,077 2987506

## விற்பனைக்கு உண்டு

இடித்த வீடு கல், மண் விற்பனைக்கு உண்டு.

077 242 5163

## தவறிவிட்டது

இராஜமனோகரன் சஜீவ் ஆகிய எனது 912152723V இலக்கமுடைய தே.அ.அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம் அடங்கிய பேர்ஸ் இணுவிலுக்கும் மானிப்பாய்க்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.

077 511 0805

## றிமோட் தவறிவிட்டது

Suzuki கார் தன்னியக்கி கட்டுப் பாட்டுக்கருவி (றிமோட்) 22.06.2016 யாழ் நகரில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.

(J/2408)(17,19)

தொடர்பு : 076 644 6012

## விற்பனைக்கு

Nelfarms முட்டை குஞ்சுகள் (சிவப்பு)
Gini raj கலப்பின குஞ்சுகள்
ஊர் கோழிக் குஞ்சுகள்
தனி கழுத்துவெட்டி குஞ்சுகள்
தனி கறுப்பு ஊர் கோழிக்குஞ்சுகள்
முற்பதிவுடன் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

077 837 6620

## பிரதேச வைத்தியசாலை அச்சுவேலி நோயாளர் நலன்புரிசங்க பொதுக்கூட்டம்

காலம் : 09.07.2016 சனிக்கிழமை நேரம் : பிற்பகல் 3.00 மணி
விடயம் : புதிய நிர்வாக சபை உறுப்பினர்களை தெரிவு செய்தல்

உறுப்பினர்கள் யாவரும் அங்கத்துவ பணத்தினை செலுத்துவதுடன் புதிய உறுப்பினர்களும் அன்றையதினம் மதியம் 12.00 மணிவரை பணம் செலுத்தி சேர்ந்து கொள்ளலாம். மேலதிக விவரங்களை வைத்தியசாலை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

திரு.இரத்தினம் தனுசன்
செயலாளர்,
நோயாளர் நலன்புரிசங்கம் , பிரதேச வைத்தியசாலை அச்சுவேலி.

## பொது அறிவித்தல்

### சாவகச்சேரி நகராட்சி மன்றம்
### காணி கொள்வனவு

சாவகச்சேரி நகராட்சி மன்ற எல்லைக்குட்பட்ட 9ம் வட்டாரத்தில் சந்தையை அண்மிக்கும் வீதியில் (நகராட்சி மன்ற அலுவலகத்திற்கு முன்பாக) அமைந்துள்ள 4, 16 என்னும் ஆதன இலக்கங்கள் கொண்ட திருமதி. ஜெயபாலசிங்கம் திரவியகுமாரி அவர்களுக்குச் சொந்தமான 2 நிலப்பரப்பு 10 குளி அளவுடைய காணியை அலுவலகத் தேவையின் பொருட்டு கொள்வனவு செய்வதென சாவகச்சேரி நகராட்சி மன்றத்தினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான ஆட்சேபனைகள் இருப்பின் பிரசுரத் திகதியிலிருந்து பதிநான்கு (14) நாட்களுக்குள் எழுத்து மூலம் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

நகராட்சிமன்ற அலுவலகம்,
சாவகச்சேரி.
24.06.2016

செயலாளர்,
நகராட்சி மன்றம்,
சாவகச்சேரி.

## விழிநீர் சொரிகின்றோம்



எமது கல்லூரியின் புவியியல் ஆசிரியர் **மா.நேரு** அவர்களது அன்புத் தந்தையார் **வே.மார்க்கண்டு** அவர்களது மரணச்செய்தி கேட்டு துயரடைந்துள்ளோம். அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம், மானிப்பாய் இந்துக் கல்லூரி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், ஜூன் 25
கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலையின் வருடாந்த விளையாட்டு விழா, கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் தலைமை விருந்தினராக யாழ். பல்கலைக் கழக விரிவுரையாளர் கலாநிதி கேதீஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார். (ம-422)

## டயமன்ஸ் அணி அரையிறுதியில்

யாழ்ப்பாணம், ஜூன் 25
இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற காலிறுதி ஆட்டமொன்றில் டயமன்ஸ் அணி வெற்றிபெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.
இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி மைதானத்தில் இரவு 7.30 மணிக்கு இடம்பெற்ற காலிறுதியாட்டத்தில் வதிரி டயமன்ஸ் அணியை எதிர்த்து பலாலி விண்மீன் அணி மோதியது. இதில் வதிரி டயமன்ஸ் அணி 5:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதி ஆட்டத்துக்குத் தகுதி பெற்றது. (ம-23)




## இலங்கை அணி மீதான தாக்குதல்; கைதானோர் பிணையில் விடுவிப்பு!

பாகிஸ்தானில் கடந்த 2009ஆம் ஆண்டு சுற்றுப் பயணம் மேற்கொண்ட இலங்கை அணி மீது தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவத்தில், கைது செய்யப்பட்ட 6 சந்தேகநபர்களில் மூவரை அந்த நாட்டு நீதிமன்றம் பிணையில் விடுவித்தது.
பாகிஸ்தானுக்கு கடந்த 2009ஆம் ஆண்டு சுற்றுப் பயணம் மேற்கொண்ட இலங்கை அணி மீது சிலர் துப்பாக்கியால் சுட்டனர். இதில் இலங்கை அணி வீரர்கள் காயமடைந்ததுடன், பாதுகாப்பு பணியில் ஈடுபட்ட 6 பொலிஸார் கொல்லப்பட்டனர். சம்பவம் தொடர்பாக ஆறு பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களில் மொலின் ரசீட் மற்றும் அப்துல் ரகுமான் என்ற இருவரை குற்றவாளிகள் என பாகிஸ்தான் நீதிமன்றம் ஏற்கனவே அறிவித்திருந்தது. ஏனைய நால்வரில் மூவர் நேற்றுமுன்தினம் பிணையில் விடுவிக்கப்பட்டனர். மீதமுள்ள மூவரிடம் தொடர்ந்து விசாரணை நடத்துமாறும், அரசு தரப்பு சாட்சியங்களை எதிர்வரும் ஜூலை 30ஆம் திகதி நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்துமாறும் உத்தரவிடப்பட்டது. (ம)

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 25
**திருமகள் வி.க. தொடர்**
அராலி திருமகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று சனிக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் உடுப்பிட்டி யுத் அணியை எதிர்த்து நவாலி சென். பீற்றர்ஸ் அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் இளவாலை யங்ஹென்றிஸ் அணியை எதிர்த்து நவிண்டில் கலைமதி அணி மோதவுள்ளது.
**எவரெஸ்ட் வி.க. தொடர்**
புத்தூர் எவரெஸ்ட் விளையாட்டுக் கழகம் நடத்தும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் புத்தூர் எவரெஸ்ட் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில், மன்னார் கில்லறி அணியை எதிர்த்து சமரபாகு நியூட்டன் அணி மோதவுள்ளது. மாலை 4.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் இளவாலை சென். லூட்ஸ் அணியை எதிர்த்து கம்பர்மலை யங்கம்பன்ஸ் அணி மோதவுள்ளது.
**சரஸ்வதியின் தொடர்**
அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 97ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் இளவாலை யங்ஹென்றிஸ் அணியை எதிர்த்து வீனஸ் அணி மோதவுள்ளது.
**யாழ். மாவட்ட தாச்சித் தொடர்**
யாழ். மாவட்ட தாச்சிச் சங்கம் நடத்தும் தொடரின் ஆட்டங்கள் அரியாலை காந்தி சனசமூக நிலைய மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று மாலை 6.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கைதடி வளர்மதி அணியை எதிர்த்து இருபாலை விக்கினேஸ்வரா அணி மோதவுள்ளது. இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பண்டத்தரிப்பு அறிவொளி அணியை எதிர்த்து மயிலிட்டி கண்ணகி அணி மோதவுள்ளது. (ம-23)



## ஆர்ஜென்ரீனா - சிலி மீண்டும் இறுதியில்

அமெரிக்காவில் நடைபெற்று வரும் கோப்பா அமெரிக்காத் தொடரில் சிலி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளது. ஆர்ஜென்ரீனா ஏற்கனவே இறுதிக்குத்தகுதி பெற்றுவிட்ட நிலையில், சிலியும் ஆர்ஜென்ரீனாவும் கிண்ணத்துக்காக மல்லுக்கட்டவுள்ளன.
நேற்று நடைபெற்ற இரண்டாவது அரையிறுதியில் சிலி, கொலம்பியா அணிகள் பலப்பரீட்சை நடத்தின. சாள்ஸ், ஆட்டத்தின் 7ஆவது நிமிடத்திலும், புன்சலிடா 12ஆவது நிமிடத்திலும் கோல்களைப் பதிவு செய்ய, பதினம நிமிடங்கள் முடிவதற்கு முன்னர் 2:0 என்று முன்னிலை வகித்தது சிலி. வேறெந்த கோல்களும் பதிவாகாமல் முடிந்தது முதல் பாதி. முதல் பாதி முடிந்த பிற்பாடு, கடும் மின்னலுடன் மழை பொழிந்தமையால் கிட்டத்தட்ட இரண்டு மணி நேரத்துக்கு இரண்டாம் பாதி பிற்போடப்பட்டது.
சிலியின் ஆதிக்கத்துடன் இரண்டாம் பாதி தொடர்ந்தது. நீருடன் சேர்ந்த ஈரமான மைதானத்தில் இரு அணியின் வீரர்களும் மிகவும் சிரமப்பட்டனர். தாக்கு ஆட்டத்தை வெளிப்படுத்த வேண்டிய அதேநேரம் தற்காப்பு முயற்சியையும் கொலம்பியா கையாள வேண்டியிருந்தது. அதற்கேற்ற நிலையில் மைதானம் இருக்கவில்லை. பந்துப் பரிமாற்றத்தை துல்லியமாக மேற்கொள்ளவே படாதபாடுபட்டனர். ஒரு முனையில் நிமிடங்கள் உருண்டோட மறுமுனையில் சிலியின் வெற்றி உறுதியாகிக் கொண்டிருந்தது. அதிசயங்கள் நிகழவில்லை. இறுதியில் சிலி வென்றது.
எதிர்வரும்திங்கட்கிழமை இலங்கை நேரப்படி அதிகாலை 5.30 மணிக்கு இடம்பெறவுள்ள இறுதியாட்டத்தில் சிலி, ஆர்ஜென்ரீனா பலப்பரீட்சை நடத்தவுள்ளன. கடந்த வருடம் நடைபெற்ற கோபா அமெரிக்காத் தொடரிலும் சிலி, ஆர்ஜென்ரீனா அணிகளே இறுதிக்குத் தகுதி பெற்றிருந்தன. சமநிலைத் தவிர்ப்பு உதைகள் வரை சென்ற இந்த ஆட்டத்தில் 4:1 என்ற கோல் கணக்கில் சிலி சம்பியனாகியிருந்தது. (ம)

## விதிமுறைகளுக்கு முரணாக தெரிவானார் அனில் கும்ளே

இந்திய கிரிக்கெட் அணியின் பயிற்சியாளராக அந்த அணியின் முன்னாள் தலைவர் அனில் கும்ளே தெரிவு செய்யப்பட்டார்.



இமாச்சலப் பிரதேசமான தர்மசாலாவில் நேற்றுமுன்தினம் கூடிய கங்குலி, லக்ஷ்மன், சச்சின் ஆகியோரைக் கொண்ட தலைமைத் தெரிவுக் குழுவும், இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையின் வேறு சில நிர்வாகிகளும் இணைந்து கும்ளேவைத் தெரிவுசெய்துள்ளனர். இருப்பினும் இது விதிமுறைகளுக்கு முரணான தெரிவாக அமைந்துள்ளதாகக் கருதப்படுகிறது.
இந்திய கிரிக்கெட் அணியின் பயிற்சியாளராவதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டபோது, விண்ணப்பிக்கும் நபர், தேசிய அணிக்கோ அல்லது 'ஏ' அணி ஒன்றுக்கோ ஏற்கனவே பயிற்சியாளராகச் செயற்பட்டமைக்கான அனுபவம் இருக்கவேண்டும் என்பது கட்டாயமாக்கப்பட்டது. கும்ளேக்கு அந்த அனுபவம் இல்லை. விண்ணப்பித்த 58 நபர்களில் இருந்து இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை பரிந்துரைத்த 21 நபர்கள் கொண்ட விவரத்தில் கும்ளேயின் பெயர் இடம்பெற்றதே பெரிய விடயமாகக் கருதப்பட்ட நிலையில், தற்போது பயிற்சியாளராகவும் அவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார். (ம)

## செந்தமிழ், இளம்பறவை அணிகளுக்கு வெற்றி

முல்லைத்தீவு வித்தியா விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் செந்தமிழ், இளம்பறவை அணிகள் வெற்றிபெற்றுள்ளன.
முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியின் முன்னாள் அதிபர் தவராஜா ஞாபகார்த்த கிண்ணத்துக்காக அமைக்கப்பட்டுள்ள இந்தத் தொடர் முன்னெடுக்கப்பட்டுவரும் விலகல் முறையிலான இந்தத் தொடரின் ஆட்டங்கள் முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் அளம்பில் இளந்தென்றல் அணியை எதிர்த்து வற்றாப்பளை செந்தமிழ் அணி மோதியது. இதில் வற்றாப்பளை செந்தமிழ் அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.
தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் சுப்பர்ஸ்ரார் அணியை எதிர்த்து சிலாவத்தை இளம்பறவை அணி மோதியது. இரண்டு அணியினரும் நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் முடிவில் தலா ஓர் கோலைப் பெற்றதினால் சமநிலைத் தவிர்ப்பில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. முடிவில் இளம்பறவை அணி 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மேரிஸ் முன்னேற்றம்

கரணவாய், ஜூன் 25

கழுகுகளின் கால்பந்தாட்டத் தொடரில் ஜெகமீட்பரை வீழ்த்தி அடுத்த சுற்றுக்கு முன்னேறியது நாவாந்துறை சென். மேரிஸ் அணி.

கழுகுகள் விளையாட்டுக் கழக மைதானத்தில் தொடர் நடைபெற்று வருகிறது. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் மன்னார் வலப்பாடு ஜெகமீட்பர் அணியும், நாவாந்துறை சென். மேரிஸ் அணியும் மோதின. நீண்ட போராட்டத்தின் மத்தியில் 28 ஆவது நிமிடத்தில் ஜெகமீட்பர் அணியின் சார்பாக ஜெயபிரகாஸ் முதலாவது கோலைப் பதிவுசெய்தார். ஆனால் அடுத்த இரு நிமிடத்தில் ஜக்சனின் மூலம் பதிலடி கொடுத்தது மேரிஸ். வேறெந்த மாற்றமும் இல்லாமல் முடிந்தது முதல் பாதி.

இரண்டாம் பாதியின் 57ஆவது நிமிடத்தில் சென். மேரிஸ் அணியின் நிதர்சன் கோலொன்றைப் பதிவுசெய்ய அந்த அணி ஆதிக்கம் செலுத்த ஆரம்பித்தது. இந்த ஆதிக்கம் 5 நிமிடங்கள் மட்டுமே நீடித்தது. 63ஆவது நிமிடத்தில் ஜெகமீட்பர் தனது இரண்டாவது கோலைப் பதிவுசெய்தது. எதிர்பாராதவிதமாக 67ஆவது, 82 ஆவது, 87ஆவது நிமிடங்களில் முறையே சென். மேரிஸின் யூட், நிதர்சன், மது ஆகியோர் கோல்களைப் பதிவுசெய்ய முடிவில் 5:2 என்ற கோல் கணக்கில் ஜெகமீட்பரை வீழ்த்தியது சென். மேரிஸ். (ம-108)



ஜெகமீட்பரின் வாய்ப்பைத் தடுக்கும் சென். மேரிஸ் கோல்காப்பாளர்.



## பிரதேச செயலகங்களின் மெய்வன்மையில் கனவான் தன்மையுள்ள அணியாக நல்லூர்

கரணவாய், ஜூன் 25

பிரதேச செயலகங்களுக்கு இடையிலான மெய்வன்மைப் போட்டிகளில் கனவான் தன்மையுள்ள அணியாக நல்லூர் அறிவிக்கப்பட்டது. நன்னடத்தை மற்றும் பங்குபற்றல் ஆகியவற்றின் அடிப்படையிலேயே இந்த விருது அறிவிக்கப்பட்டது.

பிரதேச செயலகங்களுக்கு இடையிலான மெய்வன்மைப் போட்டிகளின் இறுதிநாள் நிகழ்வு நெடுந்தீவு மகா வித்தியாலய மைதானத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. விளையாட்டில் கனவான் தன்மையைக் கட்டியெழுப்புவதற்காக நடப்பு வருடத்திலேயே இந்த விருது முதன்முறையாக அறிவிக்கப்பட்டது. ஒட்டுமொத்தமாக ஆயிரத்து 236 புள்ளிகளைப்பெற்று, யாழ். மாவட்டத்தில் கனவான் தன்மையுள்ள அணியாக நல்லூர் தெரிவானது. பருத்தித்துறை பிரதேச செயலக அணி ஆயிரத்து 175 புள்ளிகளைப் பெற்று இரண்டாவது இடத்தையும், தெல்லிப்பழை பிரதேச செயலக அணி ஆயிரத்து 164 புள்ளிகளைப் பெற்று மூன்றாவது இடத்தையும் தமதாக்கின. உடுவில் பிரதேச செயலக அணி ஆயிரத்து 152 புள்ளிகளுடன் நான்காவது இடத்தையும், யாழ். பிரதேச செயலக அணி ஆயிரத்து 11 புள்ளிகளுடன் ஐந்தாவது இடத்திலும் உள்ளன. ஆறு முதல் பத்து வரையான இடங்களுக்குள் முறையே கரவெட்டி, சங்கானை, சண்டிலிப்பாய், கோப்பாய், சாவகச்சேரி ஆகிய அணிகள் உள்ளன. (ம-108)

## விளைபூமியின் கால்பந்தாட்டம்

முரசுமோட்டை விளைபுமி விளையாட்டுக் கழகம் நடத்தத் திட்டமிட்ட கால்பந்தாட்டத் தொடர் இன்று முதல் ஆரம்பமாகிறது. அடுத்த மாதம் 3ஆம் திகதி வரை நடைபெறவுள்ள இந்தத் தொடரில், கிளிநொச்சி மாவட்டத்தில் பதிவுசெய்துள்ள அனைத்துக் கழகங்களும் பங்குபற்றுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

## நிர்வாகத் தெரிவு

முல்லைத்தீவு கால்பந்தாட்ட லீக்கின் பொதுக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு முல்லைத்தீவு கோவில்குடியிருப்பு பொது நோக்கு மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.(ம-23)

## வென்றது லூட்ஸ்

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தினால் நடத்தப்பட்டு வரும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் சென். லூட்ஸ் அணி வெற்றிபெற்றது.

அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் மாலை 4.30 மணிக்கு இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் சென். லூட்ஸ் அணியை எதிர்த்து மணற்காடு சென். அன்ரனிஸ் அணி மோதியது. இதில் சென். லூட்ஸ் அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

## வேம்படி - உடுவில் மகளிர் இறுதியில் மோதத் தகுதி

யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் நடத்தும் இளையோருக்கான கூடைப்பந்தாட்டத் தொடரில் 13 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, உடுவில் மகளிர் கல்லூரி அணிகள் இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளன.

யாழ். வேம்படி மகளிர் உயர்தர பாடசாலையின் கூடைப்பந்தாட்டத் திடலில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது அரையிறுதியாட்டத்தில் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை அணியை எதிர்த்து யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை அணி மோதியது. இதில் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை அணி 18:8 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது. இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் யாழ். இந்து மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து உடுவில் மகளிர் கல்லூரி மோதியது. இதில் உடுவில் மகளிர் கல்லூரி அணி 20:6 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. (ம-23)

## ஏஞ்சல் இறுதியில்

யாழ்ப்பாணம், ஜூன் 25

யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கம் நடத்தும் இளையோருக்கான கூடைப்பந்தாட்டத் தொடரில் 13 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் மானிப்பாய் ஏஞ்சல் இறுதிக்குத் தகுதி பெற்றது.

யாழ். மத்திய கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த அரையிறுதியாட்டத்தில் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை அணியை எதிர்த்து சென். ஜோன்ஸ் கல்லூரி அணி மோதியது. இதில் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை அணி 38:8 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. (ம-23)



சென். அன்ரனிஸ் அணி

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான 19 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான உதைப்பந்தாட்டப் போட்டி யாழ். மத்திய கல்லூரியில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதில் ஊர்காவற்றுறை சென். அன்ரனிஸ் கல்லூரி அணி தங்கம் வென்றது. வெள்ளிப்பதக்கத்தை இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி அணியும், வெண்கலப்பதக்கத்தை பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலய அணியும் பெற்றன. (ம-23-422)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## றொனால்டோ வரலாற்றுச் சாதனை

தொடர்ச்சியாக நான்கு யூரோ கிண்ணத் தொடர்களில் கோல்களைப் பதிவுசெய்த முதல் வீரர் என்ற வரலாற்றுச் சாதனையைப் படைத்துள்ளார் போர்த்துக்கல்லின் தலைவரான கிறிஸ்டியானோ றொனால்டோ.

றொனால்டோ, 2004ஆம் ஆண்டு நடைபெற்ற தொடரில் இரண்டு கோல்களையும், 2008ஆம் ஆண்டில் ஒரு கோலையும், 2012ஆம் ஆண்டில் மூன்று கோல்களையும், நடப்பு வருடத்தில் இதுவரை இரு கோல்களையும் பதிவுசெய்துள்ளார். (ம)

# கொழும்பில் நேற்றுக் கோல் மழை பீற்றர்ஸை பந்தாடியது பற்றிக்ஸ்

யாழ்ப்பாணம், ஜூன் 25

இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தால் நடத்தப்பட்டுவரும் கொத்மலை சொக்ஸ் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டமொன்றில் சென். பற்றிக்ஸ் அபார வெற்றிபெற்றுள்ளது.

கொழும்பு சென். பீற்றர்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் சென். பீற்றர்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து பற்றிக்ஸ் பலப்பரீட்சை நடத்தியது. ஆட்டத்தின் எட்டாவது நிமிடத்தில் அன்ரு முதல் கோலைப் பதிவுசெய்து சென். பற்றிக்ஸை முன்னிலை பெறச் செய்தார்;. 25 ஆவது நிமிடத்தில் கெய்ன்ஸ் இரண்டாவது கோலைப் பதிவுசெய்ய பீற்றர்ஸுக்கு அடிமேல் அடியாக வீழ்ந்தது. 35 ஆவது நிமிடத்தில் பதிலடி கொடுத்தது பீற்றர்ஸ். 2:1 என்ற சென். பற்றிக்ஸின் ஆதிக்கத்துடன் முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியில் சென். பற்றிக்ஸ் ஏக ஆதிக்கம் செலுத்தியது. பற்றிக்ஸின் பந்துப்பரிமாற்றங்களுக்கு பீற்றர்ஸால் ஈடுகொடுக்க முடியவில்லை. அபிசன் 12ஆவது நிமிடத்திலும், கெய்ன்ஸ் 20 ஆவது நிமிடத்திலும், சாந்தன் 25 ஆவது மற்றும் 28 ஆவது நிமிடங்களிலும் கோல்களைப் பதிவு செய்ய சென். பீற்றர்ஸின் சொந்த மைதானத்தில் வைத்து அந்த அணியை 6:1 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியது சென். பற்றிக்ஸ். (ம-23)



இல்லற பூங்காவில் இணைந்த
25ஆம் ஆண்டு நினைவில்
இனிமையாய் வாழ
வாழ்த்துகின்றோம்



அன்பிலே நனைந்து
ஆண்டவனில் இணைந்து
இல்லறமாம் நல்லறத்தை
ஈடு இணையின்றி வாழ்ந்து
உறவும் போற்ற
ஊரும் வாழ்த்த
எண்ணிய கருமம் எல்லாம்
ஏற்றமாய் உயர்ந்துவிட
ஐயைந்து வருடங்கள்
ஒன்று பட்டு வாழ்ந்து விட்ட
ஓருயிர் தம்பதிகாள். யாவருக்கும்
ஔடதமாய் இருந்து
அகிலத்தை அணிசெய்வீர் - உம்
ஆயுள் உள்ள காலம் வரை

Best Wishes

அண்ணன் அண்ணியை
மனம் மகிழ்ந்து வாழ்த்தும்
தம்பிமார், தங்கைமார் (குடும்பத்தினர்)

British College of Higher Studies
BCHS
வழங்கும் சர்வதேச கற்கை நெறிகள்

Settlement Visa மூலமாக UK செல்பவர்களுக்கான
IELTS Life Skills
வடக்கு மாகாணத்திலேயே அதிகப்படியான மாணவர்களை பயிற்றுவித்து பரீட்சையிலே அனைவரையும் வெற்றிபெறச் செய்யும் ஒரேயொரு நிறுவனம்.
100% பயிற்சி → 100% வெற்றி

Student, Migration Visa மூலமாக UK செல்பவர்களுக்கான
IELTS (Academic / General)
ஆரம்பத்தில் பயில சிரமப்படுவர்களுக்கு பிரத்தியேக வகுப்புகள் மூலமாக கூடுதல் பயிற்சிகள் வழங்கப்படும்

புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன

No.15 , Sirambiyady Lane (Off Stanley Road), Jaffna.
(Above Sathosa SM & Near Ariyakulam Junction)
Tel : 021-2224550
Hotlines: 0777585913,0777222422, 077 0365728

## சம்பியன்ஸ் கிண்ணத்தின் எதிர்காலம் சந்தேகம்



சர்வதேச கிரிக்கெட் சபையின்சம்பியன்ஸ் கிண்ணத்தின் எதிர்காலம், மீண்டும் சந்தேகத்துக் குரியதாக மாறியுள்ளது.

ரி-20 உலகக் கிண்ணத் தொடரின் வருகைக்குப் பின்னர் சம்பியன்ஸ் கிண்ணத் தொடருக்கு மூடுவிழா நடத்துவது தொடர்பான பேச்சுக்கள் இடம்பெற்று வருகின்றன. 2013 ஆம் ஆண்டுடன் குறித்த தொடர் கைவிடப்படும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில் அந்தத் தொடருக்குக்கிடைத்த வர்த்தக வரவேற்பினால் தொடர்ந்து நடத்துவது என்று முடிவெடுக்கப்பட்டது. ஆனால் 13 அணிகளை உள்ளடக்கி 2019 ஆம் ஆண்டு முதல் ஒருநாள் லீக் தொடர் நடத்த திட்டமிடப்பட்டுள்ள நிலையில் அடுத்த வருடம் இங்கிலாந்தில் நடைபெறவுள்ள சம்பியன்ஸ் லீக் தொடர் இறுதித் தொடராக அமையும் என்று கருதப்படுகிறது. (ம)

மரண அறிவித்தல்

பிறப்பு 04 . 04 . 1950



இறப்பு 22 . 06 . 2016

திருமதி சறோஜினிதேவி குலேந்திரராஜா
(ஓய்வுபெற்ற கணித ஆசிரியை - சுன்னாகம் மயிலணி சைவவித்தியாலயம்)

ஏழாலை தெற்கு, சூராவத்தை சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சறோஜினிதேவி குலேந்திரராஜா 22.06.2016 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகலிங்கம் மற்றும் சிவபாக்கியம் தம்பதிகளின் அன்பு மகளும், சுந்தரம் குலேந்திரராஜாவின் (நில அளவையாளர்) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சுந்தரம் - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகளும், நிரோஷன் (பொறியியலாளர் - நியூசிலாந்து), சிந்துஜா (Ph.D. Student - USA ), கஜந்தன் (பொறியியலாளர் - சிங்கப்பூர்) ஆகியோரின் அன்புத் தாயாரும், பார்த்தீபன் (பொறியியலாளர் -USA ), ஜயரூபி (பொறியியலாளர் - நியூசிலாந்து) ஆகியோரின் அன்பு மாமியாரும், சந்திராதேவி - கமலநாதனின் (ஓய்வுபெற்ற உதவி நூலகர் - சுன்னாகம்) அன்புச் சகோதரியும், நாகேந்திரம், சுதேந்திரன் (ஓய்வுபெற்ற பொறியியலாளர்), தவமணி, தனமணி, கமலநாதன் (திட்ட ஆலோசகர்) ஆகியோரின் மைத்துனியும், மகேசன் (மருந்தக உரிமையாளர்), தர்மகுலசிங்கம் (ஓய்வுநிலை அதிபர்), திருமதி ஈஸ்வரி சுதேந்திரன் ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரியும், ஹரிண், மாதுளா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.06.2016) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10 மணியளவில் சுன்னாகம், கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஏழாலை தெற்கு,
சூராவத்தை, சுன்னாகம்.

தகவல்:
குடும்பத்தினர்.

021 224 0706, 077 363 8089

## யாழ்ப்பாணம் றோட்டறிக் கழகம் அறிவித்தல்

'ஹோப்' செயற்றிட்டத்தின் கீழ் செயற்கைக் கால்களைப் பெறுவதற்குப் பதிவு செய்து அளவுகள் எடுத்த பயனாளிகளில்21.06.2016 அன்று நடைபெற்ற நிகழ்வில் கால்களைப் பெற்றுக் கொள்ளாதவர்கள் நாளை (26.06.2016) ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிமுதல் 4.30 மணிவரை 359, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் (முன்னர் அளவுகள் பெறப்பட்ட இடம்) அமைந்துள்ள யாழ்ப்பாண றோட்டறிக்கழக செயலகத்தில் வந்து பெற்றுக் கொள்ளலாம்.

Rtn.சி. அனுராஜ்
தலைவர்

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 25.06.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org